Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் -16 வெள்ளி -23 29 - 04 - ஓகஸ்ட் - 2005





## உரத்து ஒலிக்கும் குரல்... வவுனியா பேராளர் மாநாடு



# படித்ததில் பிடித்தது

## எனக்குள் நிறைகின்றவளே!

என் உணர்வுகளில்
நீ நிறைந்து கொள்கிறாய்
காடுகளில் கவியும் இரவுகளும்
வசந்த காலத்து மலைகளும்
மழையில் நடக்கும் பொழுதுகளும்
பாலைவனத்துப் புயல்களும்
மெலிதாக அலை அடிக்கிற
நீல வண்ணக் கடல்களும்
தருகின்ற உணர்வாக
என் உணர்வுகளில்
நீ நிறைந்து கொள்கிறாய்
வா!
மீண்டும் என்னுள் நிறைந்து கொள்

வா!
உன்னை நேசிக்கவிடு
என்வாழ்வை உனக்கு தரவிடு
உன்சிரிப்புகளில் என்னை மூழ்கவிடு
உன்கரங்களிலேயே
என் உயிர் போகட்டும்
உன் அருகில் உடல் சாய்க்கவிடு
எப்போதுமே
உன்னோடு இருக்கவிடு
வா!

உன்னை நேசிக்கவிடு
வா!
மீண்டும் என்னை நேசி.

ஆங்கிலத்தில்:- ஜோண் டென்வர் அமெரிக்கா
தமிழில்:- வின்சென்ற் புவோறன்ஸ

## அட்டகாசம்

அலங்கோலங்களெல்லாம்
அலங்காரங்களாவதனால்
அநாகரிகங்களிங்கு
நாகரிகங்களாகின்றன.
உலகம்
ஒரு வீட்டுக்குள்
உள்வாங்கிக் கொண்டதனால்
கலகங்களிங்கு கலாசாரத்திற்குள்

மேலைத் தேயங்களின்
மேற்கோளான
ஊடுருவல்கள்
கீழைத் தேயத்தையிங்கு
கிறங்கடித்துக் கொண்டுள்ளன


கட்டுப்பாடுகளுக்கெல்லாம்
தட்டுப்பாடுகள் உள்ளதனால்
அனாசாரங்களேயிங்கு
அழகிய
கலாசாரங்களாகின்றன.

ஊர்கெட்டு பேர்கெட்டு
உள்ளதெல்லாம் தான் கெட்டு
சீர்கெட்டு போகுமிந்த
சிருங்கார நாகரிகம்
சிந்தையில் வந்திங்கு
யோசனையை தருகிறது.

இன்றைய தலைமுறைக்கே
இத்தனை அட்டகாசமெனில்
இனி நாளைய தலைமுறையென்ன
இதைவிட
பெரிய அட்டகாசமோ.

தமிழில்:-இ.றஜித்.
ஆங்கிலத்தில்:-பாத்திமா நஜீம்.



# தமிழ்மொழி பாடநூலில் மலிந்துகிடக்கும் தவறுகள்

அரசு வழங்கும் இலவச பாட நூல்களில் பொதுவாகவே சொல், பொருள், இலக்கண பிழைகள் மலிந்து காணப்படுவதாக விமர்சனங்கள் உண்டு. இதற்கிணங்க தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10,11 (கட்டாயமானது) பாடநூலில் இளையான் குடிமாறனார் புராணப் பாடலில் வந்துள்ள தவறை எடுத்துக் காட்டாகக் கூறமுடியும்.

"மாது கூறுவள் மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவாரில்லை
போதும் வைகிற்றுப்போம் இடம் வேறிலை
தீது செய்வினையேற் கென் செயல்" என்று

(பக்-24 பாடல்-12)

இப்பாடலில் வரும் 'வைகிற்று' எனும் சொல்லுக்கு அரும்பதம் உரையில் விடிந்து விட்டது எனப்பொருள் தரப்பட்டுள்ளதோடு, அதற்கமைவாகவே பொருள் உரையும் எழுதப்பட்டுள்ளது. இதன்படி பார்க்கையில் வீட்டில் பொருள் பண்டம் எதுவுமில்லை. அயலவர்களும் இனி தருவாரில்லை. பொழுதும் விடிந்து விட்டது. போகும் இடம் வேறில்லை.

எனப்பொருள் கொள்ளப் பட்டுள்ளது. மாறனாருடைய மனைவி பொழுது விடிந்து விட்டது அதனால் போகுமிடம் வேறு இல்லை என்கிறாள். பொழுது விடியாமல் இரவாக இருந்தால் எங்காவது பொருள்-பண்டம் தேடலாம் எனக் கூறுகிறார். என மறுதலையாக பொருள் உணர்த்தப்படுகிறது. மாறனாரும் மனைவியும் இரவில் திருட்டு முதலான தீயவழியில் பொருளீட்டி விருந்தோம்பல் செய்வது போலல்லவா தொனிக்கிறது.

ஆகவே வைகிற்று என்பதற்கு விடிந்து விட்டது எனப் பொருள் கொள்ளல் பொருந்தாது. அவ்வாறு கொள்ளின் கதையின் போக்கையே திசை மாற்றுவதாயும் சேறுபூசுவதாயும் அமைந்துவிடும்.

வைகல் என்பதற்கு தங்குகை, வைகறை, நாள்,கழிந்த நாள் வேளை எனப்பல பொருள் உண்டு. இதில் கழிந்த நாள் என்ற பொருளே இப்பாடலில் வரும் வைகிற்று எனும் சொல்லுக்கு பொருந்துவதாக உள்ளது. (பகற்) பொழுதும் கழிந்துவிட்டது. அதாவது இரவாகி விட்டது. இரவாகிவிட்டதால் போகும் இடம் இல்லை என பாடலுக்குப் பொருளுக்கு விளக்கம் தர முடியும். இதுவே கதைப் பொருள் மாறுபடாமல் முரண் படாமல் பொருள் கொள்வதாகவும் அமையும்.

இவ்வாறு வைகிற்று என்பதற்கு நாட்கழிதல் எனப் பொருள் கொள்வதற்குப் பதிலாக விடிந்து விட்டது எனக் கூறுதல் பொருந்தாது என்பதை உணர்ந்தோ என்னவோ இந்நூலின் ஐந்தாம் பதிப்பில் (2003) திருத்த முயன்று வேறு ஒரு தவறை விட்டுள்ளனர். இவ் வைந்தாம் பதிப்பில் அரும்பத உரையில்- வைகிற்று என்பதற்கு விடிந்து விட்டது என பொருள் கூறப்பட்டுள்ளது. அதேவேளை பொருளுரையில் போதும் வைகிற்று போகுமிடம் வேறில்லை-என்ற வரிக்கு நேரம் இரவாகி நெடுநேரமாகிற்று. இனி வெளியே சென்று பொருள் கேட்கக்கூடிய இடமேதுமில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இப்பாடலைக் கற்கும் ஒருவன் அரும்பத உரைப்படி வைகிற்று எனும் சொல்லுக்கு விடிந்து விட்டது என்றும் பொருள் உரைப்படி, இரவாகி விட்டது என்றும் முரணான பொருளையல்லவா கொள்ளவேண்டி நேரிடுகின்றது. இச்சொல்லுக்கான பொருள் கற்போனுக்கு பெரும் குழப்பத்தையும் மயக்கத்தையும் ஏற்படுத்துகிறது. இதனைக் கற்ற மாணவன் வைகிற்று எனும் சொல்லுக்கு வேறு ஏதோ சந்தர்ப்பத்தில் இரவாகிவிட்டது எனப்பொருள் கொண்டு எழுதத் தலைப்படலாம். இதனால் ஒரு சொல்லுக்கான பொருளை தவறாக விளங்கி பயன்படுத்துபவனாக இப்பாடநூல் அவனை மாற்றி விடுகின்றது. இது அவனது மொழியாட்சி, சொல்லாட்சியை பாதித்து விடும் அபாயம் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. நாட்கழிதல் எனப் பொருள் கொண்டு விளக்கம் தரப்பட்டிருந்தால் இம் மயக்கம்வர வாய்ப்பே இல்லை.




ஒரே வகுப்பில் கற்கும் மாணவர்களிடம் முதலாம், இரண்டாம் (1999, 2000) பதிப்புக்களும் திருத்தியமைக்கப்பட்டதாக கூறி மீண்டும் தவறுகள் நேர்ந்துள்ள ஐந்தாம் பதிப்பும் உள்ளது. இதனால் மாணவர்கள் தங்களுக்குள் குழம்பிக் கொள்ளும் நிலையே காணப்படுகிறது.

சில சமயங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களும் சற்று கவனக் குறைவாக இருந்தால், தானும் குழம்பவும் தவறானதையே கற்பித்துவிடும் நிலையும் தோன்றக் கூடும். வருங்கால சந்ததி தவறான மொழிப் பிரயோகத்திற்கு வழியை திறந்துவிடும் அல்லவா.

**தருமைவதனன்**

# போரை விரும்பும் அரசு



> தென்னிலங்கையின் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவரே அத்தகைய குழுவின் தளம் பொலநறுவையில் இருப்பதை படங்களோடு நேரடிச் சாட்சியாக தென்னிலங்கைக்கு கொண்டுசென்றிருக்கின்றார். இவற்றுக்கு அப்பால் சர்வதேச சமூகத்திற்கு சிறிலங்கா அரசின் இந்த இரட்டை வேடமும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எத்தகைய இழுத்தடிப்புக்களை அது மேற்கொள்கின்றது என்பதும் தெளிவாகிவிட்டது.

சிறிலங்கா அரசு திட்டமிட்டபடி- எதிர்பார்த்த படி சில காரியங்கள் இலங்கைத் தீவில் நடந்தேறியிருக்கின்றன. தமிழ் மக்கள் அதனால் திரும்பவும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடிதான் நிகழ்ந்திருக்கின்றன சில நிகழ்வுகள்.

மிகப் பிந்தியதாகப் பொதுக்கட்டமைப்பு சரி வரப் போவதில்லை என்பது நிரூபணமாகியிருக்கின்றது. அது உருவாக்கி கையொப்பம் இடப்படுவதற்கு முன்பே நடைமுறைக்கு வரமாட்டாது என்பது எல்லாத் தமிழர்களுக்கும் தெரிந்தேயிருந்தது.

இவற்றின் வழியாக மூன்றரை ஆண்டுகால சமாதானத்திற்கான காலத்தில் தமிழர் தரப்பை எந்த பயனுள்ள அடைவுகளையும் காணமுடியாதவாறு சிறிலங்கா செய்துள்ளது என்பது திட்டவட்டமான முறையில் தெளிவாகியிருக்கின்றது. தென்னிலங்கையில் இரண்டு அரசுகளுக்கு கீழ் நடைபெற்ற சமாதான நாடகத்தில் தமிழ் மக்களுக்கு மிஞ்சியவை இவைதான்.

ஆனால் இவற்றின் ஊடாக சிறிலங்கா எதனை அடையத் தலையால் முயன்றதோ அது இன்னும் அடையப்படவில்லை என்பதுதான் அதனது தோல்வியாக இருக்கின்றது.இப்போதைய நிலையில் அது அடைந்துள்ள தோல்வி, விடுதலைப்புலிகள் யுத்தப் பிரகடனத்தை தாமாகச் செயயாமையே ஆகும்.

இது விடயத்தில் சிறிலங்கா இனவாதிகளிடம் இருக்கும் வாய்ப்பாடு பிழைத்திருக்கின்றது எனலாம். அரச படைகள் யுத்தக் களத்தில் தாக்குப்பிடிக்க இயலாத நிலையை அடையும்போது, பின்னடைவுகளை சந்திக்கும் போது அதிலிருந்து மீள்வதற்காக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதுவே ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய கடந்த 30 ஆண்டு காலத்திலும் நடந்தேறியது.

இக் காலம் விடுதலைப்புலிகள் அதிகளவில் சர்வதேச ரீதியாக பலம் பெற்றிருக்கவில்லை, கவனம் பெற்றிருக்கவில்லை என்பதனால் சிறிலங்கா தனக்கு ஏற்றவிதமாக அவிழ்த்துவிடும் பொய்களை பழிகளாகச் சுமக்க நேரிட்டது. எந்தப் பயனுமற்றுப் போன பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து போர் வெடித்த போது விடுதலைப் புலிகள் போர் விரும்பிகளாக மட்டுமே காட்டப்பட்டார்கள்.

இந்த நிலைமை இப்போது மாறியிருப்பதுதான் சிறிலங்கா எதிர்கொண்ட மிகப் பெரும் தோல்வியாக இருக்கின்றது.

சர்வதேச நிர்ப்பந்தங்களால் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளுக்கான கட்டமைப்பை சிறிலங்கா சனாதிபதி உருவாக்கினார். பொருளாதாரம் நெருக்கடியான நிலைக்குள் இருப்பதனால் அதனை ஈடு செய்ய வேறு வழியிருக்கவில்லை. அதன் காரணமாக விடுதலைப் புலிகளுடன் இணைந்த ஒரு கட்டமைப்பில் கைச்சாத்திட்டு நிதி உதவியை பெறவேண்டியிருந் தது.

அதன் பின்பாக விடுதலைப்புலிகளை யுத்தம் ஒன்றை நோக்கித் தள்ளினால் முன்னைய காலங்களைப் போல விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச ரீதியான பரப்புரைகளோடு பெருமளவு நிதியை கையகப்படுத்தலாம் என நம்பினார்.

ஏற்கெனவே விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகள் மீது கொண்டிருக்கும் அதிருப்தியை பயன்படுத்தி இதனைச் சுலபமாகச் செய்துவிடலாம் என்று கருதினார் போல் தெரிகின்றது. அதன் வெளிப்பாடுகளாகவே சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் போராளிகள் பயணம் செய்த வாகனம் மீது வெலிக்கந்தவில் நடத்திய தாக்குதலும் சில நாட்களின் பின் திருகோணமலையில் முன் எச்சரிக்கை விடுக்கப்பட்டு போராளி டிக்கான் கொல்லப்பட்டமையும் உள்ளன.

இவற்றின் மூலம் கடுமையான முறையில் விடுதலைப் புலிகளை சினமூட்டி போரைத் தொடங்கச் செய்துவிட்டால், தனது அரசியல் நலனையும் பேணி சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நல்லபிப்பிராயங்களையும் தகர்த்துவிடலாம் என்று கருதினார். ஆனால் இந்தத் தாக்குதல்களே விடுதலைப் புலிகளுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்திவிட்டிருப்பது அவர் எதிர்பாராததே ஆகும்.

விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் நெருக்கடியான சூழ்நிலையை இலங்கைத் தீவில் ஏற்படுத்தியபோது சமாதான முயற்சிகளில் இணைத் தலைமை வகிக்கும் நாடுகள் சிறிலங்காவை அம்பலப்படுத்தும் வகையிலான கூட்டறிக்கையையே வெளியிட்டன.

விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை கருணா குழுவினருடனான முரண்பாட்டின் விளைவு என்று சித்தரிக்க முயன்றமை பொய்யானதே என்று அந்த நாடுகளே எடுத்துரைத்திருப்பது முக்கியமானதாகும். அதாவது சிறிலங்கா அரசு தனது துணை ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிகளாக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதுடன் போராளிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும் என்று கூறியிருப்பது அத்தகையதே.

அதிலும் ஒரு படி மேலே சென்று அமைதி முயற்சிகள் சீர்குலைந்தால் நிதியுதவிகளைத் தரமாட்டோம் என அமெரிக்கா கூறியிருக்கின்றது. இவற்றின் பின்னணியில் சந்திரிகா அரசு எதிர்கொண்டிருக்கும் இக்கட்டான நிலைமை எவ்வாறு சமாளிக்கப்படும் என்பதே இப்போதைய கேள்வியாக இருக்கின்றது.

சனாதிபதி சந்திரிகா இதன் முதற்கட்டமாக இணைத் தலைமை வகிக்கும் நாடுகளை சமாளிக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கின்றார். திரும்பவும் தமது படைகளுக்கும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துபவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறி அனுப்பியிருக்கின்றார்.

ஆனால் சர்வதேச பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே சிறிலங்கா அரசின் `துணையோடு இயங்கும் குழுக்கள்தான் தாக்குதலை நடத்துவதாக விடுதலைப் புலிகளிடம் கூறியிருக்கின்றது.

ஏற்கெனவே தென்னிலங்கையின் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவரே அத்தகைய குழுவின் தளம் பொலநறுவையில் இருப்பதை படங்களோடு நேரடிச் சாட்சியாக தென்னிலங்கைக்கு கொண்டு சென்றிருக்கின்றார். இவற்றுக்கு அப்பால் சர்வதேச சமூகத்திற்கு சிறிலங்கா அரசின் இந்த இரட்டை வேடமும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எத்தகைய இழுத்தடிப்புக்களை அது மேற்கொள்கின்றது என்பதும் தெளிவாகிவிட்டது.

இந்த மூன்றரை ஆண்டு காலத்துள் தமிழ் மக்களுக்கு எந்த அடிப்படை உரிமைகளோ இயல்பு வாழ்வில் முன்னேற்றமோ கிடைக்காத போதிலும் இந்த ஏமாற்றுத் தனங்கள் சர்வதேச சமூகத்திடம் ஓரளவுக்காயினும் அம்பலப்படுத்த முடிந்திருக்கின்றது. இது ஒரு வகையில் தமிழர் தரப்பினது விடுதலை நோக்கிய பயணத்தின் கணிசமான வெற்றியாகவும் சிறிலங்காவுக்கு ஏற்பட்ட தோல்வியாகவும் கொள்ளத்தக்கதாகும்.

இந் நிலைமை இன்று சிங்கள தேசத்தில் அரசியல் அமைதியற்ற சூழலை உருவாக்கியிருக்கின்றது. அரசியல் உரிமைகளோடு தமிழ் மக்களை வாழ விடாத முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கும் வரை இந்த நிலை தொடரவே செய்யும். இது இன்னும் தொடருமானால் வேறு விதமாக

**ஞாபகன்**

கடுமையான யுத்த மொழியிலும் பேசப்பட நேர்ந்தாலும் தென்னிலங்கையில் அமைதியற்ற நிலைதான் தோன்றும் என்பதில் ஐயமிருக்காது.

இவ்வாரம் தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய அரசியல்துறைப் பொறுப்பாளர் கூறியது போன்று தமிழரை நிம்மதியாக வாழ அனுமதித்தாலே சிங்கள தேசம் நிம்மதியாக வாழ முடியும். இது இன்னும் சில தாக்கங்களைத் தரும் கடந்த கால அனுபவங்களிலிருந்து பாடங்கற்றுக்கொள்ள வேண்டியது தென்னிலங்கையின் தலையாய கடனாகும்.

# நறுக்கென...

## நல்ல சேவகர்...!



கைகட்டி சேவகம் செய்வதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. இதைப்பற்றி கேட்கவேண்டுமானால் கொழும்பில் சந்திரிகாவின் காலடியில் எத்தனை நம்மவர்கள் காத்திருக்கிறார்கள்.

இவர்களையெல்லாம் நம்மவர்கள் என்று சொல்வதைவிட இனத்தை அழிக்க வந்த கோடரிக் காம்புகள் என்று சொல்வது பொருத்தப்பாடா யிருக்கும்.

அம்மணியின் கால் செருப்பைக் காவ டக்ளஸ், அம்மணிக்கு வியர்த்தால் சாமரம்வீச சங்கரி..., அம்மணி போகுமிடமெங்கும் பல்லக்கு காவ கதிர்காமர் இப்படிப் பலர்.

இவர்களெல்லாம் இந்த அடிமைச் சேவகத்தை சும்மாவா செய்கிறார்கள்.

இனத்தை விற்றாலென்ன, தன் குலத்தை விற்றாலென்ன, இவர்களுக்கு தேவை எலும்பென வீசப்படும் அற்பசொற்ப சலுகைகள் மட்டுமே.

இதற்காக இவர்கள் எது வேண்டுமானாலும் செய்வார்கள். செய்கிறார்கள்.

என்னதான் இருந்தாலும் அம்மணிக்காய் இந்த மானிபாய் கதிர்காமர் நாடு நாடாய் இந்தத் தள்ளாடும் வயதிலும் ஆலாய் பறக்கிறாரே என யோசிப்பவர்களுக்கு அவரொன்றும் சும்மா பறக்கவில்லை. அவர் பறக்கும் இடமெல்லாம் உல்லாசப் பயணங்களைத்தான் மேற்கொள்கிறார் என்பது போல ஒரு ஆங்கில ஊடகம் ஒன்று கதிர்காமரின் வெளிநாட்டுப் பயணச் செலவுகளை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் கதிர்காமர் பதினான்கு மாதங்களில் இருபத்தாறு சுற்றுலாவுக்காக எவ்வளவு செலவழித்துள்ளார். மன்னிக்கவும் அழித்துள்ளார் எனத் தெரியுமா? ஆகக்குறைவான தொகையாக சுமார் முப்பத்தைந்து மில்லியன். அதாவது, மூன்று தசம் ஐந்து கோடிரூபாவை அழித்துள்ளார்.

அதாவது, மூன்று தசம் ஐந்துகோடி ரூபா மக்கள் பணத்தை ஏப்பம் விட்டுள்ளார்.

சும்மா சொல்லக்கூடாது விலைகூடிய சேவகர்களைத்தான் சிறிலங்கா அரசும் தனது காலடியில் அமர்த்தியுள்ளது.

அது சரி, சேவகரின் சேவை எப்போதோ சோபையிழந்துவிட்டதே. அம்மணிக்கு இது புரியாததுதான் பாவம். என்ன செய்வார்.

ஆனாலும் இந்த மனுசன் இவ்வளவு பணத்திற்கு இந்த நாடுகளிலெல்லாம் அப்படி என்ன செலவழிக்கிறது யாருக்குத் தெரியும். தங்கள் உல்லாச வாழ்க்கையைப் பற்றி மட்டும் சிந்திக்கும் இவர்களா மக்களின் நலனைப் பற்றி சிந்திக்கப்போகிறார்கள். சரி உல்லாச வாழ்வுக்கு இவ்வளவு பணம் செலவழித்திருக்கிறார்கள் என்றால் மக்களின் பணத்தில் தங்களின் எதிர்கால வாழ்வுக்காக எவ்வளவு பதுக்கி வைத்திருக்கிறார்களோ?

நல்லநாடு
நல்ல அரசு
பாவம் மக்கள்.

## யாருக்குத் தெரியும்..!



அரசாங்கத்தை எதிர்க்கட்சிக்காரர் கவிழ்க்கிறதும் அரசு கவிழ்ந்த கதிரைக்கையைப் பிடிச்சு எதிர்க்கட்சி அரசுக்கு வாறதும், உடன அந்தக்கதிரையில இருந்து எதிர்க்கட்சியாக போன முன்னாள் அரசுக்காரர் இவையள கவிழ்க்கிறதும் சும்மா இலேசுப்பட்ட விடயமல்ல...

இது ஒரு குண்டக்கா, மண்டக்கா விளையாட்டு. குண்டக்கா எண்டா என்னெண்டும் தெரியாது. மண்டக்கா எண்டாலும் என்னெண்டு தெரியாது.

இதேபோலத்தான் ஆட்சியில இருந்தவைய எதிர்க் கட்சிக்காரர் ஏன் கவிழ்த்தவை எண்டும் தெரியாது. எதிர்க்கட்சிக்காரர் ஆட்சிக்கு வந்தவுடன பழைய அரசுக்காரர் ஏன் அவையள விழுத்தினவையெண்டு இவைக்கும் தெரியாது.

இப்படியே கவிழ்ப்பு விவகாரம் மட்டும் சந்திரனையும் தொட்டு செவ்வாய்க்கும் சவாரி விடுமளவுக்கு பறக்குது.

இது இஞ்ச இலங்கையில மட்டுமில்ல உலகம் பூராவும் இந்த விளையாட்டுத்தான். அரசியல் அகராதியில முதன்மையான விளையாட்டு.

ஆனாலும் பாருங்கோ, இலங்கையில இந்த விசயம் கொஞ்சம் அதிகம்தான்.

இதையேன் இப்ப சொல்லவேண்டிக்கிடக்கெண்டால் பழைய குருடி கதவைத் திறவடி எண்டதுபோல சனாதிபதித் தேர்தலை இந்த வருடத்துக்க நடாத்தாட்டி இந்த அரசை நவம்பர்மாதம் நாடாளுமன்றத்தில சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத்திட்டத்தோட தோற்கடிச்சு அரசை கவிழ்க்கப்போறம் எண்டு ஐக்கியதேசியக் கட்சிக்காரர் சபதம் போட்டிருக்கினமாம்.

இனியென்ன ஓடி விளையாடு பாப்பா... நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா... எண்டிறதை கொஞ்சம் உருமாற்றம் செய்து ஒளித்து விளையாடு அரசியல்வாதி... நீ... ஓய்ந்திருக்கலாகாது அரசியல்வாதி... எண்டு பாடரெடியாகுங்கோ.

என்ன விளங்கலையோ... அதுதான் செங்கோல் ஒளித்து விளையாடும் படலம். நடந்தாலும் நடக்கலாம் அல்லோ...

இலங்கையில புதுசா அரசுக்கு வாறவையை நாடாளுமன்றத்தில பதவி ஏற்க விடாமல் செய்யிரதுக்கு மற்றக் கட்சிக்காரர் செய்யிற விளையாட்டு இதுதானே. அதாவது சீப்பை ஒளிச்சால் கலியாணம் நடக்காது எண்டு நினைக்கிற ஆக்கள்.

## சும்மா... சும்மா..!



சிலவேளைகளில் சனாதிபதி சந்திரிகா உட்பட தென்னிலங்கை அரசியல்வாதிகள் அவர்களையறி யாமலே உண்மைகளை கொட்டுவதுண்டு.

அப்படியொரு பெரும் உண்மையை சனாதிபதி சந்திரிகா இப்போது கொட்டியுள்ளார். அம்மணி கொட்டிய ஒரு உண்மை இதுதான்.

அதாவது சுனாமி நிவாரண சபையின் கீழ் விடுதலைப்புலிகளுக்கு எவ்வித அதிகாரமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதனை அம்மணி தனது அறுபதாவது வயதில் முப்படைகளையும் அழைத்தா கூறவேண்டும்.

அம்மணி சிலவேளைகளில் தனக்கு முன்னால் உள்ள முப்படை அதிகாரி களையும் முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டாரோ என்னவோ...

ஏனென்றால், புலிகள் இன்று பெற்றிருக்கும் ஆட்சி அதிகாரம், மக்கள் அதிகாரம் என தாயகத்தில் அவர்கள் பெற்றுக்கொண்டதெல்லாம் தமிழ் மக்களின் ஆதரவோடு புலிகளின் படைத்தளத்தால் பெற்றுக்கொண்ட அதிகாரம்.

இது அம்மணிக்கு மட்டுமல்ல அங்கிருந்த முப்படைத் தளபதிகளுக்கும் தெரியும். ஏனென்றால் அம்மணியின் தலைமையில் புலிகளிடம் அடிவாங்கிபறிகொடுத்தவர்கள் இவர்களல்லவா.

இது இந்த சினிமாப படத்தில வாற ஒரு பாட்டு வரியத்தான் பாடச்சொல்லுது.
சும்மா... சும்மா... சும்மா...பேசிப்... பேசி...
சும்மா... சும்மா...சும்மா... கலக்கிறா...

அதிகாரத்தைப்பற்றி இவையள் பேசினம் அதிகாரத்தை இவை ஒரு காலமும் தரப்போறதில்லை என்றது எப்போவோ முடிந்த காரியம்.

இது இப்படியிருக்க சும்மா இருக்கிற சனத்துக்கும் கொதிவாற வேலையையல்லோ செய்யினம்.

அதுவும் முப்படைகளுக்கு சுனாமி நிவாரணக்கட்டமைப்புப் பற்றி அறிவுறுத்துற கூட்டம்தானாம் இந்த முப்படைகளோட நடைபெற்ற கூட்டம்.

ஒரு சிவில் கட்டமைப்புத் தொடர்பாக ஏன் இவா இந்த முப்படைகளுக்கும் அஞ்சி விளக்கம் வைக்கிறா. இதுவும் எல்லாம்... சும்மா... சும்மாதான்...

சும்மா.. சும்மா பேசிப்பேசி காலத்தை கடத்துற விளையாட்டுத்தான் இந்த விளையாட்டு.

இல்லாட்டி அந்த ஜே.வி.பிக்காரர் சொன்னமாதிரி ஐந்து சதத்துக்கு பெறுமதியில்லாத கதையை கதைப்பினமோ.

## நல்ல விளையாட்டு..!



பாவம் ... என்ன செய்வது எவ்வளவுதான் மாடாய் உழைத்தாலும் கடைசியாக கைவிட்டு விடுவது அரசியல்வாதிகளுக்குக் கைவந்த கலை.

அதுசரி... யார் மாடாய் உழைத்தது... யார் யாரைக் கைவிட்டது என நீங்கள் யோசிப்பது புரிகிறது.

இப்போது கைவிடப்பட்டவர் பட்டியலில் தயாசந்தகிரியும், இறுதியாகக் கைவிட்டவர் சனாதிபதி சந்திரிகாவுமாக இருக்கிறார்கள்.

வயதும் போய் பதவிக் காலமும் போயிருந்த கடற்படைத்தளபதி தயாசந்தகிரியை இழுத்துப் பிடித்து பதவியில் தக்கவைத்திருந்தார் அம்மணி.

ஆனால், இப்போது அம்போ என கைவிட்டுவிட்டார்.

பாவம் தயாசந்தகிரி மனம் நொந்துபோய் கடந்த வாரம் பிராந்திய கடற்படைத்தளபதிகள் மற்றும் கடற்படை சிரேஷ்ட அதிகாரிகளுடன் கடற்படைத்தலைமையகத்தில் மாநாடு ஒன்றை நடாத்தினாராம்.

அதில் சந்தகிரி இதுதான் நான் கடற்படைத்தளபதி பதவியிலிருந்து கொண்டு நான் நடத்தும் இறுதியான மாநாடு எனக் கூறினாராம்.

அத்தோடு, வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குப் பின்னர் புதியதொரு கடற்படைத்தளபதி தனது இடத்துக்கு நியமிக்கப்படுவார் எனவும் தெரிவித்தாராம்.

என்ன செய்வது அம்மணியோடு முட்டிக்கொண்டு மோதிக்கொண்டு இருக்க முடியுமோ... எல்லாம் காலம்தான் என சந்தகிரி இருக்கவேண்டியது தான்.

போவதே போகிறோம் கடைசிக்காலத்தில் கொஞ்சம் கூடுதலாகவே வாரிச் சுருட்ட நினைத்து ஆயுதக் கொள்வனவுக்கு வெளிக்கிட்ட சந்தகிரியின் ஆயுதக் கொள்வனவு வேட்டைக்கும் அம்மணி தடை போட்டுட்டா.

இதனால் மனம் நொந்து வெதும்பிப் போயிருக்கிறாராம் தயாசந்தகிரி.

அதுசரி, இந்த தளபதிகளெல்லாம் ஏன் நாங்கள் போருக்குத்தயார் என அறிக்கைவிடுவதெண்டு தெரியுமோ.

போர் நடந்தால் என்ன வேணும்... ஆயுதம் வேணும்... ஆயுதம் வேணும்... எண்டால் காசுவேணும். காசுதந்தால் உனக்குப் பாதி எனக்குப்பாதி எப்படியிருக்கு விளையாட்டு.


அதாவது நாகரிக கொள்ளையைத்தான் சொல்லுறன் உந்த ஊழல் விவகாரமெல்லாம் வெளிச் சந்தைக்கு வராது இது கறுப்புச்சந்தை விளையாட்டு. இதில சம்பந்தப்படுவது பெரிய பெரிய கைகள் தானே. கைகாப்புகளும் ஒருத்தருக்கும்போடுபடாது.

அப்படி போடுப்படோணுமெண்டால் சந்தகிரியார் அரசியலுக்கு வந்து அம்மணியாருக்கு எதிரா நிக்கோணும்.

ஆனால் சந்தகிரியாருக்கு ஓய்வு பெறக்குள்ள எங்கயாவது ஒரு தூதுவர் பதவி காத்திருக்கும்.

புகழன்

# பண்டாவின் அரசியல்



இலங்கையின் அழிவுக்குப் பண்டாரநாயக்கா குடும்பமே பொறுப்பு என்று அரசியல் ஆய்வாளர்கள் முடிவு கட்டியுள்ளனர். ஒரு தனி மனிதனின் கட்டுக்கடங்காத பதவி ஆசை இத்தீவின் பிளவுக்குக் காரணமாக அமைகின்றது.

தனது மாணவப் பருவத்தில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது சிறந்த வாதிடும் திறனோடு அவர் விளங்கினார்.

அவருடைய நாடு சுதந்திரம்பெற்றால் அவரே பிரதமராவார், அதற்குரிய எல்லாத் தகுதியும் அவருக்கு உண்டு என்று உயர்மட்ட ஆங்கிலேயர்கள் அவர் காதுபடக் கூறினார்கள்.

நாடு திரும்பியதும் அவர் பிரதமராகும் கனவில் கிடந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராகி முன்னணித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். 1947இல் சிங்கள இன மக்களின் தேச பிதாவான டி.எஸ்.சேனநாயக்கா பிரதமரானார். பண்டா அமைச்சர் பதவி பெற்றார். ஆனால், தான் எதிர்பார்த்த பிரதமர் பதவி டி.எஸ்.சேனநாயக்காவின் பின் தனக்குக் கிடைக்கும் என்று அவர் நம்பவில்லை.

வாரிசு அரசியல் உருவாகிய முதலாவது ஆசிய நாடு என்ற சிறப்பு சிறிலங்காவுக்கு உண்டு. தனக்குப்பின் தனது மகன் டட்லிசேனநாயக்கா பிரதமராக வேண்டும் என்று தந்தை விரும்பினார்.

இதை ஏற்க மறுத்த பண்டாரநாயக்கா ஆட்சி அதிகாரத்துடன் திகழ்ந்த யூ.என்.பி யிலிருந்து ஒன்பது சகாக்களோடு"நான் என்னை வென்றுவிட்டேன்" (I have conquered myself) என்று கோசமிட்டவாறு எதிரணிக்குத் தாவினார். அவர் யூ.என்.பியிலிருந்து விலகிய நாள் 12 செப்ரெம்பர் 1951.

1952இல் டி.எஸ்.சேனநாயக்கா சடுதி மரணமடைந்தார். அவருடைய மகன் டட்லி பிரதமரானார். அதே வருடம் நடந்த பொதுத் தேர்தல்களில் யூ.என்.பி.மீண்டும் ஆட்சிகயைக் கைப்பற்றியது. டட்லியின் பதவிக்காலத்தில் சிறிலங்காவின் முதலாவது ஹர்த்தால் 1953இல் நடைபெற்றது. டட்லியைத் தூக்கி எறிந்து விட்டுத் தானே பிரதமராகவேண்டும் என்று திட்டமிட்ட மூத்த யூ.என்.பி.கட்சி உறுப்பினரும் அமைச்சருமான சேர் ஜோன் கொத்தலாவலை ஹர்த்தாலின் பின்னணியில் செயற்பட்டதாகச் சொல்லப்படுவது உண்மையே.

டட்லி 1953இல் பதவிவிலகினார். கொத்தலாவலை பிரதமரானார். தமிழர்களுக்காகப் போரிடும் முனைப்பு யாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு 1949இல் டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சரவையில் இடம்பிடித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கொத்தலாவலை தூக்கி எறிய முன்பே 1953இல் பதவிவிலகினார்.


அந்தக்காலத்து ஆங்கிலப் பத்திரிகைகள் 'போறார், போறார், போய்விட்டார்' (Going, Going Gone) என்று தலையங்கம் தீட்டின. 1949இல் கொண்டுவரப்பட்ட மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டத்திற்குப் பொன்னம்பலம் சாதகமாக வாக்களித்தார். இதை எதிர்த்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பொன்னம்பலத்தின் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி 1949 டிசெம்பர் 18ஆம் நாள் தமிழரசுக்கட்சியை உருவாக்கினார்.

ஏறத்தாள மூன்றுவருட இடைவெளிக்குள் இரு பாரிய பிளவுகள் தமிழ், சிங்கள அரசியல் கட்சிகளில் தோன்றின. முதலாவது பிளவு ஒரு தனிமனிதனின் தூரநோக்கற்ற பதவி ஆசையால் தமிழ்க் கட்சியில் தோன்றியது. சிங்களக் கட்சியின் பிளவு தீவை இரு கூறாக்கும் வலுவுள்ளது.

பெளத்த சிங்களப் பேரினவாதம் ஒரு அரசியல் சக்தியாகப் புடைத்தெழுந்த காலமாக கொத்தலாவலை பிரதமராகப் பதவி வகித்த 1953-1956 வருடங்கள் மதிப்பிடப்படுகின்றன. இவர் தலைமை தாங்கிய யூ.என்.பி. 1956ஆம் ஆண்டுத் தேர்தல்களில் தோல்வி காண்பதற்கு சிங்கள-பெளத்த பேரினவாதம் முக்கிய காரணமாக அமைகிறது.

ஆனந்தா கல்லூரி அதிபர் எல்.எச். மேதாந்தா, பீ.டி.எஸ்.குலரத்தினா,லங்காதீப சிங்களப்பத்திரிகை ஆசிரியர் டி.பி தனபால போன்றோர் கொத்தலாவலை ஆட்சிக்கு கடும் எதிர்ப்புக் காட்டியதோடு பெளத்த- சிங்கள நாட்டுக் கோரிக்கையையும் முன்வைத்தனர்.

எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் மீது எல்.எச்.மேதானந்தா அதியுச்ச வெறுப்பைக் காட்டினார். "செல்வநாயகத்தின் முகத்தில் சோழர் ஆக்கிரமிப்பு வடிவத்தை நான் காண்கிறேன்" என்று மேதானந்தா கூறினார்.



இலங்கையின் மூன்றாவது பிரதமராக 12 ஒக்ரோபர் 1953 இல் பதவியேற்ற கொத்தலாவலை ஒரு வித்தியாசமான மனிதன். பண்டாரநாயக்கா போல் வீட்டில் ஆங்கில உடையும் மேடையில் வேட்டி சால்வையும் அணிய அவரால் முடியவில்லை. புத்தவிகாரைகளுக்குப் பூத்தட்டுடன் சென்று வணங்கும் நடிப்பையும் அவரால் மேற்கொள்ளமுடியவில்லை.

அவருக்குப் பொல்லாத வாய், முதலில் பேசுவார் பின்புதான் என்ன பேசினோம் என்று சிந்திப்பார். அவர் பிறவியில் உல்லாசி, பெண்கள் சகவாசத்தை மிகவும் விரும்பினார். ஒரு மாதிரிப் பெண்கள் அவரைச் சுற்றி வட்டம் அடிப்பார்கள். பகிரங்கமாக மது அருந்துவார், மாமிசம் உண்பார். அத்தோடு பிக்குகளை அவர் வைக்கவேண்டிய இடத்தில் கண்டிப்பாக வைத்திருந்தார். ஒரு புத்த பிக்குவால் பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டபோது, "நான் கட்டி வைத்த நாய்களை அவிட்டு விட்ட பலனை அவர் அனுபவித்தார்." என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது.

யூ.என்.பி யிலிருந்து விலகிய அதே மாதம் பண்டாரநாயக்கா சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். அவர் முன்பு தலைமைதாங்கிய சிங்கள மகாசபை உறுப்பினர்கள் அதில் இணைந்துகொண்டனர்.

கொழும்பில் வாழ்ந்த சில தமிழ் அப்புக்காத்தர்கள் அவருக்குப் பின்னணி ஆதரவு வழங்கினர். செனேற்றர் நடேசன் இதில் முக்கியமானவர். 1951 இல் உருவாக்கப்பட்ட எஸ்.எல்.எப்.பி 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெறவில்லை.

ஆனால் 1956 இல் நடந்த தேர்தலில் அமோக வெற்றி கிடைத்தது. எஸ்.எல்.எப்.பி தலைமையில் பண்டாரநாயக்கா மகாஜன எக்சத்பெரமுன (எம்.ஈ.பி) என்ற கூட்டுக்கட்சியை உருவாக்கினார். அன்று தொட்டு இதுவே எஸ்.எல்.எப்.பி கட்சியின் வழமையாகிவிட்டது. அக்கட்சி தனித்துப் போட்டியிட்டதாக வரலாறு கிடையாது.

பண்டாரநாயக்காவின் 1956 ஆம் ஆண்டு வெற்றிக்கு அவருக்கு இருந்த ஆதரவுப் புலம் பலமாக இருந்ததோடு சேர்ஜோன் கொத்தலாவலையின் மொழிக்கொள்கை சம்பந்தமான பிரகடனங்களும் காரணமாக அமைகின்றன. அவருடைய இவ்வகைப் பிரகடனங்களால் பெளத்த சிங்களப் பேரினவாதம் பலம்பெற்றது.

தனது பதவிக்காலத்தில் கொத்தலாவலை நெடுந்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார். அவருக்கு அங்கு வைத்துச் செய்யப்பட்ட மாலை மரியாதைகள் அவருக்குப் போதையூட்டின. அது போதாதென்று அவருடைய தலையில் ஒரு கிரீடத்தையும் யாழ்ப்பாணத் தமிழ்த் தலைவர்கள் சூட்டினார்கள். இதனால் அகமகிழ்ந்த கொத்தலாவலை "தமிழ்-சிங்கள மொழிச் சமத்துவம்" தன்னுடைய கொள்கை என்று பகிரங்கமாகக் கூறினார்.

இது சிங்கள நாடு முழுவதும் பாரிய உணர்வலைகளைக் கிளப்பியது. தலையில் கிரீடத்தோடு நிற்கும் புகைப்படத்தை லங்காதீப பத்திரிகை "கழுதைத் தீவில் முடிசூட்டப்பட்ட சேர்ஜோன்" என்ற விளக்கத்துடன் பிரசுரித்தது.

1954 இல் சேர்ஜோன் இன்னுமோர் மொழிக் கொள்கைப் பிரகடனத்தைச் செய்தார். அரசியல் சாசனத்தில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கும் திருத்தத்தைக் கொண்டுவரப்போவதாக அவர் தெரிவித்தார். தனது காலடியில் ஒரு பூகம்பம் உருவாவதை அறியாதவர்போல் அவர் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தார்.

'24 மணி நேரத்தில் தனிச் சிங்களம்' என்ற கோசத்தை பண்டாரநாயக்கா நாடுபூராகவும் பரப்பினார். 'பஞ்ச பல வேகய' என்று சிங்களத்தில் அழைக்கப்படும் ஐவகைச்சக்திகளை அவர் தன்னோடு இணைத்துக்கொண்டார்.

அவையாவன, புத்தபிக்குகள், சுதேச வைத்தியர்கள், சிங்கள மொழிப் பள்ளி ஆசிரியர்கள், விவசாயிகள், மற்றும் தொழிலாளர்கள். மேடைதோறும் பஞ்ச பலத்தின் வலுபற்றி முழங்கினார்.

இதேகாலப்பகுதியில் சிங்கள பெளத்த பேரினவாதத்தின் கையேடாகப் போற்றப்படும் இரு நூல்கள் பிரசுரமாகின. புத்தவிகாரைப் புரட்சி என்ற அர்த்தத்தில் REVOLT IN THE TEMPLE என்ற சிங்கள- ஆங்கில நூல் மற்றும் பெளத்த மதத்திற்குத் துரோகம் என்ற அதே வகை சிங்கள- ஆங்கில நூல். இது BETRAYAL OF BUDDHISM என்று அழைக்கப்பட்டது.

கொத்தலாவலையை விமர்சிக்கும் சிங்கள மொழிக் கவிதைகளும் இயற்றப்பட்டன.

**- அன்பரசு -**

இவ்வகைப் பிரசுரங்கள் மலிவுவிலையில் விற்பனையாகின. பொதுமக்கள் கூடும் இடங்களில் கூலிக்கு அமர்த்தப்பட்ட பாடகர்கள் பெருங்குரலில் இக் கவிதைகளைப் பாடி பிரசாரம் செய்தார்கள். ஒரு மாட்டுக் கன்றை உயிரோடு நெருப்பில் வாட்டி கொத்தலாவலையும் நண்பர்களும் உண்டதாக ஒரு கவிதை கூறியது. ஆனந்தா கல்லூரி அதிபர் எல்.எச். மேதானந்தா பள்ளிச் சிறார்கள் மத்தியில் உயிரோடு சுட்டு உணவாக்கிய கொடுஞ்செயலை அது பொய் என்று அறிந்தும், வன்மையாகக் கண்டித்துப்பேசினார். சாகர பாலசூரிய போன்ற பிரபல சிங்கள எழுத்தாளர்களும் இதே ரகப் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

நிலைமை மோசமடைவதை உணர்ந்த மூத்த தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், கட்சியின் பொதுச் செயலாளர் உக்குவத்தை ஜெயசுந்தராவும் யூ.என்.பியின் மொழிக் கொள்ளையை மாற்றவேண்டிய அவசியத்தை கொத்தலாவலைக்கு வலுவாக உணர்த்தினர்.

தனிச் சிங்களத்தை ஆதரிக்கவேண்டிய நிலைக்கு யூ.என்.பியும் அதன் தலைவர் கொத்தலாவலையும் தள்ளப்பட்டனர். இக்கட்சியின் கெலனி நகர் மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் உறுப்பினர்கள் மனமுடைந்து வெளியேறினர். யூ.என்.பியின் மூத்த உறுப்பினரான பொன் இராமநாதனின் மருகர் சு.நடேசபிள்ளை வாய்விட்டு அழுதபடி மாநாட்டு மண்டபத்திலிருந்து புறப்பட்டார். இக் கொள்கை மாற்றத்தை சிங்கள மக்கள் நம்பவில்லை. ஆனால் யூ.என்.பியினர் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

1956 திடீரெனப் பொதுத் தேர்தல்களுக்கான அறிவிப்பை பிரதமர் கொத்தலாவலை அறிவித்தார். அவருடைய பதவிக்காலம் முடிவதற்குப் பதினான்கு மாதங்கள் இருந்தாலும் அவர் புத்த ஜெயந்தி விழாவை விமரிசையாகக் கொண்டாடி அதை மூலதனமாக்கி தேர்தல் வெற்றி பெறலாம் என்று தப்புக்கணக்குப் போட்டார்.

புத்தர் பிறந்த 2500ஆம் வருட விழாவை கொத்தலாவலை அரசு நேபாள மன்னர் மகேந்திராவை அழைத்து வைபக ரீதியாக நிறைவேற்றியது. தபால் தலைகளும் நாணயக் குற்றிகளும் புத்த ஜெயந்தி விழாவுக்காக வெளியிடப்பட்டன. ஆனால் புத்த பிக்குகளின் ஆதரவு பண்டாரநாயக்கா பக்கமே இருந்தது. அரசியலில் ஈடுபடும் பிக்குகளின் மஞ்சள் ஆடைகள் களையப்பட்டு அவர்கள் முதுகில் சுடுதார் பூசவேண்டும் என்று இக்காலப்பகுதியில் கொத்தலாவலை சொன்னார். இதனால் பிக்குகள் வெறிகொண்டெழுந்தனர்.

1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் பண்டாரநாயக்கா தலைமையிலான எம்.ஈ.பி கூட்டணி போட்டியிட்ட 60 தேர்தல் தொகுதிகளில் 51 தொகுதிகளைக் கைப்பற்றியது. யூ.என்.பி 8 தொகுதிகளில் மாத்திரம் வெற்றிபெற்றது. மக்கள் ஆட்சி பிறந்துவிட்டதாகச் சிங்களத்தில் 'அப்பே ஆண்டுவா' என்று



வெற்றி பெற்றோர் குதூகலித்தனர். எல்.எஸ்.எஸ்.பியும் பிற மாக்சிசக் கட்சிகளும் 17தொகுதிகளில் வெற்றி பெற்றன. 6 நியமன எம்பிக்களோடு 101 உறுப்பினர்கள் அன்றைய நாடாளுமன்றத்தில் இருந்தனர். தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகத் தனிச் சிங்களச் சட்டத்தை 1956இல் பண்டாரநாயக்கா நிறைவேற்றினார்.

நாட்டின் வீழ்ச்சிப் பாதைக்கு இச்சட்டம் வழிகாட்டியதாக ஆய்வாளர்கள் கூறுவார்கள். பண்டா தலைமை தாங்கிய பெளத்த சிங்களப் பேரினவாதம் அவருடைய உயிருக்கு உலை வைத்தது. 25 செப்ரெம்பர் 1959 ஆம் நாள் சுடப்பட்டு அவர் அடுத்த நாள் உயிரிழந்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் 1959,1958 வருடங்களில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன. அவற்றை அடக்குவதற்கு அவர் முயற்சி எடுக்கவில்லை, ஊக்குவித்தார் என்றுதான் சொல்லவேண்டும். தமிழர்களைப் பிரிந்து செல்லும்படி நிர்ப்பந்தித்தவர் என்று பண்டாவை வர்ணிப்பதில் தவறில்லை. இலங்கையில் நடந்த முதலாவது அரசியல் படுகொலை அவருடையது என்பது வரலாறு, இறக்கும்போது பண்டாவுக்கு வயது அறுபது.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 29. 07 . 2005

மின் அஞ்சல :–weekly @ eezhanatham.com

## வவுனியா பிரகடனம்..!

வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு வரலாற்றின் முக்கியமானதொரு காலகட்டத்தில் நடைபெற்று முடிந்துள்ளது.

இந்த மாநாடு மிகமுக்கிய இரண்டு விடயங் களை வெளிப்படுத்தி நிறைவுற்றுள்ளது.

ஒன்று- மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது மாநாடு நடைபெற்ற வவுனியா சூழலில் அடுத்தடுத்து குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு, தமிழருக்கு சிங்கள தேசம் வழங்கிய செய்தி.

இரண்டாவது-மாநாட்டின் முடிவில் தமிழ் பேராளர் களால் வெளியிடப்பட்ட வரலாற்றுப் பிரகடனம்.

இந்த இரண்டு நிகழ்வுகளுமே ஒரே இலங்கை யென்று நோக்குபவர்களுக்கு வேறுபட்ட இரண்டு திசைகளில் செல்ல வேண்டிய இரண்டு தேசிய இனங்களின் நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மாநாட்டை குழப்பும் நோக்கில் வைக்கப்பட்ட குண்டுகள் மூலம் தமிழ் மக்களின் சனநாயக வழியில் அமைந்த தீர்வுகளுக்கான கதவுகள் எப்போதுமே திறக் கப்படமாட்டாது என்பது தொளிவாக உணர்த்தப்பட்டுள்ளது

இனி மேலும் சிங்கள தேசத்தை நம்பி காலத்தை வீனடிப்பது வரலாற்றில் செய்யப்படும் தவறாக அமைந்து விடும் என்பதாகும்.

இதனால்தான் தமிழ் மக்கள் பேராளர் மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனம் மூலமாக தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேச சமூகத்தின் முன் வெளிப்படுத்தி உரிய நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோரியுள்ளனர்.

வவுனியா பேராளர் மாநாட்டின் மூலமாக தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கை களானது சர்வதேச சமூகம் மதிப்பளிக்கக் கூடிய வகையிலே அமைந்துள்ளதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஏனெனில், இன்று உலகில் மனித குலத்தின் அடிப்படை உரிமைகளாக வலியுறுத்தப்பட்ட விட யங்களே இங்கு தமிழ் மக்களால் கோரப்பட்டுள்ளன.

அதாவது "தமிழர் தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என்பது.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமை யையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு தமிழரின் மரபுவழித்தாயகம், தேசியஇனம், தன்னாட்சி என பல வற்றின் அடிப்படையில் தமிழரையும் தமிழர் போராட்டத் தையும் அங்கீகரிக்கவேண்டுமென சர்வதேச சமூகத்தை கோரியது.

தமிழ் மக்களின் இந்த நியாயமான கோரிக்கைகளை புறந்தள்ளுவதற்கு சர்வதேச சமூகத்திற்கு எந்தவொரு நியாயபூர்வமான காரணங்களும் இருக்கமுடியாது என்பதே உண்மை.

ஏனெனில் தமது வாழ்விடங்களையும் தொழி லிடங்களையும் ஆக்கிரமித்து நிற்கும் படையையே தமிழ் மக்கள் வெளியேறக் கோரியிருப்பதுடன், தமது எதிர்கால அரசியல் வாழ்வுக்கான அங்கீகாரத்தையுமே கோரி யுள்ளனர்.

இந்த நிலையில் உலகில் சனநாயகம் பற்றியும், மனித மேம்பாடு பற்றியும் உண்மையான அர்த்தத்தில் சர்வதேச சமூகம் பேசுமாக இருந்தால், தமிழ் மக்களின் இந்த நியாயபூர்வமான கோரிக்கைக்கு சர்வதேசம் மதிப்பளிக்கும் எனவும், மதிப்பளிக்கவேண்டுமெனவுமே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தீர்வுகளுக்கான கதவுகளை இறுகமூடிக்கொண்டு தமிழ் மக்களின் விடுதலை பற்றி உலகம் பேசுவதென்பது வெறும் அபத்தமான நடவடிக்கையாக மட்டுமே இருக்க முடியும்.

மூடப்பட்ட பாதைகளை விடுத்து தமிழ்மக்களுக் கான நியாயபூர்வமான பாதையினை சர்வதேச சமூகத்தின் முன் சுட்டி நிற்கின்றார்கள்.

இதற்கு சர்வதேச சமூகம் என்ன பதிலை அளிக்கப் போகிறது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையென்றும், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்கவென பொதுக்கட்ட மைப்பு என்றும் பேசி சிங்களதேசத்தால் உதாசீனப் படுத்தப்பட்ட ஒரு கசப்பான காலகட்டத்தில் நின்று கொண்டு தமிழ் மக்கள் கோபப்படாது நாகரிகமான முறையிலமைந்த சனநாயக வெளிப்பாட்டு மாநாடு ஒன்றின் மூலமாக தமது கோரிக்கைகளை பிரகடனமாக வெளிப்படுத்திக் காத்திருக்கிறார்கள்.

## ஜோண் பீற்றர்சனின் தலைக்குக் குறி

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் என்பது கட்சிகளை மட்டுமல்ல தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர் போன்ற அதிகாரிகளை மட்டுமல்ல வேறு பலரை யும் விவகாரத்தில் மாட்டிவிடும் ஒரு விடயமாக உரு வெடுத்துள்ளது. சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சி களுமே சனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது எப்போது? என்பதில் நேரெதிரான கருத்துக்களோடு களமிறங்கியிருப் பதும்; இருதரப்பும் தமக்குத் தமக்கு ஊடகங்கள் ஆள் அம்பு சேனைகளைத் திரட்டிப் பரப்புரைப்போரை நடத்து வதும்தான் இந்த நிலைமைக்குக் காரணமாகும். ஏதோ ஒரு தரப்பின் நிலைப்பாட்டை அண்மித்து கருத்துத் தெரி விப்பவர்கள் மறுதரப்பினதும் அதன் ஆதரவு ஊடகங்களினதும் ஏச்சுக்கும் வசைபாடலுக்கும் உள்ளாக நேரிடுகிறது. இந்த வகையில் இந்த விவகாரத்தில் சிக்கியுள்ள குறிப்பிடத்தக்கவர்கள் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனும் அவர் செயலாளராக இருக்கும் சர்வதேச ஜனநாயக சங்கம் என்ற அமைப்பு மாகும்.

"முன்னால் போனால் கடிக்கும் பின்னால் சென்றால் உதைக்கும்", சட்டத்தை குறித்து இவ்வாறு சொல்லுவார்கள். சிறிலங்கா சனாதிபதியின் பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது? என்ற கேள்விக்கு இரண்டு கட்சிகளுமே அரசியலமைப்புச் சட்டத்தை தமக்கு வசதி யான படி பொருள் கோடல் செய்து கொண்டு அதற் கேற்றாற்போல தேர்தல் திகதி இந்தாண்டில்தான், இல்லை அடுத்தாண்டில்தான் எனச் சாதிக்கின்றன.



இந்தச் சூழலில், தனது அமைப்பில் உறுப் பினராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப் பாட்டை ஆதரித்து சர்வதேச சனநாயக சங்கம் தனது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி விட்டது. அதுபற்றி சங்கத்தின் செயலாளரான ஜோன் பீற்றர்சனும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து விட்டார். " மக்களின் இறைமையை மதித்து சிறிலங்கா வில் இவ்வருடமே சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என்பதே சர்வதேச சனநாயக சங்கமும், அதன் தலைவர் ஜோன் ஹாவர்ட் (அவுஸ்திரேலியப் பிரதமர்) செயலாளரான நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஆகியோரும் வெளியிட்ட கருத்து. பின்னர் இக்கருத்தினை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் வழிமொழிந்திருந்தார்.

பெரும்பாலும் மேற்குலகம் சார்ந்து சிந்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இதனைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டாடியது. அதனது ஊடகப்பிரிவு இந்த விடயத்தை அறிக்கையாக்கி அதற்கு பெருமெடுப்பிலான முக்கியத்துவமும் கொடுத்து விளம்பரப்படுத்தியது. ஜோர்ச் புஷ்ஷுடனும் ஹாவர்ட் மற்றும் பீற்றர்சனுடனும் ரணில் விக்கிரமசிங்க பெருமைபொங்க நின்று சிரிக்கும், கைகுலுக்கும் புகைப்படங்களையும் வெளியிட்டு மகிழ்ந்தது.

இங்கேதான் தொடங்கியது சிக்கல். உள்ளூர் தேர்தல் விவகாரத்துக்கு வெளிநாட்டு அழுத்தத்தை ரணில் கொண்டுவர முனைவதை வேரிலேயே களைந்து விடமுனையும் ஆளுங்கட்சியோ பிரச்சினையைப் பூதாகாரப்படுத்தியது. இது சிறிலங்காவின் இறைமையை மீறும் செயல் எனவும்; சர்வதேச சனநாயக சங்கம் என்பது வலதுசாரிக்கட்சிகளை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தும் ஆக 146 அரசியல்வாதிகளின் அமைப்பே தவிர, இது நாடுகளின் அமைப்பல்ல எனவும்; இதன் செயலாளராக இருந்துகொண்டு சனாதிபதித் தேர்தல் 2005 இல் நடத்தப்படவேண்டுமென ஒரு கட்சிக்கு சார்பாகக் கருத்துவெளியிட்ட நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏற்பாட்டாளர், அனுசரணையாளராக பங்குபற்றத் தகுதியானவரா? எனவும் மும்முனைகளில் தனது பதில் கருத்துப் போரை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பித்துவிட்டது.


இதில் மூன்றாவதாக முன்வைக்கப்பட்ட நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரத்தின் மீதான சந்தேகம் கொள்ளல் என்பது மிகப் பாரதூரமான ஒரு விடயமாகும். எவ்வாறெனில் இன்று "கட்சி சார்ந்து செயற்படுபவர்" என பீற்றர்சன் அவர்களை வசை பாடுகின்ற கட்சியானது, நாளை இனப்பிரச்சினை விவ காரத்தில் எட்டப்படும் ஏதாவது உடன்பாட்டின் பின்பும் "அனுசரணையாளர்கள் புலிகள் சார்ந்து செயற்பட்டார்கள்" என்று சொல்லிவிட அதிக நேரம் எடுக்காது. இந்த வகையிலான கருத்துக்கள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் பின்வரிசைகளில் இருந்து வெளி வந்தும் இருக்கின் றன. ஆனால் அவை அப்போதைய அரசியல் கள நிலவரம் காரணமாக பூதாகாரப்படுத்தப்பட வில்லை.அல்லது முன்னிலை விவகாரமாக முன்னிறுத்தப்பட வில்லை.

இது ஒரு புறம் இருக்க, சிறிலங்காவின் தேர்தல் ஆணை யாளர் " அரசியல் அமைப்பின் படி சனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடத்தப்படுதல் வேண்டும்" என்ற தனது முடிவை கசியவிட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அம்மையாரின் அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் ஒரு வருக்கு ஆணையாளரின் இந்த முடிவு அறிவிக்கப்பட்டிருப் பதாகவும் அதனால் அரசாங்கத்திற்குள் சலசலப்புக்கள் எழுந்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. இதன் விளைவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது சனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முனைந்துள்ள அல்லது தெரிவு செய்துள்ளதா கும்.

— பு. சத்தியமூர்த்தி

ஆனால் தேர்தல் ஆணையாளரின் இந்த முடிவை ஏற்றுக்கொள்வதற்கு சுதந்திரக்கட்சி தயாராக இல்லை. அரசியல் அமைப்புக்கு மாறாக பிழையான முடிவை தேர்தல் ஆணையாளர் எடுத்தால் தாம் உயர் நீதிமன்றத்திற்குச் செல்வோம் என அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் கர்ச்சிக்கிறார்கள்.

(19ஆம் பக்கம் பார்க்க)



# முரண்பாடுகள் அதிகரிக்கும்போது வெளிப்படும் ஊழல்கள்

சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் அவரது அமைச்சர்கள் புரிந்த ஊழல்கள், படைத்தளபதிகளின் மோசடிகள், அதிகாரிகளின் முறைகேடுகள் என்பன பல ஊடகங்களால் காலத்திற்குக் காலம் பகிரங்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றின் மீது நடவடிக்கை எப்போது எடுக்கப்படுகிறது? என்று பார்த்தால் அவர்கள் எப்போது சந்திரிகாவுடன் முரண்பட்டுக்கொள்கின்றார்களோ அப்பொழுது



தான் அது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், சனாதிபதி சந்திரிகாவிற்கும் அப்பொழுதுதான் அவர்கள் மோசடிப் பேர்வழிகள் என்பதும் புலப்படுகின்றது.

இப்பொழுது சந்திரிகாவின் பார்வையில் கள்வராகவும் மோசடிப் பேர்வழியாகவும் தோற்றம்பெற்றிருப்பவர் அவருக்கு அடுத்த நிலையிலுள்ள பிரதமர் மகிந்தராஜபக்ச ஆவார். “அம்பாந்தோட்டை நிதியம்” என்ற பெயரிலுள்ள தனியார் கணக்கொன்றில் சுனாமிக்கு வழங்கப்பட்ட நன்கொடையை மகிந்த ராஜபக்ச வைப்பிலிட்டார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு எழுந்தவுடன் சனாதிபதி சந்திரிகா இது குறித்து நடவடிக்கை எதற்கும் உத்தரவிடவில்லை. உண்மையில் ஆட்சித் தலைமைப் பொறுப்பில் சந்திரிகாவிற்கு அடுத்தபடிநிலையிலுள்ள பிரதமரின் மீதான இக் குற்றச்சாட்டை உடனடியாக விசாரிக்க அவர் நடவடிக்கை எடுத்திருப்பாரேயானால் அல்லது அந்த விசாரணை மூலம் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டோ நிராகரிக்கப்பட்டோ இருக்குமானால் சந்திரிகா மீது குறை கூற எதுவுமில்லை.

ஆனால் இப்பொழுது மகிந்தராஜபக்ச சனாதிபதிப் பதவிக்காக தனக்கெதிராகச் சூழ்ச்சி செய்கிறார் என்ற சந்தேகம் சனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள நிலையில் இவ்வாறு விமர்சிப்பதானது சந்திரிகாவே மிகப் பெரிய குற்றவாளி என்பதைப் புலப்படுத்துகிறது.

இவ்வாறுதான் முன்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆறு ஆண்டுகால ஆட்சியில் சமுர்த்தி அமைச்சராக இருந்தவரும் தற்பொழுது சிறையில் இருப்பவருமான எஸ்.பி திசாநாயக்கவின் விவகாரத்திலும் அவர் நடந்துகொண்டார்.

அதாவது பொதுசன ஐக்கிய முன்னணியின் முதலாவது ஆட்சியின் இறுதிப் பகுதியில் எஸ்.பி.திசாநாயக்க மீது சமுர்த்தி நிதியில் மோசடி செய்ததாக எதிர்க் கட்சிகளால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அவர் மீது நேர்மையான முறையில் நடவடிக்கை எடுப்பதானால் அப்பொழுதே அவர்மீது விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி அவர் நடந்து கொள்ளாதது மட்டுமல்ல அடுத்த ஆட்சிக்காலத்திலும் எஸ்.பி.திசாநாயக்கவுக்கே சமுர்த்தி அமைச்சர் பதவியை வழங்கினார்.

பின்னர் எஸ்.பி.திசாநாயக்க கட்சியிலிருந்து வெளியேறி பொ.ஐ.மு அரசாங்கம் கவிழக் காரணமாகிய பின் அவர் ஊழல் புரிந்ததாகவும் அந்நிதியில் பெரிய மாளிகையொன்றைக் கட்டி வருவதாகவும் சனாதிபதி பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

அத்துடன் ஐ.தே.முன்னணி ஆட்சிப் பீடம் ஏறியதும் சமுர்த்தி அமைச்சராக எஸ்.பி.திசாநாயக்கவை ஏற்றுக்கொள்ள மறுத்துவந்தார். இப்பொழுது நீதிமன்றம் இக்குற்றச்சாட்டை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எஸ்.பி.திசாநாயக்க ஊழல் புரிந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன இவ்விடயத்தில் சனாதிபதி சந்திரிகாவின்



நடத்தை எவ்வளவு மோசமானது என்பது புலனாகிறது.

இதேபோல் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் முஸ்லிம் மக்கள் படுகொலையில் சந்தேகநபராக இருப்பவருமான அநுருத்த ரத்வத்த மீதான மோசடிக் குற்றச்சாட்டு அவர் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட வங்கிப் பத்திரங்கள் தொடர்பான விசாரணை கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

இப்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் சனாதிபதி சந்திரிகாவுக்கு மிகவும் நெருக்கமானவருமான இரட்ணசிறி விக்கிரமநாயக்க மீதான றப்பர் தோட்ட மோசடி குறித்த விசாரணையை காணவில்லை. இது தொடர்பான விவகாரத்தில் ஐ.தே.மு ஆட்சியின் போது அவர் சில நாட்கள் தலைமறைவாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேவேளை சனாதிபதி சந்திரிகாவின் மிகமுக்கிய ஆலோசகராக இருந்த அமைச்சர் மங்கள சமரவீர மீது கடனட்டை மோசடி குறித்த குற்றச்சாட்டு இப்பொழுது பேசப்படுவதில்லை.

சமாதான முயற்சிகளையும் யுத்த நிறுத்தத்தையும் குழப்பியடிக்கவென்றே அவரால் முப்படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்ட தயாசந்தகிரியின் ஆயுதபேரம் குறித்த குற்றச்சாட்டை அவர் பெரிதாக எடுப்பதில்லை. ஆனால் போதைவஸ்துடன் தொடர்புடைய ஒருவருடனான புகைப்படத்தை வைத்துக்கொண்டு முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

ஊழல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட ரெஜினோல்ட் கூரே மீண்டும் மாகாண முதலமைச்சராகியிருக்கிறார்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள் மீது எதிர்க்கட்சிகள் ஊழல்குற்றச் சாட்டுச் சுமத்துவது வழமைதான். அவற்றுக்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படுமானால் அதனை விசாரிக்க வேண்டியது அரசாங்கத்தினது கடமை. அதில் அவர் குற்றவாளியாகவும் இருக்கலாம் அல்லது நிரபராதியாகவும் இருக்கலாம்.

ஆனால் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும்போது விசாரணைகள் எதனையும் மேற்கொள்ளாது அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு தமக்கு எதிரானவர்களாக மாறும்போது வாய்க்கு வந்தபடி கூறுவது மிகவும் மோசடித்தனமானது.

ஜே.வி.பி மீதும், அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க மீதும் இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பல மோசடிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவதும் இவ்வாறான ரகத்தைச் சேர்ந்ததே.

உண்மையில் இவர்கள் மோசடி புரிந்திருந்தால் அதுகுறித்த குற்றச் சாட்டுகள் எழும்போதே விசாரணைகளை ஆரம்பித்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் சனாதிபதி சந்திரிகாவைப் பாராட்டலாம்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# அவர்களுக்கென்ன..?

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் தீராத தொடர்கதையாக தொடரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக சிறிலங்காவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகளுக்கிடையே அக்கறையோ ஆர்வமோ கிடையாது.

குறிப்பாக ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் சரி பிரதான எதிர்க் கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி இவ்விரு கட்சிகளைப் பொறுத்தவரை ஆட்சியை தக்க வைக்துக்கொள்வது பற்றியும் ஆட்சியைப் பிடிப்பது பற்றியுமே தமது அரசியல் வேலைத்திட்டங்களை முன்னகர்த்தி வருகின்றனர்.

இந்த வகையில் இந்த அரசியல் கட்சிகள் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினையை இரண்டாவது பிரச்சினையாக தள்ளிவிட்டு ஆட்சி பிடிக்கும் அதிகாரப் போட்டியை முதன்மைப்படுத்திக் கொண்டு செயற்படும் உச்சக் கட்டம் இப்பொழுது அதிகரித்துக் காணப்படுகின்றது.

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை இந்தாண்டு நடைபெறுமா அல்லது அடுத்தாண்டு நடைபெறுமா என்கிற வாதப் பிரதி வாதங்களோடு களத்தில் சண்டையிடும் காட்சி அரங்கேறி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரையில் தனது மக்கள் சக்தி போராட்டத்தின் மூலமாக நேரடியாக மக்கள் மத்தியிலிறங்கி வெகுசன விழிப்பு நிலையை தோற்றுவித்துவிட்டு இந்த ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும் எனகுரல் கொடுத்து வருகிறது.

அத்தோடு இந்தப் பிரச்சினை தொடர்பாக இலங்கையின் தேர்தல் ஆணையாளர் முடிவெடுக்க வேண்டிய நிலையிலும் அவர் எந்த விதக் கருத்துக்களையும் வெளிப்படுத்தாது, சனாதிபதி சந்திரிகாவோ அடுத்தாண்டு சனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பது போல செயற்பட்டு வருகின்றார்.

இதனால், இலவுகாத்த கிளிபோல காத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதித் தேர்தல் தொடர்பான சனாதிபதி சந்திரிகாவுக்கான அழுத்தத்தை இப்போது சர்வதேச மட்டத்திலிருந்தும் கொடுத்து வருகிறது.

ஆனால், இவை யாவற்றையும் புறந்தள்ளிவிட்டு செயற்படும் சனாதிபதி சந்திரிகா சனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவில் மௌனமாகவே இருந்து வருகிறார்.

இதற்கிடையில் சனாதிபதி சந்திரிகாவை பொறுத்தவரையில் நாடாளுமன்றத்தில் மிகக் குறைந்த ஆசனங்களைக்கொண்ட சிறுபான்மை அரசாகவே செயற்பட்டு வருகிறார்.

ஒரு சிறுபான்மை அரசாக இருந்து செயற்படுவதற்கு சனாதிபதி சந்திரிகாவுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு நம்பிக்கை நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட இந்த சனாதிபதி பதவி மட்டுமே.

ஆகவே, அவ்வளவு சுலபமாக சனாதிபதி சந்திரிகா இந்த சனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்புக்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.



இந்த நிலையில், சனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்தாது விட்டால் நாடாளுமன்றத்தில் சிறுபான்மை அரசாகச் செயற்படும் இந்த அரசை கவிழ்த்து விடப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த எச்சரிக்கையானது எதிர் வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அரசின் வரவு செலவுத் திட்டத்தை மையமாக வைத்து விடுக்கப்படும் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி நவம்பர் மாதம் நடைபெறும் வரவு செலவுத் திட்டம் மீது திட்டத்தை எதிர்த்து வாக்களித்தாலும் அதனை தோற்கடிக்க வேண்டுமானால் அரசின் முன்னாள் பங்காளிகளான ஜே.வி.பியின் ஆதரவும் இருக்கும் பட்சத்திலேயே அது சாத்தியப்படும் என்கிற நிலையும் காணப்படுகிறது.

எது எப்படியோ தென்னிலங்கையைப் பொறுத்தவரை அடுத்து வரும் வாரங்களும் அடுத்து வரும் காலங்களும் சனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து அரசியல் நடவடிக்கைகள் அமையப்போகின்றன. இதற்குள் தமிழ் மக்களின் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு புறந்தள்ளப்பட்ட விடயமாகவே இனியும் நீடிக்கப்போகின்றது என்பது மட்டுமே உண்மை.


இதனை உறுதிப்படுத்துமாற் போன்றே சனாதிபதி சந்திரிகா சிறிலங்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக தனியார் ஊடகங்கள் செயற்படுவதாக ஊடகங்கள் மீது தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தக் கோபத்தில் நாட்டின் 75 வீதமான ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன என்றும் குற்றம் சாட்டியுள்ளார். இது எதைக் காட்டுகிறது?

**வேழினி**

# சூழல் நல்லாட்சி ஆணையம்

## பணிப்பாளர் ச.ரஞ்சனுடனான சந்திப்பு



தாயகத்தின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்குடன் தாயகத்தில் உள்ள பல்வேறு அமைப்புக்கள் தங்களுடைய செயற்பாடுகளை தீவிரப்படுத்தி வருகின்றன. அந்த வகையில் தமிழீழ சுகாதார சேவையினர் தங்களுடைய செயற்பாடுகளை ஒரு புறம் முன்னெடுத்துச் செல்ல மறுபுறம் தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவினர் தங்களுடைய செயற்பாட்டினை மேற்கொண்டு செல்கின்ற அதே வேளை சூழலை பாதுகாக்கும் அடுத்த கட்ட ஒரு நடவடிக்கையாக அண்மையில் “ சூழல் நல்லாட்சி ஆணையம்” என்ற அமைப்பு உருவாக்கப்பட் டுள்ளது.

எனவே இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலக பதில் செயலாளர் நாயகமும், சூழல் நல்லாட்சி ஆணையபணிப்பாளருமான திரு ச.ரஞ்சன் அவர்களுடனான சந்திப்பில் பெறப்பட்ட விபரங்கள் வருமாறு;

**★. சூழல் நல்லாட்சி ஆணையத்தின் தேவை ஏன் உணரப்பட்டது?.**

உலக நாடுகளிற்கு பெரும்பாலானவை கடந்த இருபதாண்டு காலப்பகுதியில் தமது இயற்கையையும் மக்கள் வாழும் சூழலையும் பாதுகாத்து, பராமரித்து, மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதை நாம் அறிவோம். இக்காலப்பகுதியில் நீண்ட விடுதலைப்போராட்டத்தின் மத்தியிலும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு, மக்கள் நடவடிக்கைகளினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் என்பன தொடர்பான செயலாற்றல்கள் இடம்பெற்ற போதும் ஒருமுகமாகக் கொள்கை வகுத்துச் செயற்படும் அளவுக்கு முயற்சிகள் எதுவும் முன்னெடுக்கப் படவில்லை. மேலும் ஆழிப் பேரலையின் விளைவால் சிதறடிக்கப்பட்ட எமது கரையோரச் சமூகங்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முயற்சியும் சூழல் பற்றிய எமது அவதானத்தினை இன்னும் கூர்மைப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் போரின் கோரச்சிதைவுகளிலிருந்தும் இயற்கை அனர்த்தத்தின் அழிவின் சுவட்டிலிருந்தும் மீளக்கட்டியெழுப்பப்படவேண்டியுள்ள தமிழர் தாயகத்திற்கு இது மேலும் ஒரு சவாலான விடயமாக அமைந்துள்ளது. யுத்தச் சிதைவுக்குள்ளிருந்து மீண்டெழுந்து உலகிற்குச் சமனாகத் தன்னை நிலை நிறுத்துவதற்குத் தேவையான வளங்களை இயற்கையிலிருந்து பயன்படுத்துவதற்கும் தனதும் தனது எதிர்கால சந்ததியினதும் உன்னத வாழ்வுக்காக இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்குமிடையில் அனுசரிக்கப்பட வேண்டிய எல்லைகளைத் தெளிவாக வரையறுத்துக்கொள்ளவேண்டியது தமிழர் தாயகத்தில் வாழும் தனிமனிதரினதும் சமூகங்களினதும் நிறுவனங்களினதும் தலையாய கடமையாகவும் தேவையாகவும் உள்ளது.

தமிழர் தாயகத்தில் இத்தகைய சவால்மிக்க பணிகளினை முன்னெடுப்பதற்குத் [illegible]ான வழிகாட்டல்களையும் [illegible]டுத்தல்களையும் கையாளுவதற்கென ஓர் அதி உயர் நிறுவனக் கட்டமைப்பின் தேவை உணரப்பட்டுள்ளமையின் விளைவே “ சூழல் நல்லாட்சி ஆணையத்தின்” தோற்றமாகும்.

**★. ஆணையத்தின் இலக்கு எப்படி இருக்கப் போகிறது?**

தமிழர் தாயகத்திற்கான சூழலியற் கொள்கையினை வகுத்தல்.

தமிழர் தாயகச் சூழலியற் கொள்கைகளின் அடிப்படையில் அவற்றிற்கான மூலோபாயங்களை வகுத்தல்.

கொள்கைகள், மூலோபாயங்களின் அடிப்படையில் சூழற் பாதுகாப்பு, சூழல் மேம்பாடு, சூழல் தரக்கட்டுப்பாடு ஆகிய விடயங்களுக்கான பயன்முறை விதிகள், நியமங்களை உருவாக்குதல்.

கொள்கைகள், மூலோபாயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சூழற்பாதுகாப்பு, சூழல் மேம்பாடு, சூழல் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றினை மேற்கொள்ளவும் அவற்றினைச் செயற்படுத்தவும் பொருத்தமான அமைப்பு முறைகளை உருவாக்குதல்.

ஆணையத்தின் கொள்கை வழிகாட்டலின் கீழ், தாயகத்தின் இயற்கை வளங்களைப் பல்வேறு துறைசார் பிரிவுகளுக்கும், வேறுபட்ட தேவைகளுக்கும் ஒதுக்கீடு செய்யும் துணை நிறுவனங்களை ஒருங்கிணைத்தலும், கண்காணித்தலும்.

தமிழர் தாயகத்தின் சூழற் சமநிலை, இயற்கைவளங்களின் பயன்பாடு, புத்தாக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் தகவல்களைச் சேகரிப்பதற்கும், தாயகச் சூழல் தொடர்பான “அறிவியற் தளம்” ஒன்றினை கட்டியெழுப்புவதற்கும் ஏற்ற எல்லா நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல்.

தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களின் பரம்பலை ஆவணமாக்குதலும் உயிரினப்பல்வகைமையை இனங்கண்டு பேணுதலும்.

தமிழர் தாயகத்திற் சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் சூழல் சார்ந்த வாழ்க்கைச் செயன்முறைகளில் மக்களின் ஆர்வ[illegible]தினையும் அக்கறையினையும் [illegible]கப்படுத்துவதற்கும் ஏதுவான திட்டங்களை வடிவமைத்தலும் செயற்படுத்தலும் விளைவுகளைக் கண்காணித்தலும்.

தமிழர் தாயகத்திலும் அதன் அயற்புறச் சூழல்களிலும் நிகழக்கூடிய இயற்கை மற்றும் செயற்கையான மாற்றங்களினால், தாயகத்திலும் அதன் சுற்று வட்டச் சூழலிலும் ஏற்படக்கூடிய நேர் எதிர் விளைவுகளை அறிந்து ஆராய்ந்து அறிக்கையிடுதலும் தேவையானபோது அவை தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தலும்.

சூழல் தொடர்பான சர்வதேசப் பிரகடனங்கள், நியமங்கள், கடப்பாடுகள் ஆகியவற்றினைத் தமிழர் தாயகத்தின் சார்பாக ஏற்று நடைமுறைப்படுத்துதலும் அதனை உறுதி செய்தலும்.

தமிழர் தாயகத்தினுள் கொண்டுவரப்படக்கூடியவையும் தாயகத்திலிருந்து வெளியே கொண்டுசெல்லப்படக்கூடியவையுமான தாவரங்கள், உயிரினங்கள், உயிரினப்பதார்த்தங்கள் ஆகியவற்றினைப் பட்டியலிடலும் அவற்றைக் கொண்டுவருவதற்கும் கொண்டுசெல்வதற்கும் வேண்டிய ஒழுங்குமுறைகள் அனுமதி வழங்கல் ஆகியவற்றினை வடிவமைத்துச் செயற்படுத்தலும்.

ஆணையத்தின் செயற்பாட்டிற்குத் தேவையான நிதிமூலங்களைத் தேடுதலும் பெற்றுக்கொள்ளலும் பயன்டுத்தலும்.

ஆணையத்தின் பணிகளினைச் சிறப்பாகச் செயற்படுத்தத் தேவையான தனியாட்கள், சமூகக் குழுக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலும் பணியாற்றலும்.

**★ஆணையத்தின் செயற்பாடுகள் எப்படி அமையப்போகிறது?**

ஆணையம் தமிழர் தாயகத்திற்கு சூழல் நல்லாட்சியினை ஏற்படுத்துவதற்காக மூன்று பிரதானசெயற்பாட்டுப் பிரிவுகளினைக் கொண்டிருக்கும்.

★சூழற் தரவுப் பிரிவு

★சூழல் ஒழுங்கு விதி இயற்றும்பிரிவு.

★சூழல் மேம்பாட்டுப் பிரிவு.

மேற் படிப்பிரிவுகளின் படி ஆணையம் தனது செயற்பாட்டினை மேற்கொள்ளும்.

**★ஆணையத்தின் கட்டமைப்பைப் பற்றி கூறுங்களேன்?**

திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தின் கீழ் சூழல் நல்லாட்சி ஆணையம் இருக்கும். இதற்கு முகாமைத்துவச் சபை ஒன்று காணப்படும். அந்த முகாமைத்துவச் சபைக்கு ஆலோசனைகள் வழங்கவென மதியுரைஞர் அவை இருக்கும். இதன்பின் சூழல்தரவுப் பிரிவு, சூழல் ஒழுங்கு விதியியற்றல் பிரிவு, சூழல் மேம்பாட்டுப் பிரிவு என இதன் கட்டமைப்புக் காணப்படும்.

**சுழியன்**

**★ சூழல் நல்லாட்சி ஆணையத்திற்குமனித வளத்தை எவ்வாறு உள்வாங்[illegible]ப் போகின்றீர்கள்?**

எமது முகா[illegible]த்துவச் சபைக்கு இங்கு இருக்கின்ற சூழலோடு தொடர்புடைய அமைப்புக்களை அதாவது பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வனவளப் பாதுகாப்புப் பிரிவு போன்ற சூழல் சார்ந்த அமைப்புக்களை உள்வாங்குவதோடு மதியுரைஞர் அவைக்கு உள்ளூரிலும் புலம் பெயர்ந்த எமது மக்களில் உள்ள சூழல் சார்ந்த நிபுணர்களையும் உள்வாங்கி செயற்பாட்டினை மேற்கொள்ள இருக்கின்றோம்.

**★ஆணையத்தின் செயற்பாட்டிற்கான நிதி மூலங்கள் பற்றி குறிப்பிடுங்கள்?**

ஆரம்பத்தில் திட்டமிடல் செயலக நிதியினை பயன்படுத்த இருக்கின்றோம். பின்னர் சூழல் தொடர்பான அமைப்புக்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தாங்கள் உதவி செய்வதாக புலம்பெயர்ந்த ஒரு சில மக்கள் எமக்குக் கூறியிருக்கின்றார்கள். எனவே அவ்வாறானவர்களின் உதவிகளைப் பெற்று ஆணையம் தனது செயற்பாட்டினை வருங்காலத்தில் முன்னெடுத்துச் செல்லும்.

**★ ஆணையம் சூழலை எவ்வாறு நல்லாட்சி செய்யப் போகிறது?**

சூழல் நல்லாட்சி என்பது எமது தாயகத்தின் இயற்கை சூழலினை நிறைவாகப் பொறுவதற்காகவும் எமது செயற்பாடுகளினாலும் எல்லைதாண்டிய காரணிகளாலும் இயற்கைச் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மட்டுப்படுத்துவதற்காகவும் சமூகத் தெளிவாக்கல், தகைமை வளர்த்தல், நியமங்கள், விதிகளை உருவாக்குதல், மக்கள் பங்கேற்றலை ஊக்குவித்தல் ஆகிய முயற்சிகளை மேற்கொள்ளும் சமூககூட்டு செயன்முறையாகும். அதாவது இயன்றவரை எமது சூழலின் சமநிலையை பேணுவதாக அமையும்.

**★ எப்படிப்பட்ட தாயக சூழலைஆணையம் விரும்புகிறது?**

எமது தேசியத் தலைவரின் விருப்பு, எண்ணங்களுக்கு அமைவாக அவரது தூரநோக்குச் சிந்தனையின்படி இன்றைய மானிட சமூகத்தினதும் அதன் நாளைய சந்ததியினதும் மேன்மை நலவாழ்வு என்பவற்றை உறுதி செய்யும் உயர்ந்த பட்சச் சமநிலை கொண்ட இயற்கைச் சூழலை எமது தாயகத்தில் வைத்திருப்பதனை ஆணையம் விரும்புகின்றது.

**★எமது பத்திரிகையின் ஊடாக சூழல் நல்லாட்சி ஆணையம் எமது மக்களுக்கு எதை சொல்ல விரும்புகின்றது?**

எமது ஆணையத்தின் விருப்புப்படி சூழலை வைத்திருப்பதற்கு எமது மக்களின் ஒத்துழைப்பு என்பது ம[illegible]வும் இன்றியமையாத ஒன்று. எனவே எமது மக்கள் சூழல் தொடர்பான எமது நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இயற்கையை பாதிக்கக் கூடிய நடவடிக்கைகள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் இடம் பெறுமாயின் அவற்றை எமக்கு தெரியப்படுத்துவதோடு சூழலை பாதுகாப்பது தொடர்பான நல்ல ஆலோசனைகள் இருப்பின் அவற்றையும் எம்மோடு பகிர்ந்து கொண்டால் எதிர்காலத்தில் நல்ல வளமானதொரு தாயகத்தை எமது பிரதேசத்தில் கட்டியெழுப்பலாம். இவை எல்லாவற்றுக்கும் மக்கள் எம்மோடு ஒத்துவர வேண்டும்.





# கிராமிய மேம்பாடு

ஒவ்வொரு மனிதனின் வாழ்வியல் மேம்பாட்டை முன்னோக்கி அழுத்துவதாக சமூக மேம்பாடு அமைந்திருக்கின்றது. சமுதாய வாழ்க்கைத்தர முன்னேற்றமானது படிப்படியான வளர்ச்சிப் படிகளை அண்மித்தும், வளர்ந்தும் மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

சமூக, பொருளாதார, அரசியல் அனைத்து மட்டங்களிலும் சமுதாய மேம்பாடு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக, வளர்ச்சிப்பாங்கில் பல்வேறு துறைகளில் அழுத்தம் கொண்டதாகக் கருத்திலெடுக்கப்படுகின்றது. ஒரு தேசத்தின் வளர்ச்சியாக சமுதாய மேம்பாடு கணிக்கப்பெற்று, கிராமிய மேம்பாட்டின் அவசியமானது அனைத்து மட்டங்களிலும் திட்டமிடலையும் அமுல்படுத்தலையும் அடிப்படையாகக் கொண்ட மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

வாழ்வு என்பது அர்த்தத்துடன் கூடிய மனித இருப்பை ஊடறுத்துச்செல்லும் தேடலாகும். மனிதன் தனது வாழ்வின் ஒவ்வொரு தேடலையும் தனது வாழ்வின் உயர்வுக்காக அர்த்தத்துடன் நகர்த்தும்போதே அவன் வாழ்வின் உண்மைத்தன்மை உயிர்ப்படைகின்றது.

ஒவ்வொருவனும் தனது தேவையை உரிமையை உணர்ந்து வளர்ச்சியடைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் பங்கும் பணியுமாற்றவேண்டியவனாகின்றான். கிராமிய (Rural) பின் புலங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு அவை தொடர்பான ஆய்வுகள், பங்குபற்றுதல்களுடன் (Participation) தீர்மானங்களை முன்வைக்கின்றன. கிராமிய மேம்பாடு (Rural Development) தனது உயர்ந்த எல்லையை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு பின் தங்கிய கிராமங்களையும், கிராம மக்களையும் அழைத்து நிற்கின்ற ஆர்வமுடையதாக முகிழ்க்கின்றது.

சமூகமேம்பாடு கருதிய விரிந்து செல்லும் ஆய்வுப் புலத்தில் கிராமிய மேம்பாட்டின் அவசியம், தேவை, அதன் சிறப்புத்துவம் இன்று பல மேம்பாட்டு ஆர்வலர்களால் முனைந்துரைக்கப்படுகின்றது. கிராமிய மேம்பாட்டின் தனித்துவமானது சமூக விஞ்ஞானப் புலமாக வெளித்தெரியினும் அதன் உள்ளடக்கமானது, சமுதாய மேம்பாட்டின் கருத்தாழத்திற்குள் தேடப்படவேண்டியதொன்றாகும்.

கிராமியச் சமுதாயத்தின் மேம்பாடு, கிராமிய மக்களுடனான இசைவாக்கம் மாறுபட்ட மனிதர்களிடையே களப்பயிற்சியில் அதன் காத்திரம், கிராமிய மேம்பாட்டில் மக்களின் வாழ்வியல் பழக்க வழக்கங்கள், நெகிழ்ச்சியான நகரத்துவத்துடன் நோக்கின் நெருக்கீடான கிராமத்துவப் பண்புகள் போன்ற இதன் அடிவேர்கள் சமூகமேம்பாட்டின் ஆணிவேரில் மையங்கொண்டுள்ளன.

கிராமம் அல்லது கிராமியம் என்பதற்கான ஒரு சமூக தரிசனத்தை எதிர்நோக்கின், " பாரம்பரிய தொழில் முறைகளான விவசாயம், மீன்பிடி போன்ற தொழில் முறைகளைக் கொண்டு நகர மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறைவான வாழ்க்கை நிலையையும் தனிமைப்படுத்தப்பட்ட தன்மையையும் கொண்டு குறிப்பிட்ட புவியியல் எல்லைப் பரப்பினுள் நிரந்தரமாக வாழும் மக்கள் குழுவே "கிராமியச் சமுதாயம்" என்று வரையறுக்கமுடியும்.

இவ்வாறான மேம்பாட்டிற்கு முரணான காரணிகளைத் தன்னுள்ளே அடக்கியுள்ள கிராமியத்துறையின் மேம்பாட்டில் கிராமியச் சமூகவியலின் ஆர்வம் குவிக்கப்பட்டுள்ளது. இதனையே பிரபல சமூகவியலறிஞரான A.R.Desai என்பவர் அழுத்திக்கூறுகின்றார்.

அதாவது "விஞ்ஞான ரீதியாகவும் முழுமையாகவும் ஒரு கிராமச் சமூகத்தின் அமைப்பு, தொழிற்பாடு என்பவற்றினூடாக அபிவிருத்தி நோக்குகளை ஆராய்ந்து அறிவதன்மூலம் கிராமியத் சமுதாயவியலின் ஆக்கச் சட்டங்களையும், விதிகளையும் விளங்கிக்கொள்ளமுடியும்" என்கிறார். இவர் கிராமிய மேம்பாட்டு நோக்கில், கிராமிய வளர்ச்சி பற்றிய கோட்பாட்டை விளங்கிக்கொள்வதில் அதிக அக்கறை செலுத்தினார். எனவே சமூக மேம்பாட்டில் கிராமிய மேம்பாட்டின் இடம் காத்திரமான ஒன்றாகும்.

கிராமிய மேம்பாடு என்பது கிராமியத் துறையினையும் அது சார்ந்த அனைத்து சிறப்பம்சங்களையும் உள்ளடக்குகின்றது. கிராமிய மேம்பாடு என்பது எல்லாக் கிராமங்களுக்கும் அவசியமானதா? எப்படியான வாழ்க்கைப் போக்குடைய கிராமங்களில் இக் கிராமிய மேம்பாட்டின் அவசியத்தன்மை உணரப்பட வேண்டும்? என்ற வினாக்களின் பின்னணியில் நோக்கும்போது கிராமங்களை மூன்று பிரிவிற்குள் அடக்கி அதற்கு விடைகாண முடியும்.

1.வளர்ந்த கிராமம்- இது நகரப் போக்குடையது.

2. வளர்ந்து வரும் கிராமம்.

3. வளர்க்கப்படவேண்டிய கிராமம்.

எனவே கிராமிய மேம்பாட்டின் தேவை இவ் இறுதி வகைப் போக்குடைய கிராமத்தின் மீதே மையங்கொண்டு விடுகின்றது.

எமது கிராமங்களிடையே இன்றைய சூழ்நிலைகளில் யுத்தத்தின் கோர விளைவுகளும், இயற்கை அனர்த்தங்களின் தரிசனமுமாக பல்வேறு துறைசார் சமூக சேவையை வளர்க்கவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

போர் நிலைமைகள் எமது பல கிராமிய வசந்த வாழ்வுகளை காணாமல் செய்துவிட்டன. அத்துடன் எமது பல கிராமங்கள் ஆக்கிரமிப்பு அடாவடித்தனங்களாய் இருப்புகள் நிலை குலைந்து காணாமல் போய்விட்டன. இவற்றை மீளக்கட்டியெழுப்புவதில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கள் எவ்விதமாகவெல்லாம் கற்பனைக் கணக்குகளைக் காட்டியும், கருத்துக்களை கணித்தும் வருகின்றன. 'தமிழர் வாழ்வு' என்பதனுள்ளேயே வட-கிழக்கு மக்களின் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் நேர்வழியல்லாத பயணங்களில் பாதி வழிகளைக் கடந்தும் கடக்காமலும் முன்னெடுக்கப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக தத்தம் உரிமைகளை மதிக்காத, கிராமங்களை மீளளிக்காத ஆக்கிரமிப்பு அடாவடித்தனங்களிலிருந்து வெளியேறாத சூழல் இருக்கும் வரையில் கிராமிய மேம்பாட்டின் வளர்வும், நிமிர்வும், நிறைவும் என்பது கேள்விக்குறியாகிவிடுகின்றது.

கிராமிய மேம்பாடானது பொருளாதார ரீதியில் வாழ்வதற்கான ஒரு ஸ்திரத் தன்மையை வழங்கி விட்டால் போதுமானதாகிவிடுமா? எனும் சந்தேகமும் எம் மனங்களில் எழுந்துவிடுகின்றது. இங்கு மேம்பாடு என்பதற்கு சமூகவியலாளர்கள் தரும் கருத்து தனித்துவம் மிக்கதொன்று. ஒரு கிராமத்தின் மேம்பாடு என்பது பொருளாதார உருமாற்றம் (Economic Transformation), சமூக உருமாற்றம் (Social Transformation), பண்பாட்டு உருமாற்றம் (Cultural Transformation) எனும் மூன்று காரணிகளினதும் நிறைவில் மலரக்கூடியதொன்று என்று கூறுகின்றனர்.

இவ்வாறான முழுமையான உருமாற்றத்தைப் பெறமுடியாத கிராமங்களில் மேம்பாட்டின் குறைநிலை மேலோங்கியிருக்கும். இவ்வாறான கிராமங்களில் வறுமை, தேக்க நிலை போன்ற சமூக நோய்க்கிருமிகள் மேம்பாட்டிற்கான எதிர்பார்ப்பை அரித்து அழித்து விடுகின்றன என்பது இவ் அறிஞரது கருத்தாகவுள்ளது.

**கிராமிய மேம்பாடு என்பது கிராமியத் துறையினையும் அது சார்ந்த அனைத்து சிறப்பம்சங்களையும் உள்ளடக்குகின்றது. கிராமிய மேம்பாடு என்பது எல்லாக் கிராமங்களுக்கும் அவசியமானதா? எப்படியான வாழ்க்கைப் போக்குடைய கிராமங்களில் இக் கிராமிய மேம்பாட்டின் அவசியத்தன்மை உணரப்பட வேண்டும்? என்றவினாக்களின் பின்னணியில் நோக்கும் போது கிராமங்களை மூன்று பிரிவிற்குள் அடக்கி அதற்கு விடைகாண முடியும்.**

திட்டமிடலாளர்கள், பொருளியலாளர்கள், சமூகவியலாளர்கள் கிராமிய மேம்பாடு குறைநிலையிலுள்ள கிராமியப் பகுதிகளில் விழிப்புணர்வு கொண்டுள்ளது எனும் ஒருமித்த கருத்தினை முன் வைத்துள்ளனர். கிராமிய மேம்பாட்டில் வறுமை,தேக்கநிலை என்பவற்றின் தீவிரத்தன்மையை குனர் மைர்டால் (Gunner Myrdal) நேக்ஸ் (Nurkse) போன்ற அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

குனர்மைர்டால் எனும் அறிஞர் தமது Asian Drama எனும் நூலில் தென்னாசிய சமூகங்களில் மேம்பாட்டிற்குத் தடையான காரணிகளை முன்வைக்கும்போது வறுமை என்பதனை முக்கியமான ஒரு மூலமாக முன்வைத்தார். நேக்ஸ் எனும் அறிஞர், இவ்வறுமையை குறை விருத்திப் போக்குடைய பகுதிகளில் எவ்வாறான பாதகத்தன்மையைக் கொண்டுள்ளன என்பதை தமதாய்வுப் புலத்தினின்று விளக்க முற்படுகின்றார். 'ஒருவன் வறியவனாய் இருப்பதற்குக் காரணம் அவன் வறியவனாய் இருப்பதே' என்ற இவரது கருத்து இங்கு சுட்டிக்காட்டப்படக்கூடிய ஒன்று.

எந்தவொரு பின்தங்கிய கிராமங்களின் வளர்ச்சியற்ற தேக்க நிலைக்கு அடிக்கட்டுமானமாக இருப்பது வறுமையே. வறுமை என்பதை மக்கள் "கஷ்டம்" எனும் சொல்லினூடாக வெளிப்படுத்துகின்றனர். அமெரிக்க சமூகவியலாளரான மில்ஸ் (Mills) சமூகத்தின் மேம்பாட்டிற்குத் தடையாகும் பிரச்சினைகளை சமூகப் பிரச்சினை, தனி மனித பிரச்சினை எனும் இரு பிரிவுகளூடாகக் காண்கின்றார். வறுமை என்பது பல கிராமங்களில் தனியார் பிரச்சினையாக இருந்தபோதும் அது பல சமூகப் பிரச்சினைகளுக்கு தூண்டுதலாக அமையும் பட்சத்தில் அது ஒரு சமூகச்சிக்கலாக மாறி கிராமிய மேம்பாட்டிற்குத் தடையாக அமைந்துவிடுகின்றது.

இன்று உலகம் முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் வறுமை சார்ந்த அக்கறை போதியளவு முன்னெடுக்கப்படவில்லை என்பதே உண்மை. சீரிய வாழ்வை மேற்கொள்ளமுடியாத இந்த நிலையானது பல வறிய கிராமங்களில் போதிய நிறையுணவின்மை, சுகாதார நலம் பெறும் வசதியின்மை, பொருத்தமான வீட்டு வசதியின்மை, குறைந்த கல்வித்தரம், குறைந்த வாழ்க்கைத்தரம், மூட நம்பிக்கைகளின் ஆதிக்கம் போன்ற விளைவுகளின் பாதிப்பு அதிகமாகக் காணப்படும்.

உலக வங்கியின் அறிக்கையின்படி வறியோரில் 80% மானோர் கிராமப் புறங்களில் வாழ்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கிராமிய மேம்பாட்டிற்குத் தடையாகும் வறுமையைத் தணிப்பதன் மூலமே கிராமிய மேம்பாடு என்பது சாத்தியமாகும். எனவே கிராமிய மேம்பாட்டில் ஆர்வம் கொண்டுள்ள குழுக்களை இனங்கண்டு அவற்றை முன்னெடுப்பதில் கிராமிய சமூக மேம்பாட்டிற்கான ஆர்வலர்களின் பங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டியதொன்றாகும்.


வறுமை என்பது உள்ளவரை மேம்பாடு என்பது அடைந்துகொள்ளமுடியாத ஒன்று என்பது 'Dadly Seers' எனும் அறிஞரது கருத்து ஒவ்வொரு பின்தங்கிய கிராமங்களிலும் வறுமைக்கான காரணங்களை ஆராய்ந்து சென்ற பல சமூக மேம்பாட்டிற்கான ஆய்வாளர்கள்,

இனியவள்

பின்வரும் காரணிகள் வறுமையைத் தூண்டி கிராமிய மேம்பாட்டை அழித்துவிடுகின்றன என்று கண்டறிந்துள்ளனர்.

* பாரம்பரிய தொழில் முறைகளில் தங்கியுள்ளதால் ஏற்படும் குறைந்த உற்பத்தித்திறன்.
* போதிய வருமானமின்மையும் சமனற்ற வருமானப் பரம்பலும்.
* கல்வியறிவின்மையும் பயிற்சித் திறன்மிக்க மனிதவளக்குறைவும்.
* வறியவர்கள் வறியவர்களே எனும் நிலைமையினை இறுக்கமாக வளர்க்க முயலும் சமூக அடுக்கமைவுகள்.
* தனிநபர் மேம்பாடின்மையும் குடும்பத்தலைவரது பொறுப்பற்ற போக்கும்.
* யுத்தமும் போர் விளைவுகளும்.
* போலி நம்பிக்கைகளும் நெகிழ்ச்சியற்ற சமூக நியமங்களும்.
* வறுமை எனும் இத் தனி மனித சிக்கலானது பல சமூக விளைவுகளை கிராமிய வாழ்புலங்களில் ஏற்படுத்திவிடுகின்றது.
* விரைந்து கீழ் நிலைக்குத் தள்ளப்படும் வாழ்க்கைத்தரம்.
* குன்றிய ஆரோக்கியமும் சுகாதார சீர் கேடுகளும்
* பாடசாலை இடைவிலகலும் சிறுவர் ஊழியமும்.

(20ஆம் பக்கம் பார்க்க)




நமது சூரிய மண்டலத்துக்கு வெயியே கண்டுபிடிக்கப்பட்ட மிகச் சிறிய ஒரு கிரகத்தை வானியலாய் வாளர்கள் அறிவித்துள்ளார்கள். நம் பூமியைவிட சுமார் ஏழரை மடங்கு அதிக எடையுள்ள இந்தக் கிரகம், நம் பூமியைவிட இரண்டு மடங்கு விட்டமுள்ள இந்தக் கிரகம் நாம் கண்டறிந்துள்ள கிரகங்களிலேயே கல்தரையுள்ள கிரகமாக அறியப்பட்டுள்ளது.




"கல்தரையுள்ள கிரகங்களை அறிவது நம் முக்கிய நோக்கங்களில் ஒன்று. இது போல இன்னும் பல கல்தரையுள்ள கிரகங்களை நாம் காணப் போகிறோம்." என்று வோஷிங்டனில் உள்ள கார்னகி இன்ஸ்டிட்யூஷனின் போல் பட்லர் தெரிவித்துள்ளார். "இது பூமியின் உறவினன்" என்று இவர் தெரிவிக்கிறார். இதுவரை சுமார் 150 சூரிய மண்டலத்துக்கு வெளியே யுள்ள கிரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை நம் வியாழன் போன்று வாயுக் கிரகங்கள். சமீபத்தில்தான் வானியலாய்வாளர்கள் சிறிய அதிக எடையுள்ள கிரகங்களை அறிய ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த புதிய கிரகம் கிளைஸ் 876 (Gliese 876) என்ற நட்சத்திரத்தை சுற்றிச் சுழல்கிறது. இது நம் சூரியனிலிருந்து 15 ஒளிவருடங்கள் தொலைவில் இருக்கிற M dwarf நட்சத்திரம் இதனைச் சுற்றி இரண்டு வியாழன் அளவுக்கு பெரிய கிரகங்கள் சுற்றி வருவது ஏற்கெனவே கண்டறியப்பட்ட ஒன்று. நட்சத்திரம் மிக மெல்லிய தாக ஆடுவதிலிருந்து இந்த மூன்றாவது கிரகத்தையும் கண்டறிந்துள்ளார்கள். இந்த ஆட்டம் மூலம், இந்தக் கிரகத்தின் எடையையும், இது சுமார் 1.94 நாட்களில இந்த நட்சத்திரத்தை சுற்றி வந்துவிடுகிறது என்பதையும் அறிந்துள்ளார்கள்.

இது சூரியனுக்கு மிக அருகாமையில் உள்ளதால் 400-750 செல்சியஸ் டிகிரி (200-400 டிகிரி செல்சியஸ்) வெப்பம் இருக்கலாம். இந்த வெப்பத்தினால் இதில் உள்ளவை ஆவியாகியிருக்கலாம். இது பெரும்பாலும் கல்தரையாகத்தான் இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த கிரகத்தின் எடையால் இதனால் ஒரு காற்றுமண்டலத்தை வைத்துக்கொள்ளமுடியும் என்றும், இதில் இருமபு, சிலிக்கன் போன்றவை அடிப்படையுடன் இருக்கும் என்றும், இதில் 200-400 டிகிரி வெப்பம் இருப்பதால், நீராவியும் இருக்கலாம் என்றும் தெரிவிக்கிறார்கள்.

மின்சக்திப் பற்றாக்குறை உலக நாடுகளில் மெதுவாகத் தலை தூக்கியிருக்கிறது! செல்வம் கொழித்த மேலை நாடுகளிலும் பற்றாக் குறையால் பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன! சமீபத்தில் அமெரிக்காவில் மின்சக்திப் பற்றாக்குறை கலி.:போர்னியாவில் தலைவிரித்தாடி வர்த்தகங்களும் , வாணிபத் தொழில்களும் கதவுகளை மூடி பலர் வேலைகள் இழந்ததை யாவரும் அறிவர்! சென்ற நூற்றாண்டில் திரீமைல் தீவு செர்நோபிள் அணுசக்தி நிலையங்களில் பெரும் விபத்து நேர்ந்து, கதிரியக்கத்தால் தீங்குகள் விளைந்து, புது அணுசக்தி நிலையங்கள் அமெரிக்காவில் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டன.




ஆயினும் உலகில் பெருமளவு மின்சக்தியை இன்னும் பழைய அணுமின் நிலையங்கள்தான் பரிமாறிக்கொண்டிருக்கின்றன. எதிர் காலத்தில் மின்சக்திப் பற்றாக்குறை வினாவுக்கு முடிவான விடை, பெருமளவில் மின்திறம் வெளியாக்கும் பிணைவுச் சக்தி ஒன்றே ஒன்றுதான்! ஆனால் அந்த நிலையத்தை வர்த்தக முறையில் உருவாக்கி இயக்குவதுதான் உலக எஞ்சினியர்களுக்கு மாபெரும் போராட்டமாகவும், திறமையைச் சோதிப்பதாகவும் இருந்து வருகிறது!

1952 நவம்பர் முதல் திகதியில் அமெரிக்காவும், 1953 ஆகஸ்ட் 20 இல் ரஷ்யாவும் வெப்ப அணுக்கரு ஆயுதமான (Thermo-Nuclear Weapon) ஹைடிரஜன் குண்டைத் (HBomb) தயாரித்து முதன் முதல் ஒரு குட்டிச் சூரியனை உண்டாக்கி வெடிக்க வைத்து வெற்றி பெற்றன. ஆனால் அணுப்பிணைவுப் பிழம்பை ஓர் உலை அரணுக்குள் அடக்கி நீடிக்கச் செய்ய எந்த நாட்டு விஞ்ஞானியாலும் இதுவரை முடியவில்லை! அப்பெரும் முயற்சிதான் அகில உலகில் இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானிகளுக்கு மிகச் சிக்கலான பொறி நுணுக்கப் பிரச்சினையாகவும் திறமைக்குச் சவாலாகவும் ஆகியிருக்கிறது! இந்த நிலையில்,


சூரியன் பிணைவுச் சக்தியை (Fusion Energy) உற்பத்திசெய்யும் பிரம்மாண்டமான ஓர் அணுக்கருப் பிழம்பு உலை (Plasma Reactor)! அண்ட வெளியில் ஆயிரம் ஆயிரம் சூரியன்கள், சுய ஒளி விண்மீன்கள் அணுப் பிணைவுச் சக்தியைத்தான், பிரபஞ்சம் தோன்றியது முதல் வாரி இறைத்துவருகின்றன! 4000 மில்லியன் ஆண்டுகளாக சூரியன் வினாடிக்கு 40 கோடி பில்லியன் MW வெப்ப சக்தியைத் தொடர்ந்து வெளியாக்கிக்கொண்டிருக்கிறது! தீக்கோளத்தின் நடுப்பகுதி உஷ்ணம் 20 மில்லியன் டிகிரி K! சூரியவாயு அழுத்தம், பூவாயு (Earth's Atmosphere) அழுத்தத்தை விட 400 மில்லியன் மடங்கு மிகையானது ! சூரிய கோள அமைப்பு வெங்காயத் தோல்கள் போல் அடுக்கடுக்காயிருக்கிறது. வாயுக்களின் அடர்த்தி (Density) ஈயத்தைப் போல் 12 மடங்கு சூரியன் பேரளவு உஷ்ணத்தில், தன் ஈர்ப்புப் (Gravitation) பேரழுத்தத்தில் வினாடிக்கு 4 மில்லியன் டன்வாயு அணுக்கருத் துகள்களைப் பிணைத்து அளக்கமுடியாத பிணைவுச் சக்தியை உண்டாக்குகிறது. ஒரு தம்ளர் நீரில் உள்ள ஹைடிரஜன் வாயுவைப் பரித்துப் பிணைக்க முடிந்தால் அதிலிருந்து வெளியாகும் சக்தி 600 ஆயிரம் லீற்றர் பெற்றோல் எரிந்துதரும் சக்திக்குச் சமமாகும்! ஆனால் பூமியில் பிணைவுச் சக்தியைத் தூண்டி வெளிப்படுத்த, உலைகளில் சூரியவாயு போல் பேரழுத்தமும் பெருமளவு உஷ்ணமும் விஞ்ஞானிகளால் உண்டாக்க முடியுமா?




பதட்டம் என்பது ஏதோ ஒரு சூழ்நிலையில் கோபத்தில் எழுந்து அடங்கும் உணர்வு என்றுதான் பலரும் நினைத்திருக்கிறார்கள். அது தவறு மனத்தாலும் உடலாலும் அது பல கட்டங்களைக் கடந்த பின்னர்தான் வெளிப்படும். ஏதோ ஒன்றைச் செய்யவேண்டும் என்ற முனைப்பு உள்ளுக்குள் எழுகிறது. அதற்கு இடையூறு ஏற்படுவதாக உணர்கிறீர்கள் உடனே அதைச் சரியாகச் செய்ய முடியுமோ முடியாதோ என்கிற சந்தேகம் உள்ளுக்குள் வந்துவிடுகிறது. மனம் பதைபதைப்பு அடைகிறது. நெஞ்சு துடிக்கிறது. ஒரு தடுமாற்றம் நடுக்கம் வருகிறது. நிதானம் இழக்கிறது. தவிப்பு ஏற்படுகிறது. இதனால் உடல் திசுக்கள் நிறைய கெடுகின்றன.

உடல் திசுக்கள் கெடக்கெட மனத்திலும், உடலிலும் ஒரு விறைப்பு நிலை உண்டாகிவிடும். இந்தச் சமயம்தான் மனிதர் க்ண்மண் தெரியாமல் நடந்துகொள்கிறார். அதாவது பதட்டம் அடைகிறார். எளிதில் பதட்டம் ஆகிறவர்கள் யார் யார்?

அவர்களுக்கு அடிக்கடி தலைவலி வரும், தலைக்கனமாக இருக்கும், கழுத்துவலி, உடல்வலி இருப்பதாக அடிக்கடி சொல்பவர்கள், திடீர் திடீரென்று இதயத்துடிப்பு அதிகரிப்பதாக உணர்பவர்கள், எடை குறைபவர்கள், உடல் பலவீனமாகவே இருப்பவர்கள், ஞாபகமறதி உள்ளவர்கள்,மனதை ஒரு முகப்படுத்த முடியாமல் தவிப்பவர்கள், மனச் சஞ்சலம் உள்ளவர்கள், கைகால்களில் நடுக்கம் உள்ளவர்கள், உள்ளங்கை மற்றும் கால் பாதங்களில் வியர்வை செ[illegible]வர்கள், தன்னம்பிக்கை குறைந்தவ[illegible]திலும் ஆர்வமில்லாதவர்கள், எப்போதும சோகமாகக் காட்சி தருபவர்கள், பசியின்மை, தூக்கமின்மை உள்ளவர்கள், எதன்மீதும் ஒரு




முடிவு எடுக்க முடியாமல் இருப்பவர்கள் ஆகியோருக்கு பதட்டம் எளிதில் வரும். இவையன்றி கீழ் வரும் ஐந்து முக்கிய அறிகுறிகள் தென்பட்டால் உடனே ரெட் சிக்னல் காட்டி விடவேண்டும். அது ஓரளவிற்கு பதட்டத்தைக் குறைக்க உதவும்.

**1.நெஞ்செரிச்சல் (Heartburn):-** பதட்டத்தால் வயிறானது அமிலத்தை அளவுக்கதிகமாக உற்பத்தி செய்துவிடும். அத்தோடு எண்ணெய்ப் பதார்த்தம் உள்ளிட்ட சிலவகை உணவுகள் உண்ணும்போது அவை மேலும் தீவிரமடைந்து அமிலம் பின்னோக்கித் தள்ளப்பட்டு நெஞ்சில் வந்து உட்கார்ந்து கொள்ளும். அப்போதுதான் நெஞ் செரிச்சல் வந்து கஸ்ரப் படுத்தும் பிறகு பதட்டத்துக்குக் கேட்கவே வேண்டாம்.

விடுபடவழிகள்:- ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள். இது பதட்டத்தைக் குறைப்பது மட்டுமல்ல உணவுக் குழாயில் தங்கியுள்ள அமிலங்களையும் துடைத்தெடுத்துவிடும். தற்காலிகமாக நெஞ்சு எரிச்சல் வராமல் இருக்கும். "பாஸ்ட் பூட்" கொழுப்பு அதிகமுள்ள உணவுகள் ஆகியவற்றை உடனே நிறுத்திவிடுங்கள்.

**2. கை நடுக்கம் :-** கை நடுக்கம் இருந்தாலே மனிதர் கோபத்தில் இருக்கிறார் என்ற முடிவுக்கு வந்துவிடலாம். தங்களுக்குச் சேரவேண்டிய பாராட்டை வேறு யாருக்காவது மேலதிகாரி தந்தால் முதலில் கையை மேசை மேல் குத்துவதுபோன்று செயல்படுவதைக் கவனித்து இருக்கலாம். கா.:பின் என்ற நச்சு உடலில் இருந்தாலும் இந்த நிலை ஏற்படும்.

விடுபட வழிகள்:- உங்களுக்குச் சேர வேண்டியதை மேலதிகாரியிடம் கேட்டுப் பெற முயற்சிக்கலாம்.

**திடீர் தலைச்சுற்றல்:-** பதட்டமாக இருந்தால் சிலருக்குத் திடீரென்று தலைச் சுற்றல் வரும். இரத்த ஓட்டம் தடைப்பட்டிருப்பதற்கும் இது ஒரு அறிகுறியாகும்.

விடுபட வழிகள்:- தலைச்சுற்றல் உள்ளவர்கள் சீனியின் அளவைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை தண்ணீர் குடிக்கவேண்டும். உங்களுக்குத் தலைச்சுற்றல் இருந்தால் உடனே கீழே உட்கார்ந்து இந்த மூச்சுப் பயிற்சியைச் செய்யுங்கள். காற்றை நன்றாக ஆழமாக உள் இழுத்து அதை நுரையீரலில் சிறிது நேரம் தங்க வையுங்கள். பின்னர் மெதுவாக மூக்கின் வழியே காற்றை வெளியேற்றுங்கள். இதனால் போதுமான அளவிற்கு ஒட்சிசன் கிடைத்துவிடும். தலைச்சுற்றல் இருக்காது. மீண்டும் ஒரு முறை தலைச்சுற்றல் வந்தால் உடனே டாக்டரிடம் செல்லுங்கள்.

**தோல் அரிப்பு:-** சிலருக்கு பதட்டம் ஆரம்பமாகும் போது ஹார்மோன் உற்பத்தியில் மாற்றம் ஏற்பட்டு தோல் திசுக்கள் பாதிக்கப்பட்டு அரிப்பு ஏற்படும்.

**விடுபட வழிகள் :-** அரிப்புக கண்டவர்கள் உடனே பென்சில் அல்லது கையில் கிடைக்கும் பொருள்களால் உடம்பைச் சொறியக்கூடாது. பிளாஸ்டிக் பையில் ஐஸ் கட்டிகளைப் போட்டு அரிக்கும் இடத்தில் வைக்கலாம். இதற்கான மருந்து இருந்தால் பூசலாம்.

**அதிகப்பணம் செலவழிக்கும் போது:-** எதிர்பாராமல் அளவுக்கு அதிகமாக பணம் செலவழிக்கும் நிலை வந்தால் சிலருக்கு பதட்டமாக இருக்கும். இது உடல் சம்பந்தப் பட்டதல்ல. என்றாலும் மனதளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதே.

கடைக்குச் செல்லும்போது கையில் உள்ள பணத்திற்குத் தக்கபடி என்னென்ன பொருட்கள் வாங்குவது என்று திட்டமிட்டுச் செயல்படுவது பதட்டத்தைக் குறைக்க உதவும்.

# காரசாரம்

“பெண்ணென்றால் பேயும் இரங்கும்.”
“பெண் அடிமைநிலை ஒழியவேண்டும்”
“பெண்கள் விடுவிக்கப்படவேண்டும்”

இத்தியாதி பெண்கள் பற்றிய சுலோகங்களும் சரி கவிதைகளும்சரி பெண்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்பதை மையமாகவைத்தே எடுத்துக்காட்டப் படுகின்றன. ஆக பெண்கள் இன்னும் முன்னணிக்கு வரவில்லை அப்படித் தானே. பெண்களே!

உங்கள் தடைகளை நீங்கள்தான் அறுக்கவேண்டும் எனக் கூறுவோருக்கு இது சமயசந்தர்ப்பப் பேச்சாகும். தற்போதெல்லாம் பெண்கள் விடுதலைபற்றிப் பேசுவோருக்கு மிக நன்றாகவே தமது உள்நோக்கமும் புரியும். பெண்கள் தமது வீட்டுவேலைகளுடன் வீட்டுச்சுமையையும் ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டாலும் இதையும் ஒரு மனநிறைவோடு செய்யப் பழக்கப் பட்டுவிட்டனர்.



உதாரணமாக நெடுங்கேணிப் பிரதேசத்துப் பெண்களில் அநேக விவசாயிகளையும், நகரப்பகுதி உத்தியோகம் பார்க்கும் பெண்களையும் எடுத்துநோக்கலாம். இங்கு மட்டும்தான் என்பது பொருளல்ல. இப்பிரதேசங்களை உதாரணமாகத்தான் சொல்கிறேன். ஒரு பெண் தோட்டத்துக்கு நீர் இறைப்பது, மருந்தடிப்பது, மாடுகண்டு பார்ப்பது, கட்டிமேய்ப்பது, தோட்டத்தில் கூலியாட்களுடன் கூடி வேலைசெய்வது. (கூலியாட்களுடன் தானுமொரு ஆளாக நிற்காவிட்டால் கூலிக்காரர் ஐஸ் அடிப்பார்களாம்) போன்ற வேலைகளையெல்லாம் செய்வது சர்வ சாதாரணம். போதுமா? இந்தப் பெண் வீட்டை நிர்வகிப்பதற்கும் கூட அதிகாரம் பெற்றிருக்கிறாள்.

அப்படியானால் ஆண் என்ன செய்கிறான். உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வேலை. காசைமட்டும் கணக்குத் தவறாமல் மனைவியிடம் கணக்குக்காட்டி கொடுக்கவேண்டும். அதில் தான் குடித்த சாராயக்காசும் அடக்கம்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு கொண்டுபோய் விடவேண்டும். கூட்டிவர வேண்டும். கலியாணவீடுகள், கோயிற் திருவிழாக்கள், ஊர்ப்பயணங்கள் போன்ற வெளியிடங்களுக்கு மனைவியையும் பிள்ளைகளையும், அவளே வாங்கித்தந்த மோட்டார்சைக்கிளில் ஏற்றி இறக்குதல், கூடவே பட்டுவேட்டி அல்லது கோட்சூட் சகிதம் கூடமாடப் போய்வருவது, வீட்டுக்கு வருவோரை வரவேற்றல், முக்கிய விடயமாக இருந்தால்... அவாவைக் கூப்பிட்டுவிடுதல் போன்றவற்றைக் கனகச்சிதமாகச் செய்தல். வேறென்ன. மிக முக்கியமான விடயம்.

அவர்கள் பகுதிகளில் நிர்வாக சபைகளிலும் கூட பெண்கள் அதிகம் தான். இந்தப் பெண்களின் எந்தவேலையையும் ஆண் பங்கிடவில்லை. அவள் தோட்டத்திலிருந்து வந்தவுடன் “மெய்யேப்பா செல்லையாண்ணை வந்து கனநேரம். ஒரு தேத்தண்ணியூத்தன்” என்பதும். “என்னப்பா கறி வைக்கப் போறாய்” என்பதும். பெண்கள் வேலை என்பதை அவர்கள் மறக்காமல் வைத்திருக்கிறார்கள். இது பெண் விடுதலையா, இது ஒருபுறமிருக்க உத்தியோகம் பார்க்கும் பெண்களும் இதேயளவு பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

ஒருபடித்த அனுபவமுள்ள, மற்றவர்களுக்கு பெண் விடுதலை பற்றி அறிவுரை கூறுகிற ஒரு குடும்பஸ்தருடைய மனைவி என்னிடம் கூறியதாவது. “நான் வேலைக்குப்போனாத்தான் எனக்கோ பிள்ளையளுக்கோ தேவையானதை இஷ்டப்படி வாங்கலாம். இவர்... ஒரு உதவியும் இல்லை” என்று.

அவர் சமூகத்தில் முக்கிய புள்ளியாக இருந்தார். ஒருநாள் அவரைத் தேடி அவருடைய நண்பர் வந்துவிட்டார். தொலைவிலிருந்து வந்தவர், வீடும் சிறியது. அவரை வெளியே விடவும் முடியாது. அவருடன் வீட்டிலிருந்தாலும்... அவர் என்ன நினைப்பாரோ என்ற பயம். அந்தப்பெண் வந்தவருக்குத் தேநீர் கூடக்கொடுக்க வில்லை. வெளியே நின்று கொண்டிருந்தாள். ‘ஏன்’ என்று கேட்டதற்கு... ‘என்னதானிருந்தாலும் என்ர இவருக்குப் புரிந்துணர்வில்லை. பிறகு தேவையில்லாம ஏன் பிரச்சினைய’ என்றாள் இந்தப்பெண். பல ஆண்களுடன் ஒன்றாக அலுவலகம் செல்பவள்தான்.

இன்னுமொரு பெண் இளமையில் விதவையானவள். இரண்டு குழந்தைகள். இராணுவத்தாக்குதலொன்றில் அவள் கணவனை இழந்தவள். அவளுடைய உறவினர்களே படிப்படியாக அவளை நிராகரித்து விட்டனர். ஊராருடன் அவள் தொடர்புவைத்துக்கொள்வதும் பேச்சளவில்தான். ஏன் இப்போது கிராமத்தில் அவளைப்பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. அவளுடன் நேரில் நல்லவிதமாகக் கதைப்பவர்களும் கூட அப்பால் போனதும் ‘அவள் ஒரு மாதிரி’ என்பார்கள்.

அந்த ஒரு மாதிரி ஆண்களைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. ஊருலகம் மெச்சும்படி ஒரு பெண் வாழ்ந்தால் யாரும் ஏற்பதாக இல்லை. இன்று பெண்கள் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள் எனப் பறைசாற்றும் ஏராளமான இடங்களில் பெண் என்ன செய்கிறாள். ஆணும் பெண்ணும் சமமாக வேலைசெய்யும் ஒரு நிறுவனத்தில் ஆண்டுவிழா அங்கு பெண்களுக்கும் விழா சார்ந்தவேலைகள் ஒதுக்கப்படுகின்றன என்று வைப்போம்.

மலர்மாலை ஒழுங்கு, சிற்றுண்டி தேநீர் ஒழுங்கு, வரவேற்பு, நன்றியுரை என்றே அமையும். எங்கள் பெண்களும் இந்த ‘கெச்சங்கெட்ட’ வேலைகளிலாவது தங்கள் முகம் வருகிறதே என்பதற்காக தலையலங்காரம் செய்து, அதில் செயற்கைப் பூக்களை குழையும்கொப்புமாக குத்திச்செருகி, கண்ணுக்கு மை, நகத்துக்குப் பூச்சு, உதட்டுக்குச் சாயம், கழுத்துக்கு அட்டியல், பதக்கஞ்சங்கிலி, கை நிறையக் காப்புகள், பத்துவிரல் மோதிரம், காதில் தோடு, சிமிக்கி, மயிர்மாட்டி, காலுக்கு நிலமட்டத்திலிருந்து அரையடி உயர்த்திய செருப்பு, அணிந்திருக்கும் புடவையிலிருந்து நகைவரை அரைவாசி இரவலாகத்தான் இருக்கும். கூட்டத்தில் பலருடைய கண்கள் அவர்களைச் சுற்றியே இருக்கும். என்பாட்டி சொல்வார் “பொண்டுகளுக்கு மினுங்கினாக்காணும்” என்று. சாதாரண துணிகளில் கிடக்கும் மின்னல்களே இதற்குச்சாட்சி.

பெண்களை முன்னேறும்படி கருத்தூட்டி வரும் எந்தச் சமூக முன்னேற்ற நிறுவனங்களும் உண்மையில் பெண்களை முன்னேற்ற உண்மையான அக்கறையை எடுப்பதில்லை. ஏதோ ‘கூட்டங் கூட்டி மீற்றிங் வச்சுப்போட்டுப் போகினம்’ என்று மக்கள் கூறுமளவிலேயே உள்ளன.

சிறப்பான, அவசியமான, நேர்மையான தேர்வுகள் எதுவுமின்றிய தொழிற்பயிற்சிகள் நடைபெறுகின்றன. குறிப்பாக இருபத்தைந்து பெண்கள் தையல் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்றால் இந்த இருபத்தைந்து பேரும் பயிற்சி முடித்ததும் அந்தத் தொழிலை மேற்கொள்கின்றார்களா? என்ற கேள்விக்குப் பூஜ்யமே விடையாகக் கிடைக்கும். பயிற்சிக்காலத்திலும் கூட முக்கியமாக நடைமுறைக்குத் தேவையான விடயங்கள் கற்பிக்கப் படுவதில்லை.

சரி ஆறு மாதமோ ஒரு வருடமோ பயிற்சி செய்யும் பெண் சிறு சேமிப்புக்கு ஊக்கமளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் ஒரு தையல் எந்திரத்தை கொள்வனவு செய்ய முடியும் என்பது ஏன் ஊக்கப்படுத்தப்படவில்லை. எல்லா வசதிகளும் இருந்தும் பொழுது போக்காகத் தையல் பழகுவோரே அதிகம். தையல் பயிற்சி எடுத்தாலும் தமது உடைகளைக் கூலி கொடுத்துத் தைப்பதைக் காணலாம்.

ஆக, பெண்களுக்கு போதிய ஊக்குவிப்புக்கள் சரிவர வழங்கப்படுவதில்லை. ஒருவகையில் வழங்கப்படும் உதவிகளையோ உதவித் தொழில்களையோ மேம்போக்காகப் பெண்களே பெற்றாலும் அவற்றை வைத்து பயன் பெறும், அவற்றைப் பராமரிக்கும் நபர்களாக ஆண்களே உள்ளனர். இதற்கு அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட படித்த மகளிர் விவசாயத் திட்டங்களைக் கூறலாம்.

மகளிர் அனைவரும் உற்சாகமாக இத்திட்டத்தைச் செயற்படுத்திவந்தனர். காலப்போக்கில் இவர்கள் திருமணம் செய்து குழந்தை குட்டிகளை பெற்றதும் தங்கள் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையான ‘மகளிருக்கான’ என்ற விடயத்தை இழக்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர்.

காரணம் அவர்களது கணவன்மார், அப்பிரதேச நிர்வாகங்களில் தலையிட முடியாமல் இருந்ததுதான். ஆனால் அவர்களது தலையீட்டை இத்திட்டத்தின் அடிநாதமான “மகளிர்திட்டம்” என்பது ஏற்கவில்லை. எனவே அப்பகுதி மகளிர் கணவன்மாருடைய நெருக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் நிர்வாகங்களைக் கைவிடவேண்டியதாயிற்று.

மேலாக பெண்கள் பற்றிய பத்திரிகைகளின் கண்ணோட்டம் இன்னும் பெண்களுக்குக் கண்களை அழகாக வைத்திருப்பது எப்படி? நகங்களைப் பாதுகாப்பது எப்படி? அல்வா செய்வது எப்படி? என்பதுபோன்ற விடயங்களையே பெரிதாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

ஒட்டுமொத்தமாக பெண் விடுதலை பற்றிப் பெரிதாகப் பீற்றிக்கொண்டிருக்கும் எந்த ஒரு தனிநபருக்கும் நிறுவனத்துக்கும் அவள் விடுதலை பெறுவது நோக்கமல்ல. அவள் அடிமை நிலையைத் தக்கவைத்துக்கொண்டே தம்மை உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொண்டிருப்பதே நோக்கமாகும் என்பதை எல்லோருமே ஏற்கத்தான் வேண்டும். ஒரு முற்போக்கான இருவரும் சமமாக வாழும் சமுதாயத்தைக்காட்டும்வரை.

## பெண் என்ன செய்கிறாள்..?

-மாயா-



## விசுக் விசுக் விசாலாச்சி

‘கிழிஞ்சு போச்சுடா கிட்டிணா- அள்ளிக் கட்டுறா அருச்சினாண்டானாம்’ கேட்டியேடாப்பா கதைய இருந்தாப்போல தேர்தல் கமிசனர் ஒரு “பூமராங்” விட்டிருக்கிறார். இந்தவருசம் தேர்தல் நடத்திப்போட வேணுமெண்டு அதுகும் ஆரோ ஒரு மந்திரிக்குத்தானாம் சொல்லியிருக்கிறார். அதுக்கு முதல் அநுராத் தம்பி ஒரு வாக்கியஞ் சொல்லியிருக்கிறாரடா- அதாவது சனாதிபதித் தேர்தல் அடுத்த வரியம் நடுப்பகுதியிலதான் நடக்குமாம் எண்டு. இப்ப நாட்டுக்குள்ள இந்த தேர்தல்தானடா முக்கியமான பிரச்சினையாகக் கிடக்கு. பின்ன, சுனாமியடிச்ச சனமே, இல்லாட்டி... சமாதானமே-

அட அதுகுமில்லாட்டி ஊருகளுக்க நடக்கிற படுகொலையளே. ஒண்டுமில்லயடா ஆர் கதிரையில இருக்கிறது. ஆர் கீழநிக்கிறது. எண்டதுதான் பிரச்சினையாக கிடக்கு, இதுக்க அவுஸ்திரேலியாக்காரர் சும்மா கிடக்க மாட்டாமை உந்த சனாதிபதித் தேர்தலை நடத்துங்கோவன் எண்டு சொன்னவையாம். அ, சொன்னவை என்ன சொல்லிப் போட்டினம். இது இவைக்குத் தேவையில்லாத வேலையெண்டெல்லே தம்பி அநுராவுக்கு கோவம் வந்திட்டுது. இது உள்நாட்டு விவகாரம், நான் ஒரு பெரிய மந்திரி எண்டதால சொல்லுறன் உது உங்கடவிசயமில்ல எது இது உங்கட விசயமில்ல எண்டிட்டார்.


சமூகத்தில ஒரு சட்டப் பிரச்சினை கிடக்கடா எப்பிடியெண்டா நாலு சுவருக்க நடக்கிறது ரோட்டுக்கு வரக் கூடாதெண்டு ஆனா நாலு சுவருக்கால ஐயோண்டு கத்திக் கேட்டா... அப்ப ஆரும் போகலாம். இதுதான்ரா சர்வதேசச் சட்டமுமடா. அதென்னடா உங்கட ஊருக்க புயலடிச்சா அது உலக விவகாரம். சுனாமியடிச்சா உலக விவகாரம். ஓடிவாருங்கோண்டு கத்திற. சண்டய வெல்லேலாட்டி ஓடிவாருங்கோ காப்பாத்துங்கோண்டு கத்துறது.

மற்றதெல்லாம் உங்கட சொந்தலுவல். எல்லாம் ஒரு நாடகமும் நடப்புந்தானேடா நடக்குது. சிறீமான் பொதுசனம் இருக்கிறாரே இவருக்கு உதுகளொண்டும் விளங்காதெண்டு நினைக்கிறியளே. அதெல்லாஞ் சும்மா அம்மாவும் ஐயாவும் கதிரைக்கடிபட, ஊர்வழிய சனம் புத்தர் சிலைக்கடிபட, ஜேவீப்பி சிகலஉறுமயவெல்லாம் பொதுக்கட்டமைப்புக்கடிபட, ஆமிக்காறர் உயர்பாதுகாப்புக்கு அடிபட, சிறீமான் பொதுசனம் எல்லாத்துக்கும் முகங்கொடுத்துக்கொண்டு தன்ர சீவியத்துக்கு என்ன செய்யிறதெண்ட கவலையில, மாடுபிடிக்கிறவன் கயித்த விட்டிட்டு மாட்டின்ர வாலப்பிடிச்ச கணக்கில திரியிறாங்கள்.


உந்த தும்பவிட்டு வாலைப்பிடிக்கிறவை எல்லாத்தையும் ஒருக்காலும் யோசிச்சுப்பாக்கிறதில்லப் பொடியா... ஆக்கிற அரிசியிலும் அரசியல் கலந்துதான்ரா இருக்கு. சும்மா பேப்பரப்பாக்கிறது கூடி அரட்டை அடிக்கிறது. அதோட போய் தன்ர வீட்டு வேலையைப் பாக்கிறது. மற்றப்படி உந்த நாடகம் பாட்டெல்லாம் எங்கட வாழ்க்கையைப் பிறவளமாத் திருப்பி விட்டுடும் எண்டு ஆரென் நினைக்கினமே. அண்டைக்கு அப்பிடித் தான் உச்ச நீதிமன்றம் பொதுக்கட்டமைப்புக்கு தீர்ப்புக்குடுக்கிதாம். என்னடா கதையுது. பொதுக்கட்டமைப்பு சட்டமில்ல அது ஒரு ஒழுங்கு விதிஎண்டுதானே சொன்னவை. அதிலயும் சனாதிபதி தன்ர வீட்டோப்பவரிலதானே உதை செய்தவா.

பிறகென்னடா உச்ச நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லுது. அது ஒரு வழக்கா? அதில ஒரு வழக்கெழ காரணமிருக்கா, அது ஆற்றையும் உரிமைய மீறுதா எண்டதெல்லாம் பாத்தி நக்கினம். ம்... பிறக்கிற குழந்தை பொடியனோ பொட்டையோண்டு பாக்கமுதல் பேர் தேடின கணக்குத்தான் உது. என்னவோ. அந்தநாளயில சொல்லுவினமே ‘நாய் வாழ்ந்தா என்ன பூனை சிம்மாசனமேறினா என்ன’ண்டு. நமக்கு நமக்கெண்டு ஒரு வீடுவாசலிருக்கிறது. எவ்வளவு வசதியுஞ் சந்தோசமாயுமிருக்கு. அது போலதான் நமக்கெண்டு ஒரு நாடும் வேணுமெடா.

இந்த பிசாத்து மந்திரிமாரும் இவயட சகுனிமாமாக் கூட்டணியளும் எங்களுக்கேதும் பாதிப்போ இல்ல நயநட்டமேதும் வருதோ. இதை வச்சு இவை அரசியல் நடத்தி நாட்டைச் சுடுகாடா மாத்தினாலும் எங்களுக்கென்னடா. சும்மா கதிரை கதிரையெண்டு உங்க கதிரைச்சண்டையள்தானே நடக்கிது. பின்ன நாடு நடுக்கடல்ல தத்தளிக்குது அங்கால சேதுவக் கிண்டி மண்டையில போட்டாலும் பறவாயில்ல புலியள அழிக்க உதவி செய்தாக்காணும். விமானப்படையெண்டும் கடல்படையெண்டும் போய் உதவி கேக்கினம். ஆனா இவையாரும் உள்ளாட்டு அலுவல்ல தலைபோடக் கூடாது. அ...உள்நாட்டலுவலெண்டா என்னடா.




# மனதைத் தொலைத்துவிட்டு



**சந்திரகாந்தா**

வீட்டுச்சோலிகளால் கடந்த மூன்று வாரங்களாக கிழக்கிலுள்ள சுனாமி அகதி முகாமுக்குப் போக முடியவில்லை. இன்று எமது கழக செயலாளர் சந்திரமுகி அழைத்த போது, எப்படியும் போகவேண்டும் என்று முடிவுசெய்தேன்.

ஆரம்ப நிவாரணப் பணிகளுக் குப் பின்னர், தற்போது தீவிரமாக தொடர்ச்சியான உளவளத் துணை யினைத் தெரிவுசெய்யப்பட்ட சில பாதிப் புற்றவர்களுக்கு வழங்கிவருகிறோம்.

சுனாமி முகாம் மனதில தோன் றியபோது மேரி எனது நினைவுக்கு வந்தாள். பாவம், தனது கைக் குழந்தை உட்பட குடும்பத்தில் அனைவரையும் பறிகொடுத்த துர்ப் பாக்கியசாலி, பலரை என் ஆற்றுப் படுத்தலால் தேற்றியபோதும் அவளை எனது உளவளத்துணை மதிநுட்பங்களைப் பயன்படுத்தியும் சிறிதாவது தேற்ற முடியவில்லை.

நாளை காலை கொழும்பி லிருந்து புறப்படவேண்டும். வீட்டிலே நிறைய அலுவல்கள் எனக்காகக் காத்திருக்கின்றன. மூத்தவள் அகல்யாவுக்கு இவ்வாரம் "சீமா" பரீட்சை. இளையவள் அனுசுயா உயர்தரப்பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருக்கிறாள். நான் அருகில் இல்லாவிட்டால், இருந்து படிக்காமல் படுத்துவிடுவாள். இவரும் வைத்திய சாலையும், நோயாளர்களுமென ஒரே பிசியாக இருக்கிறார். எனினும் பயணத்தைத் தவிர்க்கமுடியவில்லை.

பொது விடயங்களில் இறங்கி விட்டால் இப்படித்தான். வீட்டு வேலைகளைப் பார்க்க முடிவ தில்லை. நல்லவேளை அம்மா என்கூடவே இருப்பதால் பெரிய ஆறுதல். விட்டுவிட்டு அடிக்கடி சமூகப் பணிகளுக்காக போய்வரலாம். மருத்துவராக என் கணவரும் எனது சமூகப் பணிகளுக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருந்தமையும் எனது பணி களுக்கு உத்வேகமளிக்கிறது.

கடந்த சில மாதங்களாக எமது பணி சுனாமியால் பாதிக்கப்பட்டவர் களின் நலனுக்காக உழைப்பதாகவே இருந்தது. நடந்ததோ பெரிய அனர்த் தம்! அரை மணி நேரத்தில் ஆயிரக் கணக்கான உயிர்களைக்காவு கொண்டு பலகோடி ரூபா பெறுமதி யான சொத்துக்களையும் ஏப்பம்விட்டு விட்டு பழையபடி சாதுப்பிள்ளை போல் போயுறங்கிவிட்டது கடல்.

மகளிர் லயன்ஸ் கழகத் தலைவி என்கிறமுறையில், எனது பங்களிப்பையும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்ய ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை நாம் சந்தித்த அனுபவங்கள் ஏராளம்.

முதலில் செய்தி அறிந்ததும் உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஆராய்ந் தோம். மாவட்டக்கிளைக் கூட்டத்தில் எமக்குக் கிழக்குமாகாணக் கிராமங்கள் இரண்டு ஒதுக்கப்பட்டன. முதலில் பல்வேறு தனவந்தர்களை அணுகி பொருளுதவியும், பண உதவியும் பெற்று அனைத்தையும் ஒன்றுதிரட்டினோம்.

கணிசமான அளவு சேர்த்ததும் எமக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதி களுக்கு அவற்றை லொறிகளில் ஏற்றிக்கொண்டு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டோம். அத்துடன் பாதிப்புக்குள்ளானவர் களுக்கு உளவளத்துணை வழங்க வும் எமது கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த திகதியில் பொருட் களை ஏற்றிக்கொண்டு கிழக்கு நோக்கிப் புறப்பட இருந்தவேளையில் சிலர் வந்து நிவாரணப் பொருட்களைத் தென்பகுதிக்குக் கொண்டுசெல்லும்படி வலியுறுத்தினார்கள். தென்பகுதிக்கு எமது மாவட்டத்திலுள்ள பிற கழகங் கள் அவசர உதவிகளைச் செய்து வருவதாகவும், இவை கிழக்கு மாகா ணத்துக்காக ஒதுக்கப்பட்டவை என் றும் எடுத்துரைத்தோம். எனினும் அவர் கள் ஒரு லொறி [illegible]ளையாவது தென்பகுதிக்கு [illegible]வேண் மென்று கட்டாயப்[illegible]தின[illegible] எவ்வளவோ வாத[illegible]யும் விடுவதாயில்லை. இறுதிய[illegible] லொறி பொருட்களை தெற்[illegible]க்கு அனுப்பவேண்டியதாயிற்று.

கொழும்பிலிருந்து புறப்பட்ட எமது லொறிகள் கிழக்கு நோக்கி விரைந்துகொண்டிருந்தபோது மறிக்கப்பட்டன. ஓரிரு லொறிகளைத் தாம் சொல்லுமிடத்திற்குக் கொண்டு சென்று விநியோகிக்குமாறு நிர்ப்பந்தித்தார்கள். அந்தப் பகுதிகள் சுனாமியால் பாதிக்கப்படவில்லையே என்று வாதாடினேன். பொலிசாருடன் செல்போனில் தொடர்புகொண்டேன். அவர்கள் தமது மொழியில் தம் மிடையே உரையாடிவிட்டு மெல்ல நழுவினார்கள். போகும்போது இனத்துவேசமான வார்த்தைகளால் எம்மைத் திட்டிவிட்டுச் சென்றார்கள்.

நாம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அடைந்தபோது மீண்டும் தலையீடு. அங்கிருந்த சில இளைஞர்கள் தாம் சொல்லும்படி தான் விநியோகிக்கவேண்டும் என்றார்கள். சில இடங்களுக்கு அதிக நிவாரணம் கிடைத்துள்ள தாகவும், இன்னும் சில இடங் களை பொருட்கள் சென்றடைய வில்லை எனவும் எடுத்துச்சொல்லி, அவ்விடங்களுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச்செல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர்களது கோரிக்கையில் நியாயம் இருப்ப தாகப்பட்டது. எனவே அப்பகுதிக்கு நாம் கொண்டுவந்த பொருட்களை எடுத்துச்சென்றோம்.

சுனாமி முகாம்களில் தங்கி யிருந்த பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்தபோது மனதில் இரத்தக் கண்ணீர் சுரந்தது. முகாம்கள், பாட சாலைகளிலும், தேவாலயங்களிலும், மசூதிகளிலும், [illegible]யில்களிலும் அமைந்திருந்தன. [illegible]திக மக்கள் தங்கியிருந்தமையினால் நெருக்கடி நிலவியது. மழையும் விட்டுவிட்டுப் பெய்துகொண்டிருந்தது.

பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தார்கள். அவர்களது முகங்கள் கவலைகளி னால் இருண்டு வாடிப்போயிருந்தன. வயதானவர்கள், குழந்தைகள் என இருபாலாரும் தமது எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையுடனும், ஒருவித ஏக்கம் கலந்த பய உணர்வு டனும் இருந்தார்கள்.

காயப்பட்ட மற்றும் நோயினா லும், கடல் தாக்கத்தினாலும் பாதிக் கப்பட்டவர்களும் ஆரம்ப சிகிச்சைக் குப் பின்னர் அங்கேயே தங்கவைக்கப் பட்டிருந்தார்கள். தகுந்த இருப்பிட வசதிகள் இன்றி அவர்கள் சொல் லொணாத் துயரில் வாழ்ந்துகொண்டி ருந்தார்கள்.

நாங்கள் கொண்டு சென்ற நிவாரணப்பொருட்களை முண்டியடித் துக்கொண்டு வாங்கினார்கள். எனி னும் ஒருசிலர் எதிலும் ஆர்வமின்றி ஏனோ தானோ என்றிருப்பதையும் அவதானித்தேன். உணவு மாத்திர மன்றி உடை, படுக்கை, குடிநீர், கழிப் பறை மற்றும் சுகாதார வசதிகள், அத்தியாவசிய தேவைகளாக இருந் தன. சுற்றுப்புறக் கிணறுகள் யாவும் கடல்நீரால் சவராகியிருந்ததால் தண் ணீர்ப் போத்தல்களை முண்டியடித்து வாங்கினார்கள்.

முகாம்களில் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயச் சூழல் காணப் பட்டது. பே[illegible]ய மருத்துவ வசதிகள் இருக்கவி[illegible]. மக்கள் மிகவும் நெருக்கமாகத் தங்கியிருந்தார்கள். மலசலகூடம் முறையாக இல்லாமை யினால் அவர்கள் பெரும் சிரமங் களை அனுபவித்துக்கொண்டிருந் தார்கள். அத்துடன் நோய்கள் பரப்பும் ஈக்களும் பெருகிக்காணப்பட்டன.

பெண்களின் நிலை பற்றிச் சொல்லவே தேவையில்லை. குழந்தை கள் தாகத்தினாலும், பசியாலும், வீறிட்டுக்கத்திக்கொண்டிருந்தன. இன்னும் சில குழந்தைகள் மிகவும் சோர்வடைந்தநிலையில் இருந்தன.

கணவரை இழந்து துடிக்கும் மனைவியர், பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகள், மனைவியரை இழந்து சோகமாய் உலாவும் கணவர் கள், பிள்ளைகளைக் கணப்பொழு தில் பறிகொடுத்துவிட்டு வாடும் பெற்றோர்கள், சகோதரர்களையும் உறவுகளையும் இழந்துதனிமரமாய்ப் போனவர்கள் என எங்கும் சோகமே நிலைகொண்டிருந்தது.

சில வாலிபர்களும், யுவதிகளும் தங்களாலான மனிதநேய உதவி களைச் செய்துகொண்டிருந்தனர். சில தனிநபர்களும், அமைப்புகளும் காட்டும் ஈடுபாடு மனதை ஈர்த்தன. மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டி ருந்த இளைஞர்களை அணுகி நிலை மைகளைக் கேட்டறிந்தேன். அரச நிவாரணங்கள் குறிப்பிடத்தக்களவு ஏதும் இன்னமும் கிடைக்கவில்லை எனவும், பொதுமக்களினதும், வலிந்துதவு நிறுவனங்களினதும் உதவிகளால்தான் இங்குள்ளவர்கள் உயிர் பிழைத்துக்கொண்டிருப்பதாக வும் உண்மை நிலையை எடுத்துக் கூறினர்.

எம்மோடு இங்கு வந்திருந்த சோமலதா ஏற்கனவே கடந்தவாரம் தென்பகுதி சிங்களக் கடலோரக் கிராமங்களுக்குச் சென்று வந்தவர்- கூறிய சில தகவல்கள் மனதை நெருடின. அங்கு அரச உதவிகள் துரிதமாகவும், தாராளமாகவும் கிடைப்பதாகவும், இவ்வளவு மோச மான நிலை அங்கே காணப்பட வில்லை என்பதையும் கூறினார். தென்பகுதியில் காட்டும் அக்கறை யில் சிறுபகுதி கூட வடக்குக்கிழக் [illegible]ப் பகுதியில் அரசு காட்டவில்லை [illegible]ன்பது அதன் இனத்துவேசப் போக்கை எடுத்தியம்பியது.

விநியோகங்களை முடித்துக் கொண்டு கடற்கரைப் பிரதேசத்திற்குச் சென்று அனர்த்த அழிவுகளைப் பார்வையிட்டோம். கடற்கரைப் பகுதி சிதிலமடைந்து எச்சங்களால் நிறைந்து கோரமுகத்துடன் காட்சி யளித்தது. எங்குமே இடிந்த கட்டடங்கள், சிதைந்த வாகனங்கள், அழிவுற்ற பொருள் பண்டங்கள் என கண்கொண்டு பார்க்கமுடியாம லிருந்தது.

நாங்கள் நடந்து சென்றபோது அந்தப் பிரதேசமெங்கும் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. இன்னும் மீட்கப்படாமல் சில உடல்கள் இருக்கலாம் என்பதை நாய்களும், காகங்களும், இலையான்களும் உறு[illegible]ப்படுத்தி நின் றன. மனது துடித் தது.

உளவளத் துணை வழங்க இது ஏற்ற தருணமல்ல என தோன் றியதால், சிறிதுகால இடைவெளிவிட்டு மீண்டும் வருவோம் என நான் கூறிய கருத்துக் களை என்னோடு வந்திருந்தவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

விநியோகத்தை முடித்துக்கொண்டு நாம் கொழும் புக்குத் திரும்பி னோம். இரண்டு வார இடைவெளி யின் பின் மீண்டும் சுனாமி முகாம்களுக் குச் சென்றபோதும், நிலைமையில் அதிக முன் னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. எனினும் மிக அவசரமாக ஆற்றுப்படுத்தப்பட வேண்டியவர்கள் அநேகர் இருந்தமை யினால் எமது உளவளத்துணை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தோம்.

நாங்கள் ஒவ்வொருவரும் முத லில் தனித்தனியாக பாதிக்கப்பட்டி ருந்த நபர்களையும் குடும்பத்தின ரையும் அணுகினோம். ஏற்கனவே முகாமில் ஒருவர் தற்கொலை புரிந்தமையும், இன்னும் சிலர் தற்கொலை புரியும் மனப்பாங்குடன் இருப்பதும் தெரியவந்தது.

சற்றும் எதிர்பாராமல் திடீரென்று ஏற்பட்ட பேரிழப்பின் தாக்கத்தினால் அநேகமானவர்களுடைய மனநிலை பாதிப்புக்கு உள்ளாயிரு[illegible]ந்தது. அவர்களது ஆழ்மனத் துயரங்களை ஆற்றுப்படுத்தாவிட்டால் அவர்கள் மனநோயாளர்களாகிவிடுவார்கள் என்று புரிந்தது. எனவே எம்மாலான மனப்பகிர்வினை தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்குத் தொடர்ச்சியாக வழங்கி னோம். மாதத்தில் இரு தடவையாவது வந்துநின்று ஒருசில நாட்கள் தொடர் உளவளத்துணை வழங்கினோம்.

எமது ஆற்றுப்படுத்தலில் பல்வேறுபட்ட பாதிப்புக்கு உள்ளான வர்களைச் சந்தித்து, அவர்களது ஆழ்மனத்துயரங்களுக்கு இயன்றளவு மன ஆறுதலும், உற்சாகமும் அளிக்க முயன்றோம். அதன் தொடர் நடவடிக் கையாக நாளை காலையில் புறப்படு வதற்காகவே சந்திரமுகி தொடர்பு கொண்டிருந்தார்.

எப்படியும் போவது என்று முடிவு செய்தபடி கணவரிடம் கேட்டபோது அவர் மறுப்பின்றி அனுமதியளித்தார். அம்மாதான் விருப்பமில்லாமல் முணுமுணுத்தார். நான் போகப்போகி றேன் என்றதும் சின்னவள் அனுசுயாவுக்குச் சந்தோசம். இரண்டு மூன்று நாட்களுக்கு நிம்மதி என்று நினைத்திருக்கக்கூடும்.

திட்டமிட்டபடி காலையில் புறப்பட்டோம். சுனாமியால் பாதிப்புக் குள்ளாகி மனப்பிரமையிலிருந்த மேரி எனது நினைவுக்கு வந்தாள். முதலில் அவளைச் சந்தித்த நாள் இப்பொழுதும் என் நினைவில் இருக்கிறது.

அன்று மழை பெய்துகொண் டிருந்தது. கொட்டும்மழையையே வெறித்துப்பார்த்தபடி அதனூடே மனத் துயரில் ஆழ்ந்திருந்தாள்.

அவளிடமிருந்த மெல்லிய அசைவுகளே அவளை உயிருள்ள ஒருத்தியாக அடையாளம் காட்டியது. மழை சற்றுத் தணிந்த பின்னரும் சுவரில் சாய்ந்தபடி இலக்கு எதுவு மின்றி வெறித்துப்பார்த்துக்கொண்டி ருந்தாள். பெண்மை, அழகு, கவர்ச்சி, நளினம் எனும் பாரம்பரியக் குணங்கள் எதுவுமின்றி, தன்னையே உணராத வளாக மனமுடைந்து அதிக ரணப்பட்டுப்போன இதயத்துடன் இருந்தவளை என் பக்கம் ஈர்க்க முயன்றேன்.

உப்புக்காற்றின் தழுவலில் ஒரு கணம் தன்னுடலைச் சிலிர்த்துக் கொண்டவள், எனது வரவை அதிகம் பொருட்படுத்தியதாகத் தெரிய வில்லை. சரிந்துபோயிருக்கும் அவள் வாழ்வைச் சரிக்கட்டி நிமிர்த்தி உலகோடு அவளை ஒன்றவைக்கும் என் பணியை ஆரம்பித்தேன். மாபெரும் சமுத்திரத்தில் மூழ்கிக் கொண்டு தன்னை முற்றாகத் தொலைத்திருப்பவளை கைகளைப் பற்றி மூழ்கிப்போகாமல் கரை சேர்ப்பது எனது கடமை என்பதை உணர்ந்தேன்.

இனம் தெரியாத பயப்பிராந்தியா லும், தாங்கமுடியாத இழப்புகளி னாலும் அவள் நொடிந்துபோயிருப் பதை ஏற்கனவே அறிந்திருந்தமை யினால் மெல்ல இதமாகவே அவளை அணுகினேன். 'மேரி' என்று நான் அன்பாக அழைத்தபோதும் அவளில் எதுவித பிரதிபலிப்பும் ஏற்படவில்லை. செதுக்கிய சிலை போல அமர்ந்திருந்தாள். இப்போது கண்களை மூடியபடி, ஆழ்ந்த சீரான சுவாசத்துடன், ஒருவித தளர்வு நிலையில் இருந்தாள்.

'மேரி' என்று மறுபடியும் அவளை அழைத்தேன். மௌனமே பதிலானது. சுனாமிப் பிரளயத்தால் இதயத்தில் ஏர்பூட்டி இழுக்கப்பட்ட காயங்களின் இரத்தச் சுவடுகள் இன்னும் காயாத நிலையில் அவள் இருப்பது புரிந்தது.

வாழ்வின் எல்லா நேரமும் இனிமையாக இருப்பதில்லை. இதுவரை கணவன் குழந்தைகள் என இன்பமான சூழலில் துயரம் தெரியாமல் வாழ்ந்துகொ[illegible]ண்டிருந்த போது காலம் எனும் அரக்கன் இயற்கையாய் உக்கிரம் கொண்டு அவளது கைக்குழந்தை உட்பட அனைவரையும் ஒருசில நொடிகளில் பறித்தெடுத்தபோது, பாவம் பெண்ணிவள் உடைந்து, நொருங்கிப் போய்விட்டாள். சரிந்துபோன இவள் வாழ்வை எப்படி இயல்புநிலைக்குக் கொண்டுவரலாம் என்றும் எனக்குத் தெரிந்த உளவளத்துணை நுணுக் கங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும் யோசித்தேன்.

தன்னை மட்டுமே நினைத்து, சூழலை மறந்து, தனக்குள் நினை வலைகளில் குளித்து, தனக்குள் பதுங்கி இருண்டு, தனக்குள்ளேயே ஒளிர்ந்து, தன்னையே தனக்குள் காணும் முயற்சியில் ஆட்பட்டிருந்த அவளுக்கு என் வரவும் அழைப்பும்

உணரப்படமுடியாமலிருந்ததில் வியப்பில்லை.

அடுத்தடுத்து அவளைச் சந்தித்து ஆற்றுப்படுத்த முயல்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவளது உளநெருக்கீடு சிறிதும் குறைவதாகத் தெரியாதமையினால் எனக்கும் ஏமாற்றமாயிருந்தது. இம்முறையாவது அவளை ஆற்றுப்படுத்தலில் வெற்றி காணவேண்டுமென நினைத்தேன்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முகாமை அடைந்தோம். முகாமில் இருந்தவர்களின் மனநிலையில் முன்னேற்றம் தெரிந்தமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

மேரியைத் தேடி என் கால்கள் விரைந்தன.

மேரியின் முகத்தில் வழமை போல் சோகம் அப்பிக்கிடந்தது. அவள் எந்தவித சலனமுமின்றி பிடிப்பற்றவளாக அமர்ந்திருந்தாள். அருகே அவளை நோக்கியபடி நானும் அமர்ந்தேன்.

“மேரி... காலையில் சாப்பிட்டாயா? ஏன் குளிக்கவில்லை? உடுப்புகள் எல்லாம் எவ்வளவு ஊத்தையா இருக்கிறது பார்த்தாயா, ஆதரவோடு அவளை நோக்கியபடி அவளது விரல்களை வருடினேன். அவள் இப்போது என்னை நோக்கினாள். எனினும் பேசவில்லை. அவளது நாடி துடித்தது. மனதிலிருந்த துயரவலிகள் மேலெழுந்துவர வேதனை மிகுதியால் விம்மிவெடிக்க ஆரம்பித்தாள். எனது பார்வையின் துளைப்பால், அவளது மனதில் ஆயிரம் முட்களின் கூரிய முனைகள் குத்திவடுவும் வலியும் ஏற்படுவது போல உணர்ந்தாளோ என்னவோ?

அழுது வெடிப்பதனால் மனம் ஆறுதலடையும் என்று தோன்றியதால் அவள் அழுமட்டும் அழுதுமுடிக்கட்டும் என்று பொறுத்திருந்தேன். எனது வரவு மனதில் எரிந்துகொண்டிருக்கும் நினைவுத் துகள்களை மேற்கொண்டு வந்தபோதிலும், அவை கண்ணீரில் கரைய அவள் முகத்தில் ஒருவித தெளிவு ஏற்படுவதுபோல உணர்ந்தேன்.

“மேரி...” இப்போது அவள் என் அழைப்புக்குச் செவிசாய்த்தாள். எனது கண்களை வெறுப்போடு உற்று நோக்கினாள். ஏற்கெனவே அவளது இழப்புக்கள் பற்றி எனது முன்னைய மனப்பகிர்வுகளின்போது அறிந்திருந்தமையினால், மீண்டும் அவை பற்றியோ, சுனாமி அனர்த்தங்கள் பற்றியோ பிரஸ்தாபிக்காது, “என்ன வேண்டும்மேரி?” என்று கனிவோடு கேட்டேன். எதுவுமே வேண்டாம் என்பதுபோல தலையசைத்தாள் மேரி.

இவள் இப்படித்தான். நிவாரணப் பொருட்கள் வழங்கும்போது கூட முண்டியடிக்கமாட்டாள். யாராவது ஏதாவது கொண்டுவந்து கொடுத்தாலும் கூட அவற்றை அக்கறையாக வாங்குவதில்லை. கிடைத்த பொருட்கள் கூட இன்னும் பிரிக்கப்படாமலும், உபயோகிக்கப்படாமலும் இருந்தன. பசி வந்தால் மட்டும் ஏதாவது உண்பாள்.

ஒவ்வொரு தடவையும் நான் ஏதாவது பொருட்களைக்கொண்டு வந்து கொடுத்து அவளை மகிழ்விக்க முயல்வேன். ஆனால் அவள் எதிலும் நாட்டம்கொள்ளமாட்டாள். இன்று கொண்டுவந்து கொடுத்த பார்சல் கூட அப்படியே இருந்தது.

இவளை எப்படி இயல்புநிலைக்குக் கொண்டுவருவது? என்னாலான உளவளத்துணை நுட்பங்களை அவளிடம் பயன்படுத்தியாகிவிட்டது. எனினும் அவளில் குறிப்பிடத்தக்க மாற்றமேற்படவில்லையே!

நான் அவளோடு உரையாடிக்கொண்டிருந்தபோது ஒரு தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களை வழங்கிக்கொண்டிருப்பதை மேரி நோக்கினாள். ஒருவித அசாதாரண பரபரப்புடன் விளையாட்டுப்பொருட்கள் வழங்குபவர்களை அவளது பார்வை முற்றுகையிடுகிறது.

மேரிக்குக் குழந்தைகள் இல்லாததால் அவர்கள் மேரிக்கு எதுவும் வழங்காமல் அவளைக் கடந்துசென்றுகொண்டிருந்தார்கள். மேரி உடல்நடுங்க முகத்தில் தாங்கொணாத ஏமாற்றத்துடன் அவர்கள் போகும் திசையைக் காட்டியபடி எழும்ப எத்தனித்தாள். “என்னமேரி? உனக்கு என்னவேண்டும்?” இதழோரம் புன்னகை மலர்ந்தபடி அவளை நோக்கினேன். மேரியின் ஆழமான அவதானிப்பு எனக்குள் ஆர்வத்தை ஏற்படுத்தியது “பொம்மை வேண்டுமா? என்றபடி அவளது கண்களைத்துருவியபடி நோக்கினேன். அவளது முகத்தில் புத்தொளி தோன்றியது. “ஆம்...” என்பதுபோல தலைஅசைத்தவாறு சுட்டுவிரலை அவர்கள் பக்கம் நீட்டியபடி இருந்தாள். வாங்கித்தருகிறேன் என்று கூறியபடி எழுந்து அவர்களிடமிருந்து ஒரு பொம்மையை வாங்கிவந்து மேரியிடம் நீட்டினேன்.

பொம்மையை அவள் வாங்கவில்லை. அவள் முகம் சுருங்கியது. எனக்குள் ஏமாற்றம் “என்ன மேரி வேண்டாமா?’ என்றபடி அந்த முயல் பொம்மையை மீண்டும் நீட்டினேன். தலையை இருபுறமும் ஆட்டி மறுப்பைத் தெரிவிக்கவே, மறுபடியும் அவளை அனுதாபத்தோடு நோக்கியபடி சிந்தனையில் ஆழ்ந்தேன். அவள் பார்வை இன்னமும் பொம்மை விநியோகிப்பவர்கள் பக்கமே தாவியது. முகத்தில் ஆர்வமும் ஏமாற்றமும் மாறிமாறிப் பிரதிபலிப்பதாக உணர்ந்தேன். அவளை ஆற்றுப்படுத்தும் ஒரு பொறி அவர்களிடமிருப்பது தெரிந்தது: ‘என்னவாக இருக்கும்?

மேரியை மறுபடி ஆழமாக நோக்கினேன். முகத்தில் ஏதோ ஒரு தவிப்புடனான எதிர்பார்ப்பு. “மேரி நீ கதைக்கவேண்டும். மனம்விட்டுக் கதைத்தால்தான் உனது மனது ஆறும். எவ்வளவுக்கெவ்வளவு கதைக்கிறியோ அவ்வளவுக்கவ்வளவு உனது மனது ஆறும்; மனச்சுமை குறையும். இப்போது உனக்கு என்ன தேவை என்று சொல்லு மேரி?’ மீண்டும் மெளனமே பதிலானாலும் பார்வையை என்பக்கம் திருப்பினாள்.

எனது வார்த்தைகள் அவளது உள்ளத்தில் ஒருவித நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கவேண்டும். எனினும் தனது விருப்பை வார்த்தைகளில் வடிக்கமுடியாத ஒருவித இறுக்கம்.

இப்போது எமது அருகிலே ஒரு குழந்தை தனக்குக் கிடைத்த பாவைப்பிள்ளை பொம்மையை அணைத்தபடி மகிழ்ச்சிபொங்க விளையாடிக்கொண்டிருந்தது. மேரி அதைக் காட்டி ஏதோ என்னிடம் சொல்லிட நினைத்தும் முடியாதவளாகத் தவித்தாள்.

எனது உளவளத்துணை அனுபவம் மின்னலாய் மனதில் ஒரு பொறியை ஏற்படுத்தியது. எழுந்து மறுபடியும் பொம்மைகளை விநியோகித்துக்கொண்டிருந்தவர்களிடம் சென்று உரையாடி ஒரு பெரிய குழந்தை பொம்மையை வாங்கிவந்தேன். அதைக் கண்ட மேரியின் முகம் சூரியனைக்கண்ட தாமரைபோல் மலர்ந்தது. பொம்மையை நான் அவளிடம் நீட்டியபோது மிக வேகமாக ஆர்வத்துடன் வாங்கி அதை தன் மார்போடு அணைத்துக்கொண்டாள்.

அவளது மனதில் தோன்றிய எல்லையில்லா மகிழ்வு முகத்தில் புன்னகையாய் உருக்கொள்ள நிறைவோடு என்னை நோக்கினாள். கூடவே அவளது கண்களும் பெருக்கெடுத்து நின்றன. முகத்தில் தொலைந்து போயிருந்த மலர்வு என்னை புளகாங்கிதமடையவைத்தது. சொரிவது ஆனந்தக்கண்ணீர் என்பதும் புரிந்தது.

ஒரே சமயத்தில் குடும்பத்தவர் அனைவரையும் பறிகொடுத்த அதிர்ச்சியில் இதுநாள்வரை அவள் மனம் பேதலித்துப்போயிருந்தாள். அதிலும் அவள் உயிரையே வைத்திருந்த கைக்குழந்தையை இழந்ததைத் தாங்கவே முடியவில்லை.

குழந்தையை கடல்நீர் பெருகி வந்தபோது தூக்கிக்கொண்டு ஓடிவந்தாள். அவளது வேகத்தைப்போல பலமடங்கு வேகத்தில் தொடர்ந்து வந்த கடல் நீர் அவளைத் தடம்புரள வைத்து அடித்துச்சென்றபோது கையிலிருந்த தனது அன்புக்குழந்தையைத் தவறவிட்டாள். குழந்தையின் பிடியை விடாமலிருந்திருந்தால் அது தப்பியிருக்குமே என்ற ஆதங்கம் அவளுக்குள்!

மறுநாள் அவளது கணவனினதும், மூத்த பிள்ளையினதும் உடல்கள் மீட்கப்பட்டபோதும், குழந்தையின் உடல் இறுதிவரை கிடைக்காமலே போய்விட்டது என்பதை அறிந்திருந்தேன்.

அவள் தன் கைக்குழந்தையை ஒரு கணமேனும் பிரிந்துபோயிருந்ததில்லை. எனவே குழந்தையின் இழப்பு அவளை மிகவும் பாதித்துவிட்டது. இப்போது இந்தப் பாவைப் பிள்ளையில் தனது குழந்தையைக் காண்கிறாள் மேரி என்பது எனக்குப் புரிந்தது. நிஜமான குழந்தையின் இழப்பை சிறு துளியாவது ஈடுசெய்ய இந்தப்பாவைப்பிள்ளை நிழலாக உதவியிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டபோது என் முகத்திலே வெற்றிப் புன்னகை!

சற்று முன்னர்வரை மேரி இருந்த நிலைமைக்கும், தற்போது இருக்கும் நிலைமைக்கும் இடையே பாரிய முன்னேற்றம் உடனேயே புலப்பட்டது.


குழந்தையின் இழப்பைத் தாங்கமுடியாமல் கடந்த சில மாதங்களாகத் தன்னையே இழந்து போயிருந்த நிலையில், ஒன்றையும் வெளிப்படுத்தவோ, வார்த்தைகளில் வடிக்கவோ முடியாமல் தீவிரமான மன அழுத்தத்தின் தாக்கத்தினால் தான் மேரி இதுகாலவரை நடைபிணமாக இருந்தாள். இப்போது இந்தச் சித்திரப் பொம்மை அவள் புத்திரபாசத்திற்கு வடிகாலாகி அவளைத் தேற்ற ஆரம்பித்திருக்கிறது.

இன்னும் சில நாட்களில் படிப்படியாக அவளது மன நெருக்கீடுகளைக் களைந்து அவளை ஆற்றுப்படுத்தி இயல்புநிலைக்குக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை என்னுள் எழுந்தது.

காலப்போக்கில் இது குழந்தை அல்ல வெறும் பாவைப்பிள்ளைதான் என்பதை அவள் புரிந்துகொள்வாள். இன்னும் சில நாட்களில் இந்தப் பாவைப்பிள்ளையை அவள் தூக்கி எறிந்துவிடவும் கூடும். எனினும் மனம் தெளிந்தவளாக மாறி நம்பிக்கையோடு உலகவாழ்வு நீரோட்டத்தில் கலந்து சகஜமாகிவிடுவாள்.

“மேரி-நான் போயிட்டு வருகிறேன். அடுத்தமுறை வரும்போது சந்திக்கிறேன்...” என்று கூறி விடைபெற்ற எனக்கு எழுந்து கையசைத்து விடைதந்தாள்.

அந்தப்பொம்மை இன்னும் அவளது அணைப்பிலேயே இருந்தது.



# பங்கீடு

## சமன்பாடு ஒன்றின்பதிவு

ஒரு கானலின்
கலைந்து போகும் உருவைத்
துரத்தித் துரத்தியே...
சலித்துப் போயின
ஜீவிகள்

தேதிகள்
கணக்கிட்டு கரந் தேர்ந்தவராய்...
எதிர்ப் போன பங்கீட்டின்
ஏமாளிகளாய்....
ஏதோ கனவுப் பளிங்குகள்
உடைவுற்றது போல்
கண்ணீர்ச் சொட்டுகள்.

குடலையும்,
உயிரையும் தின்னும் பசிக்கு
மட்டும் சொல்லிடல்
வேண்டும்.
கூடுகளின் நிரம்பல்
அதிகரிக்கையில் தொடர்க
பணியென....

பங்கிட்டு அட்டைகளை
அடுக்கிச் செல்லுங்கள்.
பல நோக்கு கடைகளில்
அவைகளும்
பட்டினி கிடக்கட்டும்.


அந்த மேசைகளுக்கும்
பணிகள் இருக்கட்டும்

பார்வைகளை பக்குவமாய்
அனுகுங்கள்.
பரிதவிப்புக்கும்
பதில் சொல்லிப் போகும்
அவர்களிடம் முரண்கள்
வேண்டியதில்லை.

நாளும் பட்டினித் திண்ணை
அந்தரிப்புகளாய்
உங்கள் ஆதங்கங்கள்
புரிகின்றது.

உங்கள் அகதிகள்
அடையாளம் அருகிப்
போகுமுன்னே...
அற்றுப் போகின்றதா
பங்கீடு.

நா.கானகன்.



# பேய்கள்

முகாரிராகம்
கேட்கிறது, இங்கே
மாமிச பிண்டங்களின்மீது
நடந்து கொண்டு
அவைகள்...
எங்கும் இரத்த
ஆறு பாய்கிறது
எங்கள் உடலங்கள்
சிதைந்து
வதைந்து கிடக்கின்றன.
எஞ்சிய உயிர்கள்
போகுமிடம்
அறியாது
பொதிகளை சுமந்தபடி
போகின்றன; நிர்வாணமாய்.
துடிக்கிறது நெஞ்சம்.
பருந்துகள்
இதைப்பார்த்து
வருந்தவில்லை
மாறாக அருந்துகிறது,
எங்களை;
எங்கள் சடலங்களை;
எங்கள் துயரங்களை;
எங்கள் முகாரிராகத்திற்கு
அவைகள் முகமகிழ்ந்து
கூத்தாடுகிறது;
எங்கள் துயரங்களை;
மாலையாகப் போட்டுக்கொண்டு
எங்கள் மரணங்களை
சலங்கையாகக் கட்டிக்கொண்டு
அந்தப் பேய்கள்.

தீபச் செல்வன்.



# இளைய நாதம்

## தூய தமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| நகம் | ~ உகிர |
| டோச் | ~ மின்சூழ்~ஒளிரி |
| அல்பம் | ~ நிழற்படச் செருகேடு |
| வாகனம் | ~ ஊர்தி |
| வாக்கியம் | ~ தொடரியல் |
| பிரதி | ~ படி |
| டிஜிற்றல் | ~ எண்ணியல் |
| ஒறியினல் | ~ மூலம் |
| பண்டிதர் | ~ துறைத்திறன் |
| சுருதி | ~ இணைவொலி |

இ.ம.ராஜன்



# தேள்

தேள்கள் உலகில் வெப்ப மண்டலப் பகுதிகளில் அதிகமாக காணப்படுகின்றன. இவை விலங்கியலில் ஆர்ச்நிடா வகுப்பில் ஸ்கார்ப்பியனிடா பகுப்பைச் சேர்ந்தவை. தேள்களில் ஏறக்குறைய 1500 வகைகள் உள்ளன. இந்தியாவில் மட்டும் 80 வகைகள் உள்ளன. இத் தேள்களில் வால் பகுதியிலுள்ள கொடுக்கில் விஷம் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான தேள்கள் அவ்வளவு அபாய கரமானவையல்ல. அவை கொட்டினால் சிறிது நேரம் கடுமையாக வலிக்கும். பின்னர் வலி மறைந்துவிடும். எனினும் ஆபிரிக்கா, மெக்ஸிக்கோ, தென்மேற்கு ஆபிரிக்கா ஆசிய நாடுகளில் உள்ள சில இனங்கள் ஆளையே கொல்லும் விஷம் கொண்டவை.

தேள்களில் மிகக் கொடூர விஷம் கொண்டவை துனீஷியன் கொடுப்பு வால் 'கொடுக்கு' தேள்களாகும். இவை வட ஆபிரிக்க நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. அங்கு பூச்சிக் கடியினால் இறப்பவர்களில் 90 சதவீதத்தினர் கொடுப்பு வால் கொடுக்கு தேள்களுக்குப் பலியாகின்றனர்.

இரை வேட்டைக்கே தேள் தனது கொடுக்கைப் பயன்படுத்துகிறது. இரை வேட்டையின் போது தனது கொடுக்கின் மூலம் இரையின் மீது ஒரு கொட்டு கொட்டி விஷத்தைப் பாய்ச்சி அதை செயலி ழக்கச் செய்கிறது. பின் இரையை உணவாக்கிக் கொள்கிறது. ஆனால் அது மனிதர்களையும் மற்ற பெரிய விலங்குகளையும் கொட்டுவதற்குக் காரணம் தற்காப்புக்காகத்தான்.

தேள் தனது கொடுக்கை மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் பக்கங்களிலும் விருப்பம் போல் இயக்கக் கூடியது. கொட்டும்போது நச்சுச் சுரப்பி சுருங்கி விஷத்தைச் சுரந்து கொடுக்குகள் மூலம் அனுப்புகிறது. தேளின் விஷத்திலுள்ள நியூரோ டோக்ஸின் எனும் பொருள் நரம்பின் செயலூக்கத்தைப் பாதிக்கக் கூடியது. தேள் இரவில் இரை தேடி பகலில் கற்களுக்கடியிலோ, குப்பை கூளங்கள் நிறைந்த இடத்திலோ பதுங்கிக்கொள்ளும்.

தேள்கள் 25 ஆண்டுகள் உயிர் வாழக் கூடியவை. இவற்றிற்கு 12 கண்கள் உள்ளன. அவை ஒளியையும் இருளையுமே உணரக் கூடியவை. இனப் பெருக்கம் செய்யும் முன் ஆண் தேளும் பெண் தேளும் 'கூடல் நடனம்' ஆடும். 30 முதல்40 நாள்களில் தேள் குஞ்சு பிறக்கும். பிறந்த ஒரு வாரம் வரை தாயின் முதுகிலே சவாரி செய்யும். தேள்கள் தோலுரிக்கும்போது மற்றத்தேள்களுக்கு இரையாகின்றன.

## விடுகதைகளும் விடைகளும்

01. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?

02. சாம்பலாண்டியும் சந்தைக்கு வந்தான்; உச்சிக் குடுமியும் சந்தைக்கு வந்தாள்; ஒரு முதுகெலும்பனும் சந்தைக்கு வந்தான்-இவர்கள் யார்?

03. சகட விகட கர்ணம்; சங்கிலி நாம கர்ணம்; நாலு மூலை கர்ணம்; நடுவில் கும்பகர்ணம் அது என்ன?

04.கழுத்தை வெட்டுவான் கையை வெட்டுவான் அவனை ஏனென்று கேட்போர் ஒருவரும் இல்லை அவன் யார்?

05. கண்ணுக்குத் தெரியாதவன் கண்ணை மறைப்பான் அவன் யார்?

## சொற்சிலம்பம் - 97

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | ப் | ம | ம் | ன் | தா | பூ |
| டு | கு | ல் | பா | ந் | மி | சி |
| க | லி | தி | கோ | னி | ணி | சா |
| ஞ் | னா | ப | லி | னை | சீ | இ |
| ழ | ட் | தா | ஷ் | ர் | லி | கை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | மோ |
| ங் | வ | யோ | ன் | கி | த் | த |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -95 இன் விடைகள்

01. கார்த்திகை.

02. பாக்குநீரிணை.

## சொற்சிலம்பம் - 95 இன் பரிசுக்குரியவர்

வ.யுகர்சன்,
தரம்-5B,
மு/கலைமகள் வித்தியாலயம்,
முள்ளியவளை.

## சொற்சிலம்பம் - 95 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ச.தினேஸ்,
கிளி/சிவநகர் அ.த.க
பாடசாலை.

02. தி.சஜீவகாந்,
மு/பாரதி வித்தியாலயம்,
விசுவமடு.

03. வி.பவித்திரா,
தரம்-3,
யாழ்ப்பாணம்.

04. ப.இலக்கியா,
கிளி/கிளிநொச்சி,
மகாவித்தியாலயம்.

05. த.கௌசிதரன்,
தரம்-5,
பூநகரிமகாவித்தியாலயம்.

06. சு.புவிதர்சன்,
நட்டாங்கண்டல்,
அ.த.க பாடசாலை.

07. க.குகன், தரம்-8
வ/தமிழ் மத்திய ம.வி,
வவுனியா.

08. அ.சாமந்தியா,
ஒட்டுசுட்டான் ம.வி,
ஒட்டுசுட்டான்.

01. இந்தியப் பிரதமரின் பெயர்?

01) ..................................

02. மகாகவி பாரதியார் எழுதிய காவியம்?

01) ..................................

சொற்சிலம்பம்-97
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ..................................


முகவரி :- ..................................

..................................

..................................

# நாய் வால்

பகுதி-03






# மனித மனம்...



"மனித மனம் கலங்குவது அணுகுண்டுகளால் அல்ல அன்பற்ற இதயங்களால் தான்" மனமொன்றில் எழுகின்ற இன்ப துன்பங்களை கணக்கிட்டுக்கொள்ளமுடிவதில்லை. இதற்கான கருவிகளை எவராயினும் இதுவரையிலும் கண்டு பிடிக்கவில்லை. ஆனாலும் அதற்கான கருவி எம் மனம்தான். அதாவது நாம் ஒருவரின் நிலையினை இலகுவில் அறியாத பட்சத்தில் வாழ்கின்றோம். அவரோடு அன்பினை பிணைத்து உறவினை வளர்க்கின்ற போதினிலே அவர் தாமாக தம் நிலையினை கூற பலரும் விரும்பமாட்டார்கள். இருந்தும் சிலர் சின்னச்சின்னதாய் தம் நிலையினை நாளுக்கு நாள் கூறுகின்ற போதினில் அவர் ஆழ்ந்த அன்பினை பிரசவித்துக்கொள்கின்றார்.

உள்ளமொன்றிலிருந்து அன்பினை உள்வாங்கிக் கொள்கின்ற போதினில் உள்ளத்தில் ஆனந்தப் பெருக்கெடுப்புதான். இது நீண்டு தொடர வேண்டும் என்பதுவும்தான் அனைவர் அவாவும் கூட. அன்பினை கலந்து பாசங்களை பரிணமிக்கும் வேளைகளில் சின்னச் சண்டைகள் ஏற்படுவதுண்டு இதன் மூலம் இன்னும் அன்பு அதிகரிக்கும். மற்றையது மன நோயாளியாய் கூட மாற்றிவிடும்.

இன்பததினை ஏற்றுக் கொள்ளும் மனதில் துன்பங்களை மட்டும் ஏற்கமறுக்கின்றதனை நாம் அறிந்தவுண்மை.

மனம் மென்மையானது. ஆனாலும் மனவிரக்தி ஏற்படுமாயின் அது கருங்கல்லினை விட வைரமானதாய் மாறும். உடலொன்றுக்கு உயிர் மட்டும் தான் சொந்தம். இது போன்று உங்கள் மேல் ஓர் சொந்தம் தேடும் உள்ளங்களோடு ஆழ்ந்த அன்பினை வைக்க மறுத்தாலும் அவர்கள் மனதினை மாறாத புண்ணாக்கி விடாது நடப்பதே சிறந்தது. "பாசம் வைப்பது பாவம் அல்ல வைத்த பாசத்தில் அவர் பகை கொள்வது மோசமான செயல்" மலரொன்று மொட்டு விட்டு மலர்கின்ற போதினில் அது நினைப்பதில்லை சில நாட்களில் நான் கருகிய மலரென்று. இது போன்று தான் நம் அன்பின் செயற் பாடு, இவ்வாறு இல்லாமல் மலரத் துடிக்கும் மொட்டுப் போல் வாழ்ந்தால் அவ் அன்பினில் ஆனந்தங்கள் அதிகம். ஒருவர் தானாக தன் நிலையினை கூறுகின்ற போதினில நீங்கள் அவருக்கு ஆறுதலானவற்றைக் கூறுவீர்களானால் அதன் மூலம் அவன் சிறிதேனும் மன மகிழ்ச்சியில் வாழ்வான். இவ்வாறில்லாமல் நீங்கள் அவர் மேல் வைத்த பாசத்தினை பகை கொள்ளும்போது மன விரக்தியேற்பட வாய்ப்புண்டு. இதனை மனதில் கொண்டு அனைவரையும் மகிழ்ச்சிப் படுத்தி மகிழ்வினை நோக்கிப்பயணியுங்கள்.

ஒருவரை இன்பத்தில் ஆழ்த்துவதும் துன்பத்தில் ஆழ்த்துவதும் எம்மனம்தான். துன்பப்படுகின்ற மனதினுள் மகிழ்வினை ஊட்டி அவர் மனங்களோடு ஒன்றித்து ஒற்றுமையாய், மகிழ்ச்சியாய் வாழ்வதை விட எந்தவொரு இன்பமும் எமக்குக் கிடையாது. எனவே பாசத்தை தேடுங்கள். காற்றோடு அவர் மனதினை, உங்கள் அன்பற்ற இதயங்களால் காக்காது, அரவணைத்து, மனதினை மங்கிய இருளாய் இல்லாமல் ஆலமரமாய் அன்பினை வளர்த்துக்கொள்ளுங்கள்.

**எஸ். மதீஸ்**

# திருமணம்

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவது என்றெல்லாம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ஆயினும் திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் ஓர் பெண்ணிற்கும் இடையில் ஏற்படுகின்ற ஒத்திசைவான ஒன்றிப்பு-நிலையே ஆகும்.

இது காதல் திருமணமாகவோ அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணமாகவோ அமையலாம். தற்காலத்தில் இளவயதுத் திருமணங்களே அதிகளவில் ஏற்பட்டு பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இதற்கு முக்கிய காரணியாக அமைவது தென்னிந்திய திரைப்படங்களின் சில தவறான கருத்துக்களும், இளவயதினருக்கு போதிய பாலியல் அறிவு இன்மையுமே ஆகும்.

தற்போது அதிகளவில் இடம்பெறும் திருமணங்கள் காதல் திருமணமாகவே



காணப்படுகின்றது. இத்திருமணமானது பெற்றோர்களின் விருப்பின்றி சமூகத்தின் எதிர்ப்புகளிற்கு மத்தியில் இடம்பெறுகின்றது.

இவற்றில் பல சில ஆண்டுகளின் பின் குடும்பச் சிக்கல்களை ஏற்படுத்தி பிரிவுகளை ஏற்படுத்துகின்றன. இதற்குக் காரணமாக அமைவது "சீதனம்" எனும் கொடுமைச் சாத்தானாகும். எனினும் சில காதல் திருமணங்கள் திருமணம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

குறித்த ஒருபிள்ளை பருவமடைந்து திருமண வயதை அடைந்துகொள்ளும்போது பெற்றோர்களாலும், உறவினர்களாலும் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திருமணமானது தற்காலத்தில் அதிகளவில் இடம்பெறாவிடினும் பெற்றோர்களினதும், சமூகத்தினதும் வரவேற்பிற்கு உள்ளாகுகின்றது.

எனினும் முன்னர் அறிமுகம் இல்லாத ஆணுக்கும் பெண்ணிற்கும் இத்திருமணம் இடம்பெறுவதால் அவர்களிடையே புரிந்துணர்வு ஏற்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளும் தோற்றம்பெறுகின்றன. இதனால் சில வேளைகளில் பிரிவுகள் கூட நிகழ்கின்றன.

சில நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் நிறைவானதாகக் காணப்பட்டபோதிலும் திருமணப் பந்தத்தில் இணையும் ஆணிற்கும் பெண்ணிற்கும் சில வேளைகளில் ஓர் மனநிறைவற்ற நிலையே தோன்றுகின்றது.

எனவே காதலுடன் கூடிய நிச்சயிக்கப்பட்ட திருமணங்களே சிறந்ததாகும். ஒரு ஆணிற்கும் ஒரு பெண்ணிற்கும் இடையில் ஏற்படும் காமம் அற்ற உடன்பாட்டு வடிவமே உண்மைக்காதல் ஆகும். இவ்வாறு இணையும் இரு மனங்கள் பெற்றோர்களினதும் உறவினர்களினதும் பூரண ஒத்துழைப்புடன் திருமணப் பந்தத்தில் இணையும்போதுதான் அது ஓர் பூரணமான திருமணமாக அமையும்.

எனவே "இருமனங்கள் ஒருமனமாகும் நிலையே திருமணமாகும்" இதுவே திருமணத்தின் உண்மை.

**ப.கஜேந்திரன்**

## மரக்கறி முட்டைத்தோசை




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| முட்டை | -3 |
| கரட் | -அளவாக |
| பட்டன்காளான் | -1/4 கப் |
| பாலாடைக்கட்டி (சீஸ்) | -1/4 கப் |
| வெண்ணெய் | -1 தேக்கரண்டி |
| உப்பு | -அளவாக |
| மிளகுதூள் | -2 தேக்கரண்டி |
| பால் | -2 மேசைக்கரண்டி. |

செய்முறை:-

முட்டைகளை உப்பு, மிளகு, வெண்ணெய், பால் ஆகியவற்றுடன் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

மறுபுறம் காளான்களை கொதிக்கும் தண்ணீரில் 5 நிமிடம் போட்டு வைக்கவும். கரட், காளான், முட்டைக்கோஸ் ஆகியவற்றை மிகச்சிறிய நீளவாக்கு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

இந்த மரக்கறிகளையும் அடித்துவைத்திருக்கும் முட்டைக்கலவையில் சேர்த்து பாலாடைக்கட்டித் தூள் போட்டுக் கலக்கவும்.

பிறகு அடி ஒட்டாத தாச்சியில் சிறிதளவு எண்ணெய் தடவி இந்தக் கலவையைக் கொட்டவும். ஒருபுறம் சற்று வெந்ததும்,

திருப்பிப் போடக்கூடிய பதம் வந்ததும் திருப்பிப் போட்டு வேகவைக்கவும்.

## வீட்டுத் தோட்டத்தைப் பராமரிக்க...

செடிகள் வளரும் பாத்திகளில் மணல், செம்மண், உரம் ஆகியவற்றின் கலவையைப் போட்டபின் நாற்றுக்களை நட்டால் நன்றாக வளரும்.

★★★★★

சட்டிகள், பூந்தொட்டிகளில் மணல், செம்மண், உரக் கலவையை நிரப்பும் முன், அடிப்பாகத்தில் சில சரளைக்கற்களைப் போட்டு நீர் வடிய வசதி செய்வது அவசியம். இல்லாவிட்டால் செடிகள் அழுகிவிடும்.

★★★★★

செடி வளர்க்க மண் சட்டிகளையே வாங்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. பழைய ப்ளாஸ்டிக் பக்கெட் போன்றவற்றிலும் கூட செடி வளர்க்கலாம். நீர் வடிந்து வெளியேற வசதியாக ஓரிரு ஓட்டைகள் போட்டுக்கொண்டால் போதும்.

★★★★★

சட்டிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர் ஊற்றினாலே போதும். அதிகப்படியான நீர் ஊற்றினால் இலைகள் பழுத்து உதிர்ந்துவிடும்.

★★★★★

வீட்டுக்குள் வைக்கும் செடிகளில் ஓரிரு நாட்களுக்கு சில மணி நேரமாவது நல்ல வெளிச்சம் படும் படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




**குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்**

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம் — 58**

பெயர்:..........................................

முகவரி:.........................................

.........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# முன்பள்ளிச் செயற்பாடுகள்
# — முன்னோக்கிய பார்வை —




"கல்வியின் முதற்பணி நம்மை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல்" என்பது கல்வியாளர்களால் பெரிதும் வரவேற்கப்படும் கருத்தாகும். குழந்தைக் கல்வியின் செயற்பாடாக 3-5 வயது குழந்தைகள் யாவரும் ஆரம்ப நிலையிலேயே செயற்படுவதற்கு முன்பள்ளிச் செயற்பாடுகள் பெரிதும் உதவுகின்றன.

கல்வி வளர்ச்சிக்கு அடிப்படை அறிவு என்பதுடன் நுண்ணறிவு சார்ந்த மாணவர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளும் இன்றியமையாதவையாகும். கல்வி நிறுவனம், கல்விப பண்பாடு, சமூகத்தில் கல்வியின் நோக்கம், முறையியல்கள், ஒழுங்கமைப்புடன் ஆரம்ப நிலையிலேயே ஆராயப்படுவதுடன் குழந்தைகளின் இயல்பூக்கங்கள் ஆரம்ப நிலையிலிருந்தே வளர்த்தெடுக்கப்படுவதற்கும் பெரிதும் துணைபுரிகின்றன.

வடக்கு-கிழக்கில் திருகோணமலையில் முன் மாதிரியாக முன்பள்ளிச் செயற்பாடுகள் ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டதன்பயனாக இன்று வடக்கு கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டதுடன் இம் மாகாணத்தின் 24 கல்வி வலயங்களுக்கும் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திச் செயற்பாடுகளாகத் தனியான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருடந்தோறும் பயிற்சிகள் வழங்கப்பட்டு முன்பள்ளிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முழுச் சமூகமும் முன்பள்ளிச் செயற்பாடுகளின் அவசியம் பற்றி உணர்ந்துள்ளது. ஆரம்பநிலையிலேயே கல்வித்தளம் விரிந்து செல்வதற்கு இவ் முன்பள்ளிக் கல்வி வழியமைத்துக்கொடுக்கின்றது.

முன்பள்ளிச் செயற்பாடுகள் அரச நிதியில்லாத நிலையில், சர்வதேச உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. முன்பள்ளிக் கல்வியின் அவசியம் கருதிக் கல்வியியலாளர்கள், பல கல்வித் திட்டங்களை அமுலாக்கியும் வருகின்றார்கள். முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்குகந்த வகையில் இக்கல்விச் செயற்பாடுகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

அமுலாக்கல் திட்டங்கள்:-

★முன்பள்ளி தொடர்பான தரவுகளைச் சேகரித்தல்.

★முன்பள்ளிகளைப் பதிவு செய்தல்.

★முன்பள்ளிக் கண்காணிப்பும், மேற்பார்வையும்.

★ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளருக்கான பயிற்சியும் செயலமர்வும்.

★முன்பள்ளி இணைப்பாளர், முதன்மை ஆசிரியர், முன்பள்ளி ஆசிரியர் ஆகியோருக்கான பயிற்சி.

★சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல்.

★விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

★"புன்சிரிப்பு" மாதாந்த செய்தி மடல் வெளியிடுதல் போன்றவையாகும்.

இதேநேரம் முன்பள்ளி தொடர்பாக,

இனங்காணப்பட்ட பிரச்சினைகள்:-

★முன்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்காமை/சில முன்பள்ளிகள் இயங்கி பின்னர் மூடப்படுகின்றமை.

★அடிப்படை வசதிகளற்ற நிலையில் முன்பள்ளிகள் இயங்கி வருகின்றமை.

★முன்பள்ளி அமைவிடங்கள் போதிய இடவசதியற்றவையாக இருக்கின்றமை.

★சகல முன்பள்ளிகளும் சமநிலை தன்மையற்று இருக்கின்றமை.

★திட்டமிட்ட வகையில் முன்பள்ளிக் கல்வி ஒழுங்குபடுத்தப்படாமல் இருக்கின்றமை.

★முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சி போதாமை.

★போதிய கல்வித் தகைமை பெறாத ஆசிரியர்கள் இதில் ஈடுபடுகின்றமை..

★முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய வேதன வழங்கப்படாமை.

★முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், தரம் 1 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையேயான உறவு நிலை அல்லது நெருக்கம் போதாமை.

★பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மேலதிக கல்வி வாய்ப்புக்கள் பெற வழிகாட்டாமை.

★கிராமப்புற மற்றும் தூரப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட வசதிகள், பயிற்சித்திட்டங்கள் இன்மை.

★பயிற்சிபெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களால் சேவையிலிருந்து வெளியேறுகின்றமை.

★முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல் சேவை பற்றிய அனுபவம், பயிற்சி போதாமை.

★காலத்தின் மாற்றத்திற்கேற்ப பாலர் ஆசிரியர் பயிற்சித்திட்டங்கள் பொருத்தமற்றவையாகக் காணப்படல்.

★உடல், உள வளர்ச்சிக்கேற்ற கற்றல் நிகழ்வுகள் இடம்பெறாமை.

★பொருத்தமான கற்பித்தல் உபகரணங்கள் இல்லாமை/ பயன்படுத்தாமை.

★விசேட தேவையுள்ள பாலர்களுக்கு கவனிப்புப் போதாமை/ தனியான முன்பள்ளிகள் தோற்றம் பெறாமை.

★முன்பள்ளிகளுக்கு கல்வி அதிகாரிகளோ கல்வி ஆர்வலர்களோ சென்று பார்வையிடாமை, வழிகாட்டலின்மை.

★பிள்ளைகளின் தேர்ச்சிகள், அபிவிருத்தி வளர்ச்சிகள் தொடர்பான கணிப்பீடுகள் நடைபெறுவதில்லை.

★பாலகர்களுக்குப் போசாக்குத்திட்டம் போதாமையாகக் காணப்படல்.

★பாலகர்கள் முன்பள்ளிக்கு ஒழுங்காக வராமை/இடைவிலகல்.

★3-4 வயதுப் பிள்ளைகள் தொடர்ச்சியாக முன்பள்ளிக்குச் செல்வது குறைவாக உள்ளமை.

★முன்பள்ளிகளுக்குப் பொருத்தமான கட்டடம்/தளபாடவசதிகள் இல்லாமை.

★அநேகமான முன்பள்ளிகளில் கற்றல் நிலையங்கள் (செயற்பாட்டு அறை) அமைக்கப்படாமை.

★முன்பள்ளிக் கல்வியை அரச கல்வி நிறுவனங்கள் பொறுப்பேற்காமை/செயற்படுத்தாமை.

★முன்பள்ளிகளை நடாத்தும் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புப் போதாமை.

★முன்பள்ளிக் கல்வி பற்றி பெற்றோர், சமூகத்திற்கான போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை.

சிறார்களின் வளர்ச்சிப் பருவம் மிக முக்கியமானது. 0.5வயது வரை வளர்ச்சிவீதம் துரிதமாக இருக்கும். பிள்ளைகளின் அறிவு சமூக மயமாக்கல், ஆற்றல் விருத்தியில் முன்பிள்ளைப்பருவம் முக்கியத்துவம் பெறுகின்றது. இப்பருவத்தில் தகுந்த சேவையை வழங்கி சமுதாய சேவையில் ஈடுபடும் நிலையங்களாக முன்பள்ளிகள் இன்று விளங்குகின்றன.

பிள்ளைகளைத் தாங்கள் வாழும் பரந்த உலகிற்கு அறிமுகம் செய்யும் முன்பள்ளி நிலையங்கள் சுற்றாடல் அனுபவங்களைப் பெறுவதற்கு அத்திவாரம் ஆகின்றன. ஒரு கட்டடத்திற்கு அத்திவாரம் எப்படி முக்கியமோ அதேபோல முன்பள்ளிக்கல்வி பிள்ளைகளுக்கு ஒரு அத்திவாரமாகும். இதனை உணர்ந்தே இன்று முன்பள்ளி ஓர் ஒழுங்கமைந்த நிறுவனமாக மாற்றப்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

1997ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தமானது முதன்முறையாக இலங்கையில், கல்விக்கட்டமைப்பு முன்பள்ளிகளின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகின்றது. ஆனாலும் இன்றுவரை முன்பள்ளி பற்றிய விழிப்புணர்வுகள் நடைமுறைக்கு வராமையால் தொடர்ந்தும் முன்பள்ளிகள் முன்னர் தொழிற்பட்ட பிரகாரத்தின் படியே இயங்கிவருகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 8 நிர்வாக மாவட்டங்களில் 9 கல்வி நிர்வாக மாவட்டங்களாகவும்,24 கல்வி வலயங்களாகவும், 74 கோட்டங்களாகவும் இயங்குகின்றன.

இந்த 24 வலயக் கல்விப் பணிமனைகளிலும் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கென உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் காணப்படுகின்றார்கள். பல்வேறு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் உதவி வருகின்றன. வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களிலும் குழந்தைகளுக்குச் சேவை செய்கின்ற 2809 முன்பள்ளிகள் 4751 ஆசிரியர்களுடன் இயங்கி வருகின்றன. இவ் முன் பள்ளிகள் யாவும் பதிவுக்குட்பட்டவை என்றும் கூறப்படுகின்றது.

முன்பள்ளிக் கல்வியை வடக்கு கிழக்கு மாகாணத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூராட்சித் திணைக்களம், சமய ஸ்தாபனங்கள், தனியார், பெற்றோர், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் (தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சர்வோதயம், எகெட், சுவாட், சேவாலங்கா, வாழ்வுதயம்...) வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் (சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், போருட், யுனிசெப், சோஆ (ZoA,.....) போன்ற பல நிறுவனங்கள் நடாத்தி வருகின்றன.

இந்த நிறுவனங்கள் தமது இயல்புக்கேற்ப கட்டடங்கள், தளபாடங்கள், கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள், ஆசிரியர் பயிற்சி போன்றவற்றை தாமாக வழங்கி வருவதுடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் அந்தந்த சில நிறுவனங்கள் அல்லது பெற்றோர்களே வழங்கி வருகின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பிரதேச முன்பள்ளிகள் தமது சூழலுக்கேற்பவும் கற்றல் செயற்பாடுகளில் வேறுபட்டுள்ளதைக் காணலாம். கல்விச் சீர்திருத்தத்தின் பின் ஆரம்பக்கல்வி மாற்றங்களுக்கேற்ப முன் பள்ளிச் செயற்பாடுகள் ஒரு முகப்படுத்தும் நோக்கோடு முன் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல், கலைத் திட்டம் தயாரித்தல், முன்பள்ளிகளை மதிப்பீடு செய்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் முன் பள்ளி ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல் ஆகிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரைக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கென ஒழுங்கமைக்கப்பட்ட எந்தவிதமான பொதுவான பாடத்திட்டம் இல்லாமை ஒரு குறைபாடாக இருந்தது.

சில முன்பள்ளிகள் 'எந்தவித திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின்றியும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமையில் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளில் சமநிலை பேணப்பட வேண்டுமென்பதால் பாடத்திட்டமொன்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடனும், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் "விளையாட்டு அல்லாத விளையாட்டு" எனும் வளவழிகாட்டி கை நூலாக வெளியிடப்பட்டுள்ளது. முன்பள்ளிச் செயற்பாடுகளுக்குதவ, ஊக்குவிக்க "புன்சிரிப்பு" எனும் மாதாந்தச் செய்தி மடலும் வெளியிடப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் பல முன்பள்ளிப் பிள்ளைகள் உளநிலை பாதிப்புக்குள்ளாகி அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

**— மாதங்கி —**

அதாவது யுத்த சூழலின் தாக்கங்கள் பாலர்களைப் பல்வே[illegible] விதத்தில் தாக்கியதுடன் குடும்பங்களின் சிதைவால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும், வறுமை, போசாக்கின்மை காரணமாக பாதிப்புற்ற பாலர்கள் போன்றோர் முன்பள்ளிகளில் காணக்கூடியதாகவுள்ளது.

இதன் காரணமாக முன்பள்ளிக்குக் குழந்தைகள் செல்வது குறைவாகவும், செல்லாமலும் இருக்கின்றனர். அத்துடன் பிள்ளைகளின் வீட்டுச சூழல் கூட அவர்களது வளர்ச்சிக்கு பல வகையிலும் சாதகமாக அமையாத நிலையும் காணப்படுகின்றது. இந் நிலையில் பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள், விசேட தேவையுள்ள பாலகர்களுக்கான முன்பள்ளிகள் போதியளவு உருவாக்கப்பட வேண்டும்.

(22ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த சந்ததிக்கு — எதைக் கொடுக்கப் போறியள்..?



## ஏ9 - ஏரம்பு

உலா 43

வணக்கம் செல்லங்கள்! என்ன மாதிரி உங்கட பாடுகள் போகுது? செய்தியளைக் கேட்க எனக்கு மண்டை வெடிக்கிது. சே! அநியாயப் பட்டவங்கள் இயற்கை அழிவால ஏற்பட்ட நிலையைக் கூட கையாளி றதுக்கு விடமாட்டாங்களெண்டால் வேற என்ன மண்ணாங்கட்டிக்கே... எனக்கு வருகிது.. விசர். அதிலையும் பார்த்திருப்பியள் : வழக்குப் போட்டு பொதுக்கட்டமைப்பை முடக்கின ஜேவிபி மட்டுமில்லை, அரசாங்கத் தரப்பும் சொல்லிது, வழங்கப்பட்ட தீர்ப்பு தங்களுக்குக் கிடைச்ச வெற்றி எண்டு.

சரி! அவையள் சொல்லிறதும் சரிதான்! தமிழருக்கு சொற்ப உரிமை யையும் கொடுத்திடப்படாது எண்டிற தில அவையள் இரண்டு தரப்புக்கும் வெற்றிதான். தமிழரை எந்தச் சிங்களக்கட்சி ஒடுக்கினாலும், அது ஒட்டுமொத்த சிறிலங்காப்பேரினவாதத் துக்கும் கிடைச்ச வெற்றியாத்தானே இருக்கும்.

ஆனால், எங்கட சனத்தைப் பற்றி அவையளுக்கு விளங்கேல்லை. பதிலடி கொடுக்கத்தொடக்குங்கோ எண்டு தேசியத்தலைவருக்கே மனுக்குடுக்கிற அளவுக்கு கொழும்பு அரசியலை அவையள் தெளிவாய்ப் புரிஞ்சுகொண்டிட்டினம்.

அரசாங்கத்துக்கு ஏதோவொரு மோசமான வியாதி பிடிச்சிருக்குப் பாருங்கோ! அடி தாங்கேலாமல் அழுகிறது. பாவமெண்டு கொஞ்சநாள் விட்டால் மிஞ்சப்பார்க்கிறது. சும்மா தாங்களே வெடிக்காத கிரனைட்டு களை தங்களுக்கு எறிஞ்சுபோட்டு, புலி போட்டது! எலி போட்டது எண்டு சத்தம் போடிறது. உண்மையிலையே புலியள் போட்டால் அது எப்பிடி வெடிக்கும்? என்ன செய்யும்? எண் டெல்லாம் கெதியில அறியவெல்லே போயினம் அவையள்.

எதையும் சரியான நேரகாலத் துக்கு நகர்த்திச்செல்லிற தலை வரின்ரை கட்டளையள் நாலாபக்க மும் பறக்கேக்கிளை, தங்கட நயவஞ்ச கத்துக்கெல்லாம் தகுந்த தண்டனை யை அனுபவிக்கவெல்லே போயினம.

இன்னுமொரு விசயம். உந்த உலகநாடுகளுக்கெல்லாம் பொது வாய் ஒருத்தர் இருக்கிறாராம். அவர் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கையெழுத்திட்ட உடன பெரிசாய் ஆ... ஊ... எண்டு வாய் ஊறஊற வாழ்த்தி னவர். இப்ப நீதிமன்றம் எண்டு சொல்லப்படிற ஒண்டு அதை முடக்கி யிருக்கிறதை கண்டிச்சு ஏதாவது விடுவோமெண்டு ஏதாவது சிந்தனை, செயலூக்கம் இருக்கிற மாதிரித்தெரி யேல்லை. ஏதோ பெண் எண்டால் பேயும் இரங்கும் எண்டு சொல்லி றவை. இஞ்சை பேயைப் பார்த்தே ஒரேயடியாய் இறங்கிவிட்ட நிலைமை. என்னத்தைச் சொல்ல நான்!

ஆ! இல்லை விளங்காமல் தான் கேட்கிறன்: சுனாமிப் பொதுக்கட்ட மைப்பில அரசாங்கத்தின்ரை நிலைப் பாடுதான் என்ன? தனியத் தங்களுக் குள்ளை அமத்திற ஐடியாவுக்கு தமிழர் முட்டுக்கட்டையாய் இருக்கி றோமாக்கும். எட பெரிய தொகை கைக்கு வரமுதலே பிரதமர் 70 கோடியைச் சுருட்டீட்டாராம். பிரதமரே உவ்வளவெண்டால் சனாதிபதியும் தன்ரை பங்குக்கு ஏதாவது 'செய்யத் தானே' வேணும்! ஓமோ இல்லையோ?

அவாவின்ரை தம்பிக்குத் தீனி போடவே கஜானாவுக்குக் கட்டாது. அவர் பாருங்கோ சில மாதங்களுக்கு முன்னால லண்டனுககுப் போன நேரம் தங்கிநிண்ட ஹொட்டலில வீடியோப்படம் பார்த்த காசு 15 000 டொலராம். இரவிரவாய் முழிச்சிருந்து 3, 4 நாளைக்குள்ளை 15 லட்சம் ரூபாவுக்கு மனுசன் ஏதோ கண்ராவிப் படங்களைப் பார்த்திட்டு, கணக்கை தூதுவராலயத்துக்கு அனுப்பச் சொல்லீட்டு மெல்லமாய் மாறீட்டிதாம்.

உந்த விசயங்களைப் பற்றிக் கதைக்கேக்கிளை தான் முந்தநாள் குணத்தார் சொன்னது ஞாபகத்துக்கு வருகிது. உங்களுக்குத் தெரியும் தானே அந்தமனுசனுக்கு என்னைப் பெரிசாய் பிடிக்காதெண்டு.

"ஐசே ஏர்! உம்மை அலையடிச் சதெல்லாம் ஊருலகத்துக்குத் தேவையில்லாத விசயம். எட அடிச்சுக்கொண்டு ஒரேயடியாய் போயிருந்தாலும் பரவாயில்லை, ஆர் வமாய் வாசிச்சிருக்க லாம். சும்மா உம்மட கிழட்டு ஞாயங்களை விட்டிட்டு எங்கை உந்த சிறிலங்காவின்ர அரசியலப்பற்றி ஆராய்ஞ்சு எழுதும் பார்ப்பம். எண்டார் குணத்தார்.

இந்தியாவில் கால்வாய் வெட்டிற திட்டம் இயற்கைக்கு அழிவைத்தரக் கூடிய தெண்டு போடப்பட்ட வழக்கை நீதிமன்றம் 'தேசிய நலன் சார்ந்த திட்டத்துக்கெதிரான வழக்கு' எண்டு சொல்லி விசாரணைக்கு எடுக்காமல் நிராகரிச்சிட்டுது. சிறிலங்கா வில பொதுக்கட்டமைப்புக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு எடுத்திருக் கினம். ஓமோம்! பிந்துனுவெவவில படுகொலை செய்தவங்கள் அப்பாவி யள், எஸ்.பி.திசநாயக்கா ஊழலே செய்யேல்லை (சந்திரிகா சரித்திரம் எழுதுவன் எண்டு அந்த மனுசன் வெருட்டினது மட்டுமில்லாமல், ஜேவிபி இல்லாத நேரத்தில எதிர்க் கட்சியில இருந்து எட்டியிழுக்கிற யோசனை இருக்கிறதும் தானாம் காரணம்)... ஆனால் சுனாமியில பாதிக்கப்பட்ட சனம் மட்டும் குற்ற வாளியள் ஆக்கும் அடுத்த விசாரணை செப்ரெம்பர் நடுவில நடக்குமாம்.

உப்பிடியே இழுத்துக்கொண்டு போய் இறுதியில 'மாற்றியமைக்கப் பட்ட P-Toms' எண்ட வெறுஞ் சக்கையைத் துப்ப, அதைக் கொஞ் சக் காலம் இழுத்தடிச்சு மாத்த, சிகல உறுமயவும், முஸ்லிம் கட்சியள் எண்டு சொல்லப்படிற சிலதும் ஆளுக்காள் வழக்குப் போட, அதுக்குப பிறகு என்ன நடக்கிதெண்டு பார்க்க என்ரை ஆயுள் போதாமல் போயிடும்.

தெற்குக்கடற்கரையில நடக்கிற சிறுவர் விபச்சாரத்தால ஓடிற சிறிலங்காப்பொருளாதாரத்தை மீறி வளர்ந்த பேரினவாதத்துக்கு தகுந்த பதில் கெதியில கிடைக்குமெண்டு என்ரை மனம் சொல்லிது. உப்பிடிச் சேர்த்த காசில ஆயுதக் கொள்வனவுகள் பெரிசா வேற நடக்கிதாம்.

'சேர் கலகாத்' எண்டொரு பெரிய யுத்தக்கப்பலை பிரித்தானியா விட்டை இருந்து வேண்டிறதுக்கு கதைச்சுக்கொண்டிருக்கினம். அதை நாளைக்கு எங்கட கடற்புலியள் அடிச்சால் மட்டுமில்லை, அடிக்காமல் விட்டாலும் அரசாங்கத்துக்கு நட்டம் தான். ஏனெண்டு கேட்பியள். ஃபல்க் லாண்ட் போரில சேதப்பட்ட அந்த மியூசியத்துக்கு செலவழிச்சுக் கட்டாது எண்டுதான் பிரித்தானியா சிறிலங்காவுக்குத் தட்டிவிடப்பார்க் கிது.

குழி தோண்டிறதெண்டால் பிரிட்டனுக்குக் கைவந்த கலை யாச்சே! ஆ... அந்தக் கப்பலுக்கு எண்ணெய் விடவே மாதத்துக்கு 400 மில்லியன் (40 கோடி) ரூபா வேணுமாம். இது நேவியின்ரை மொத்த எண்ணெய்ச்செலவில அரைவாசிக்கும் அதிகம். உப்பிடி யொரு லெவலில உவையளுக்கு உது தேவையோ? அதுதான் சொல்லிறன்: 'கலகாத்' ஓடஓட சிறிலங்காவின்ரை கதை கந்தல் தான்! (இப்பை மட்டும் என்னவாம்!).

அப்பிடி அரசியல் போகுது. அதுக்கிளை முஸ்லிம் அரசியல் கட்சியள் எண்டு தங்களைத் தாங்களே அழைச்சுக்கொள்ளிறவையளைப் பார்த்தனீங்களே! உண்மையிலயே முஸ்லிம் பொதுமக்கள் பாவங்கள். தமிழ் அரசியல்வாதியளை நம்பி நாங்கள் 1970கள் வரைக்கும் எப்பிடி நாங்கள் மோசம் போனோமோ, அதேநிலைதான் பாவம் அந்தச் சனத்துக்கும். கொழும்பில விஐபி நிலையில தங்கட சுகபோகங்களைத் தக்கவைச்சுக் கொள்ளிறதுக்காக அப்பாவி முஸ்லிம் சனத்துக்கு உதவியள் கிடைக்கிறதைத் தடுக்கினம்.

அரசாங்கத்துக்கு ஆதரவளிச்சுக் கொண்டு அந்தக் கொழும்புத் தலைமையள் புலியளுக்குக்குடுத் தால் எங்களுக்கும் தரோணும், அவையளை விட்டால் எங்களையும் சைன் பண்ண விடோணும், சமா தானச் செயலகம் திறக்க விடோணும் எண்டினம்.

புலியளுக்குக் குடுக்காட்டி அவையள் கேட்டு அரசாங்கத்தைக் கரைச்சல் படுத்தமாட்டினம். உதென் னவெண்டு உங்களுக்கு விளங்கு தோ? முஸ்லிம் மக்களுக்கும் விளங் கீட்டிது.

நாங்கள் நம்பி நாசமாய்ப்போய் தெளிஞ்சநேரத்துக்கு எங்களுக் கெண்டு ஒரு அமைப்பும் இருக் கேல்லை. அப்பிடியிருக்கத்தான் தமிழினத்துக்குக் கிடைச்ச அதிஷ்ட மாய் தலைவர் தன்ரை அலுவல் களைத் துடங்கியிருந்தார்.

இண்டைக்கு முஸ்லிம் மக்களும் அரசியல் பேசிற சந்தர்ப்பவாதியளால போக்காட்டப்பட்டாலும் மதசார்பற்ற, பலமானதொரு இயக்கமாக இருக் கிற புலியள் அவையின்ரை தனித்து வங்களோட ஏற்று உறவாய் இருக் கேக்கிளை முஸ்லிம் சனம் ஒண்டுக் கும் யோசிக்காமல் சந்தோசமாய் தமிழ்பேசும் இனமாய் உரிமையளுக் குக் குரல் குடுக்கிறதுக்குத் தயாரா கலாம்.

சண்டை வெடிக்கப்போகுது போல கிடக்கிது. சுனாமியோட ஓய்ஞ்சிருந்ததை அரசாங்கம்தான் திருப்பத்தொடங்கினது. எங்கட தரப்பு பொறுமை காக்கிறதை விளங்கிக் கொள்ளாமல் அரசாங்கத்துக்கு ஆகலும் குரங்குச்சேட்டை கூடிட்டிது.

முந்தி பெண்போராளியளின்ரை இடுப்புபெல்ற்றில கைவைச்சவை. பேந்து தாடியின்ர்ரை கும்பலைக் கொண்டு அடிக்கப்போனவை. அப்பி டியே தொடர்ந்து போராளியளைக் கொலை செய்யிற அளவுக்குப் போயிட்டினம்.

எப்பிடிச் சீண்டினால் தமிழரைப் போருக்குள்ளை இழுத்து அழிக்க லாம் எண்டு அலையிற சிங்கள ஆதிக்கத்துக்கு முன்னால எங்களில சில ஆக்கள் (ஒருசில ஆக்கள் தான் இப்பிடி) "..ஐயோ! 3 வருசமாய் பயமில்லாமல் சுதந்திரமாய் இருந்த னாங்கள். இப்ப சண்டை தொடங்கப் போகுதுபோல.

ஏதோ ஒத்துப்போய் அமைதி யைக் கடைப்பிடிக்கோணும் எண்டி றதுதான் எங்கட ஆசையெல் லாம்...", எண்டு கொழும்பு வானொலி யளுக்குப் பேட்டி குடுக்கினம். ஒருத் தரையும் பிழைசொல்லேலாது பாருங்கோ. கடந்த 3 வருசமாய் அனுபவிச்சதுதான் சுதந்திரம் எண்டு நினைக்கிற அதைப்போல அப்பாவி சீவன்களுக்காக மனம் வருந்திற தைத் தவிர வேற என்ன செய்யிறது.

400, 500 வருசமாய் எண்டால் 15 தலைமுறையளுக்கு மேலாய் சுதந்திரம் எண்டால் எப்பிடி இருக்கும் எண்டிறதையே மறந்துபோனதால வந்த மனப்பான்மைதான் உது. உங்களுக்குத் தெரியுமெல்லோ!

குடாநாட்டுக்கடலில மீன் பிடிக்கிறவை கடல்-தொழிலாளர்கள் உள்ளாடை மட்டும்தான் போட்டுக் கொண்டு நிற்கோணும் எண்டு நேவி சட்டம் போட்டதெல்லோ! அப்ப தன்னைக் காந்தீயவாதத்தைப் பின்பற்றிற புத்திஜீவி எண்டு சொல்லிக்கொள்ளிற ஒருத்தர் சொன்னாராம்: 'என்ன ஆம்பிளையள் எல்லே. சும்மா பிரச்சினைப்படாமல் அந்தச் சட்டத்தைப் பின்பற்றினால் என்னவாம்!' எண்டு.

ஏன் சோலி, சுரட்டை எண்டு பஞ்சிப்பட்டுக்கொண்டே காலாகாலத் துக்கும் காலுக்கிள்ளை கிடக்கிறதும் ஒரு வாழ்க்கையே? போயும், போயும் 200 போர்த்துக்கேயர், 1500 சிங்களக் கூலிப்படையளோட வந்து எங்கட சுதந்திரத்தைப் பறிச்செடுக்கேக்கிளை அறிவு மிஞ்சிப்போய்(?) அடங்கிப் போனதாலதானே ஐநூறு வருசம் அடக்கப்படிற இனமாய் ஆனனாங் கள்.

அவனாரோ முந்திப்பிந்தி தெரி யாத இந்திரனுக்கும், தேவர்களுக்கும் ராச்சியம் மீண்டது, அதுஇதெண்டு தீபாவளி கொண்டாடிறம். எங்கட ராச்சியத்தை, வாழ்வாதாரத்தை மீட் டெடுக்கிறதுக்கு, இவ்வளவு பட்டாப் பிறகும் எங்களில ஒருசிலர் பின்னடிக் கலாமோ!

விதிவிலக்காய் இன்னும் விளங்காமல் இருக்கிற அந்த ஒருசிலரைப் பார்த்துக்கேட்கிறன்: "உங்கட அடுத்த சந்ததிக்கு சுதந்தி ரத்தைப் பெற்றுக்குடுக்கப் போறீங் களோ? அல்லாட்டி மினுங்கல் தாளால அடிமை வாழ்க்கையைச் சுற்றிப் பரிசளிக்கப்போறீங்களோ? யோசிச்சுப்பாருங்கோ நல்லாய்! அடுத்த கிழமை சந்திப்பம், நான் வாறன்.

# கூத்துக்கலை குறைந்துகொண்டே போகிறது

## மூத்த அண்ணாவியார் பெலிக்கான்



கலைவடிவங்கள் ஒரு இனத்தினுடைய அடிநாதமாக விளங்குகின்றன. நாடுகளிற்கு அப்பால் மனிதர்களை ஒன்றிக்கச்செய்யும் அற்புதத் தொடர்பு சாதனங்களாகக் கலை உருக்களைக் கருதமுடியும்.

சமூகத்தினுடைய அடையாளமாக அவர்களால் ஆடப்படுவதும் பேணப்படுவதுமான தனித்தனிக் கலைகளும் உள்ளன. தமிழர் தம் பாரம்பரியங்களை வெளிக்கொணரும் அதேவேளை நாட்டுக் கூத்து பாரம்பரிய கலைவடிவமாகவும் எம்மவர்களால் தொண்டுதொட்டு ஆளப்பட்டுவருகின்றது.

கலைஞர் உள்ளத்தில் தோன்றும் கருத்தை வெளியிடவேண்டுமென்றால் அதனை கவிதையாக, கட்டுரையாக, நாடகமாக வெளிக்காட்டுவதுபோல கூத்தாகவும் வெளிக்கொணரலாம். கலைஞரின் மாறுபட்ட சிந்தனை வெளிப்பாடுகளினால் கலைவடிவங்கள் பல்வேறு கோணங்களில் முன்வைக்கப்படுகின்றன. இதன் ஒரு அங்கமாகவே தென்மோடி நாட்டுக்கூத்தை ஆடிவருகிறோம் எனக் குறிப்பிடுகின்றார். தென்மோடி நாட்டுக்கூத்துக் கலைஞரும் மூத்த அண்ணாவியாருமான செபஸ்தியாம்பிள்ளை டானியல் பெலிக்கான்.

நாட்டுக்கூத்து கலையை மிக நுணுக்கமாகக் கற்று வலுநேர்த்தியாக ஆடிவருகின்றார். கலைஞர் நாட்டுக் கூத்துக்கலை தொடர்பாக பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர் முன் வைக்கிறோம்.

**நாம்:** *கூத்துக்கலைக்குள் உள் நுழைந்தமை...*

**பெலிக்கான்:** இயல்பாகவே எமது பகுதியில் பல கூத்துக்கலைஞர்கள் தோற்றம்பெற்றனர். அவர்களில் என் தந்தையான செபஸ்தியாம்பிள்ளையும் ஒருவர். இவர்களால் ஆடப்படும் கூத்துக்களை சிறுவயதில் இருந்தே பார்த்து மகிழ்ந்தது போக நானும் பாடவேண்டும், ஆடவேண்டும் என்ற மனநிலையை வளர்த்துக்கொண்டேன். இதன் பயனாக ஒன்பதாவது வயதில் ''ஏழுபிள்ளை நல்லதங்காள்'' நாடகத்தில் ஏழு பிள்ளை நல்லதங்காளாகக் கூத்துக்கலையில் கால்வைத்தேன்.

தொடர்ந்து பல்வேறு பாத்திரங்களில் நடித்து எமது கிராமத்திற்கு அப்பாலும் பலரது பாராட்டைப்பெற்றேன். வில்லன், ராஜபாட், இஸ்திரி, புனிதர் என என் பங்களிப்பை இத்துறைக்கு வழங்கிவருகிறேன் என பதிலளித்தவரிடம்.

**நாம்:** *கலைஞராக இருந்த நீங்கள் நெறியாளராக...*

**பெலிக்கான்:** இன்றுவரை 40 இற்கு மேற்பட்ட கூத்துக்களில் நடித்த போதிலும் இயல்பாகவே என்னிடமிருந்த குரல்வளமும் எந்தப் பாத்திரத்தையும் உடனே செய்யக்கூடிய திறமையை வளர்த்துக் கொண்டமையும் என்னுடன் இணைந்து நடித்தவர்களின் விருப்புடனும் நாட்டுக் கூத்துக்கலை பழக்கத்தொடங்கினேன். பல இளம் கலைஞர்களை உருவாக்கிய போதிலும் ஒரு சிலரே தொடர்ந்தியங்கி வருகின்றனர். முழுவதும் இளம் பெண்களைக்கொண்டு "புனிதவதி" என்ற கூத்தையும் மேடையேற்றியுள்ளேன்.

செபஸ்தியார், சஞ்சுவான், வீரத்தளபதி, கருங்குயில் கொன்றத்தின் கொலை, சங்கிலியன், விஜயமனோகரன், ஞான சௌந்தரி, ஏழுபிள்ளை நல்லதங்காள், கெனோவா, அலங்காரரூபன் இவை நான் நெறியாள்கை செய்த நாட்டுக்கூத்துக்களில் குறிப்பிடும் டியானவை என சிறுபுன்னகையுடன் நந்தவரை.

**நாம்:** *நாட்டுக்கூத்தில் பெண்களை ஈடுபடுத்துகின்றமை...*

**பெலிக்கான்:** விஜயமனோகரி, புனிதவதி போன்ற கூத்துக்களில் பெண் பாத்திரங்கள் கூடுதலாகவுள்ளன...

> கடந்த பத்துவருடங்களிற்கு முன்பிருந்த நிலை இன்றில்லை. கூத்துக் கலை குறைந்துகொண்டே போகின்றது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களும், நிம்மதியற்ற வாழ்க்கையுமே காரணமாகின்றன. நல்ல திறமையான கூத்துக்கலைஞர்களை இழந்ததுடன் பலர் சிதறி பல்வேறு இடங்களிலுள்ளனர். கூத்துக் கலை அருகிவருவதற்குக் காரணமாக இருந்தாலும் தொலைக்காட்சிகளின் அதிகரித்த பாவனையும், இளைஞர்கள் இலத்திரனியல் ஊடகங்களில் பெருமளவான நேரத்தை செலவிடுவதுமே எமது கலை வடிவத்தில் சிறு தொய்வு ஏற்பட்டுள்ளதெனலாம்.

இதற்கு அங்கால இன்றைய இளைஞர்களை ஒன்றுசேர்த்து (எல்லோருமல்ல) கூத்தைப் பழக்குவது ஆகாதகாரியம்... குறித்த நேரத்திற்கு ஒழுங்காக ஒத்திகைகளில் பங்குபற்றினாலே நிறைவான படைப்பை வெளிக்கொணரலாம். எதிர்வரும் ஆகஸ்ட் 15ஆம் திகதி முழுவதும் பெண் பிள்ளைகள் நடிக்கின்ற விஜயமனோகரி கூத்தைப் போடவுள்ளேன்.

நாங்கள் நடித்த ஆரம்பகாலங்களில் பெண் பாத்திரங்களில் பெண்களைப் போடுவதில்லை. சமூகம் ஏற்றுக்கொள்ளாமையும் அவர்கள் முன்வராமையுமே காரணங்களாகும். இப்பொழுது அந்த நிலை மாறியுள்ளது. இந்நிலை இனிவரும் காலங்களிலும் தொடரவேண்டுமென ஆதங்கப்பட்டவரிடம்.

**நாம்:** *நாட்டுக்கூத்தின் இன்றைய நிலை தொடர்பாக...*

**பெலிக்கான்:** கடந்த பத்து வருடங்களிற்கு முன்பிருந்தநிலை இன்றில்லை. கூத்துக்கலை குறைந்து கொண்டே போகிறது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களும், நிம்மதியற்ற வாழ்க்கையுமே காரணமாகின்றன. நல்ல திறமையான கூத்துக்கலைஞர்களை இழந்ததுடன் பலர் சிதறி பல்வேறு இடங்களிலுள்ளனர். கூத்துக்கலை அருகி வருவதற்குக் காரணமாக இருந்தாலும் தொலைக்காட்சிகளின் அதிகரித்த பாவனையும், இளைஞர்கள் இலத்திரனியல் ஊடகங்களில் பெருமளவான நேரத்தை செலவிடுவதுமே எமது கலை வடிவத்தில் சிறு தொய்வு ஏற்பட்டுள்ளதெனலாம் எனக் கூறியவரிடம்...

**நாம்:** *கூத்துக் கலைக்கு புத்துயிர் கொடுக்கும் முயற்சிகள் எதனையும்.....*

**பெலிக்கான்:** கடந்த ஐம்பது வருடங்களிற்கு மேலாக கூத்துக் கலைஞராக இயங்கிவருகின்றேன். கூத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரவேண்டுமென்றால் கிராம ரீதியாக நாடகமன்றங்களை அமைக்கவேண்டும். இதனுள் கலைஞர்களை உள்வாங்கி, கலை ரீதியான பயிற்சிகளைக் கொடுப் பதுடன் கலைஞர்கள் கலைவடிவங்கள் தொடர்பான நூல்கள் வெளியீடுகளையும் இளைஞர்கள் பார்க்கும்வகையில், மன்றங்களில் வைக்கவேண்டும்.

ஒரு வருடத்தில் நான்கு கூத்தையாவது போடவேண்டும். இதன் ஊடாக பார்வையாளர்களை உள் இழுப்பதுடன் புதிய கலைஞர்களையும் உருவாக்க முடியும். நவீன பாணியில் அமையக் கூடிய கூத்துக்களைப் போடுவதினால் இளையோரைக் கவரலாம் என பதிலளித்தவரிடம்;

**நாம்:** *தந்தையாரின் வழிவந்ததாகக் கூறும் நீங்கள் உங்களிற்குப்பின்னால்....*

**பெலிக்கான்:** என் புதல்வர்கள் கூத்துக் கலைக்குள் உள்வரவில்லை. இருந்தாலும் எழுத்துத்துறையிலும் நாடகத்துறையுடனும் இயங்கிவருகின்றனர். அமரர் டானியல் அன்ரனி, டானியல்- சௌந்தரம், டானியல்-ஜீவா மூவருமே எழுத்தாளர்களாக நாடக ஆசிரியர்களாகவுள்ளனர். எனது பேரப்பிள்ளைகள் (சௌந்தரத்தின் மகள்) என் உறவினர்கள் எனப் பலர் பாடுகின்றனர். இருந்தாலும் என் வழியில் நின்று எனது பெயரைச் சொல்லக்கூடியவகையில், கூத்துக் கலையில் புதல்வர்கள் நாட்டம்கொள்ளவில்லையென தன் நிலையை விபரித்தவரிடம்...

**நாம்:** *மூத்த கூத்துக் கலைஞர்களுடன் இன்றைய கலைஞர்களை ஒப்பிடுவீர்களா...*

**பெலிக்கான்:** ஒப்பிட முடியாது... ஒலி, ஒளி வசதி இல்லாத போதும் தம் திறமையால் இரண்டு இரவுகள் தொடர்ந்துபாடி ஆடியவர்களும் உள்ளனர். புகுந்தான் ம.ஜோசப், சில்லாலையூர்- செல்வராஜா, பக்கீரி, அண்ணாவியார் வின்சன்டிபோல், புலவர் நல்லையா, ஏஸ்தாக்கி எனப் பல திறமையான அற்புதக் கலைஞர்கள் இருந்தனர். சிலர் இருக்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை கூத்துக் கலைக்காகவே தோற்றம்பெற்றதாகக் கருதுகிறேன். போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லாத போதும் தாம் ஏற்கும் பாத்திரங்களை மிகத்திறமையாக வெளிப்படுத்தி கதைக்குரிய நாயகர்களை ஞாபகப்படுத்துவர். இன்றுள்ளவர்களை நீங்களே பார்க்கின்றீர்கள்தானே... நான் எண்ணத்தை... என நசூக்கா பதிலளித்ததுடன் தன் கருத்துக்களையும் நிறைவுசெய்தார்.

அண்ணாவியார் டானியல் பெலிக்கான் கலைஞரிற்கு அப்பால் சிறந்த விளையாட்டு வீரன், சமூக சேவையாளன், நாட்டுக் கூத்தையே தன் மூச்சாகக்கொண்டு இயங்கிவரும் அண்ணாவியார் பெண்பாத்திர மேற்றமைக்காக (எஸ்தாக்கியர்- மனைவி) "நாட்டுக் கூத்து மாமேதை'' என்ற விருதையும் கிராம மக்களால் "பொற்கிளி" வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். பல இடங்களில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.72 வயதில் தொடர்ந்தியங்கிவரும்


**இரா-வின்**

அண்ணாவியாரின் நெறியாள்கையில் உருவான ''சஞ்சுவான்'', ''அலங்கார ரூபன்'' ஆகிய கூத்துக்கள் வீடியோப்படமாக்கப்பட்டுள்ளன. இதனூடாக அண்ணாவியாரின் திறமையான பதிவை நாம் காணமுடியும்.

பாரம்பரிய கலைவடிவமான கூத்துக் கலையானது கரையோரக் கிராம மக்களாலேயே பாதுகாக்கப்பட்டுவருகின்றது. இதற்குப் பல உதாரணங்களைக் கூறமுடியும். தான் பயின்ற கலையை தன் சார்ந்தவர்களிற்கு பயிற்றுவித்து அதனூடாக தானும் தன் சார்ந்தவர்களும் நிறைவுபெறும் அரிய பணியை செய்துவருகிறார் பெலிக்கான். ஈழத்துக் கூத்துத்துறைக்கு பெரும் பங்காற்றியவர்களில் அண்ணாவியாரும் ஒருவர் என்பது குறிப்பிடப்படவேண்டியதொன்று.




# ஆஷஸ் தொடர் யாருக்கு..?



அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத்தின் கூற்றுக்களை பார்க்கும்போது அவுஸ்திரேலிய அணி ஆஷஸ் தொடரின அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று வரலாற்றுச் சாதனை படைக்கும் என்றே கருதவேண்டியுள்ளது.

கடந்த 21ஆம் திகதி லோட்ர்சில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றமை மேற்படி மெக்ராத்தின் கருத்தை மேலும் வலுப்பெற வைத்துள்ளதெனலாம்.

ஆஷஸ் டெஸ்ட் போட்டி ஆரம்பமாகுவதற்கு முன்னர் அவர், "ஆஷஸ் தொடரின் அனைத்துப் போட்டியிலும் நாங்கள் இம்முறை வெற்றி கொள்வோம்'' என நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

ஆனால், இத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் நிலை அவ்வாறு இருக்கவில்லை. ஏனெனில், இங்கிலாந்து அணி மீது இருந்த எதிர்பார்ப்புக்கள் மற்றும் நட்வெட்ஸ் முக்கோணப் போட்டித் தொட ரில் இங்கிலாந்து அணி விளை யாடிய விதம் அவ்வணியின் மீது அதீத நம்பிக்கையை ரசிகர்கள் மத்தியிலும், கிரிக் கெட் அவதானிப்பாளர்கள் மத்தி யிலும் ஏற்படுத்தியிருந்தது.

ஏனெனில், இங்கிலாந்து அணி பொதுவாக ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் சிறப் பாக விளையாடியதில்லை. ஆனால், இங்கிலாந்தில் நடைபெற்ற மேற்படி முக்கோணத் தொடரில் அவுஸ்திரேலிய அணியை இரண்டு முறை தோல்வியுறச் செய்ததுடன், ஆஷஸ் டெஸ்ட் தொடரில் நாங்கள் சவால்களை எதிர்கொள்ளத் தயார் என்ற ஒரு தோற்றப்பாட்டை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன் டெஸ்ட் தரப் படுத்தலில் இரண்டாவது இடத்தைத் தக்கவைத்துள்ள இங்கிலாந்து அணியினரைப் பொறுத்தவரை டெஸ்ட் போட்டிகளில்தான் அவர்கள் சிறப்பாக விளையாடுவார்கள் என்றதொரு நிலையிருந்தது.

எனவே, ஆஷஸ் போட்டித் தொடர் இம்முறை விறுவிறுப்பாகவும், போட்டியின் போக்கை இறுதி வரை தீமானிக்க முடியாத வகையிலும் அமையும் எனக் கருதுவதற்கு காரணமாக அமைந்தது.

ஆனால், இப்போட்டித் தொடரின் முதல் போட்டியிலேயே இங்கிலாந்து அணி அடைந்த படுதோல்வி அவ் அணி மீது இருந்த எதிர்பார்ப்பை சிதறடித்ததுடன் மெக்ராத் கூறியிருந்த கருத்தின் மீது கிரிக்கெட் ரசிகர்களின் பார்வை திரும்பியுள்ளதற்குக் காரணமாக அமைந்துள்ளதெனலாம்.

மெக்ராத்தின் இக்கருத்தை உற்றுநோக்கும்போது அவர் தெளிவாகவே தன்னுடைய கருத்தை முன்வைத்துள்ளார்போல் தெரிகின்றது.

ஏனெனில், இங்கிலாந்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடுகளங்களின் தன்மையை மனதிற்கொண்டே அவர் எதிர்வு கூறலைச் செய்துள்ளாா போல் தெரிகிறது. ஏனெனில், இங்கிலாந்து ஆடு களத்தைப்பொறுத்து பொதுவாகவே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாகவே அமைக்கப்படுவதுண்டு.

அக்கருத்தை புலப்படுத்தும் விதத்திலேயே லோட்ஸ் டெஸ்ட்டும் முடிந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

மேலும் தன்னுடைய கடந்த கால அனுபவங்களின் வெளிப்பாடாகவே அவர் இக்கருத்தை முன்வைத்திருக்க வேண்டும்.

அத்துடன் இப்போட்டியில் இரு இனிங்சிலுமாக ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்தி மேற்படி வெற்றிக்குக் காரணமாக இருந்தார். என்பதற்கு போட்டியில் ஆட்ட நாயகன் விருது அவருக்கு வழங்கப்பட்டதே போதிய சான்றாகும்.

எனவே, எட்டாவது ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலிய அணி முழுமையாகக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்பதற்குக் கட்டியம் கூறுவது போன்றே முதலாவது ஆஷஸ் டெஸ்ட் முடிவு அமைந்துள்ளது. இந்நிலையில் மெக்ராத்தும் தன்னுடைய அனுபவங்களை வெளிப்படுத்தி அவுஸ் அணியை அடுத்த போட்டிகளிலும் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லுவார் என்று எதிர்பார்க்க இடமுண்டு.

பூ.சுபானந்

---

(06ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் அரசியலமைப்பின்படி தேர்தல் திகதியை நிர்ணயிக்கும் பொறுப்பு தேர்தல் ஆணையாளருக்குத்தான் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது ன்பதனை ந்திரக்கட்சி திரும்பத் திரும்ப லியுறுத்திவரும் சமநேரத்தில்; தேர்தல் அடுத்த வருடமே நடத்தப்படும் எனவும் வலியுறுத்தி தெரிவித்தும் வருகிறது.இது தேர்தல் ஆணையாளரை அச்சுறுத்துவதாக ஆகாதா? இத்தனைக்கும் தேர்தல் ஆணையாளர் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றபிறகே இந்த முடிவுக்கு வந்திருப்பதாக தெரிகிறது. சட்டமா அதிபரின் காரியாலயத்திற்குச் சென்றிருந்த தேர்தல் ஆணையாளர் அவருடன் நீண்ட நேரம் தனிமையில் ஆலோசனை கலந்ததாக சில வாரங்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தது இங்கு கவனிக்க வேண்டியதாகும்.

அப்படியாயின், தனக்கு சாதகமில்லாத கருத்தையோ முடிவையோ வெளியிடுபவர்களை தூசிப்பதும், விமர்சிப்பதும், நீதிமன்றத்திற்கு இழுப்பதுவும்தான் சுதந்திரக்கட்சியின் தந்திரோபாயமாக இருக்கிறதா? (இனப்பிரச்சினை விவகாரத்திலும் இந்த நிலைப்பாடு ஒட்டுமொத்த சிங்கள அரசியல் சமூகத்தாலும் பேரினவாதிகளாலும் பின்பற்றப்படுவது கவனிக்கத் தக்கது) ஏற்கனவே பிரதம நீதியரசர்மீது பலவிதமான குற்றச்சாட்டுக்களும் பல தரப்பாலும் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் ஆணையாளரை உயர் நீதிமன்றின் முன் நிறுத்துவது என்பது இன்னும் நெருடலான சூழலை உருவாக்கக் கூடும்.

இந்த எல்லாப் பொல்லாப்புக்களிலும் இருந்து தப்பிக் கொள்வதற்கு சுதந்திரக்கட்சிக்கும் அதன் அரசாங்கத்திற்கும் இருக்கக்கூடிய குறுக்குவழி நாட்டைப் பதற்றத்துக்குள்ளாக்குவதே. இதன் ஒரு அங்கமாக நோர்வேயின் அனுசரணைப் பணியின் நேர்மைத்தன்மை பற்றிய ஒரு சுற்று விவாதம் கொழும்பு அரசியல்களத்தில் எழக்கூடும். அனுசரணையாளர்களை மாற்றவேண்டும் என்று முன்னர் எழுப்பப்பட்ட குரல்களுக்கு மீள உற்சாகமூட்டப்படவும் கூடும். ஏற்கனவே தொத்துப் பறியிலுள்ள சமாதான முயற்சிகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் இந்தக் கூச்சல், குழப்பங்கள் இன்னும் பலவீனப்படுத்திவிடவும் கூடும்.

ஆனால் இந்தக் குழப்பங்கள் அனைத்துமே அம்மையாருக்குத் தேவையாக உள்ளன. எனவே அவை நிகழ்வதற்கான ஏதுக்கள் அதிகமாகவே உள்ளன.

20வருடகால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்

## கலாலயா
## பயிற்சியகம்

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

கிழமை நாள் பிரிவுக்கான அனுமதிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கிழமை நாள் புதிய பிரிவு- II எதிர்வரும் 01.08.2005 (திங்கள்) முதல் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

மகளிருக்கான துரித மூன்று மாதகாலப் பயிற்சிகள்

★ கேக் ஐஸிங் -22 வகையான கேக் அமைப்புக்களில் ஐஸிங் செய்தல் FONDANT ICING மாச்சீனி மலர்கள் செய்தல்.
★ கூந்தல் அலங்காரம் -20 வகையான HAIR STYLES
★ உணவு தயாரித்தல -COOKERY-சிற்றுண்டிகள் மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகள்.
★ கை வேலை -கடதாசி, துணிகளில் அலங்கரிப்பு, முத்துமாலை
★FABRIC PAINTING -துணிகளில் சாடிகளில் மண்ணில் வர்ணந் தீட்டல்.

அடிப்படை முக அழகுக்கலை (FACIAL) வகுப்புகள்

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

6 மாதகால தையல் பயிற்சி,
பு,வேலை பயிற்சியும் ஆரம்பமாகின்றன.

*மேலதிக விபரங்களை காலை 9.00 மணிமுதல் பி.ப.2.30 மணி வரையில் நேரில் அறிந்துகொள்ளலாம்.*
(சி-12424)

கலையுலகில் 40 ஆண்டுகள்
நிறைவின் மகிழ்வில்

## திருமறைக் கலாமன்றம்

வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி

## கலைச் சங்கமம்

30,31 ஜூலை 2005 (சனி, ஞாயிறு) ஆகிய இருநாட்களும் மாலை 6.30 மணிக்கு யாழ்திருமறைக் கலாமன்ற அரங்கில்

★சிறப்புரைகள் ★நடனங்கள்

இவற்றுடன்

**30-07-2005 சனிக்கிழமை**

யாழ்ப்பாணம், இளவாலை, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, புத்தளம், ஹப்புத்தளை, கொழும்பு, பொலன்நறுவை, இரத்தினபுரி, காலி, கண்டி, அவிசாவளை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், மாத்தறை, பாணந்துறை, மொனராகல ஆகிய பிரதேசங்களில் இயங்கும் இருபது திருமறைக் கலாமன்றங்களும் வழங்கும் கலை நிகழ்வுகள்.

**31-07-2005 ஞாயிற்றுக்கிழமை**

★கலைஞர் கௌரவிப்பு
★கொல் ஈனுங் கொற்றம்-கூத்துருவ நாடகம்
(தயாரிப்பு-யாழ் திருமறைக் கலாமன்றம்)

குறிப்பு:
இன்று வெள்ளி முதல் ஞாயிறு வரை 29,30,31 ஆகிய திகதிகளில் யாழ் றக்கா வீதியிலுள்ள எமது கலாமுற்ற வளாகத்தில் திருமறைக் கலாமன்றத்தின் வரலாற்றுப் பதிவுகளை வெளிப்படுத்தும் கண்காட்சி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை இடம் பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

*அனைத்து நிகழ்வுகளுக்கான அனுமதிகளும் முற்றிலும் இலவசம்.*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021-222 2393

திருமறைக் கலாமன்றம்.
(சி-12423)




விவசாயிகள் தமது விவசாயச் செய்கையில் உச்ச பயன் பெற விவசாய நிலத்திற்கு உரப்பசளை இடுவது ஒரு வழக்கமான நடவடிக்கையாகும்.

பயிர்கள் தமக்குத் தேவையான 13 வகைப்பட்ட சத்துக்களை மண்ணில் இருந்தும் மண்ணுக்கு இடப்படும் உரப்பசளையில் இருந்தும் பெற்றுக் கொள்கின்றன.

ஆனால் விவசாயிகள் இந்த

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

13 வகையான சத்துக்களுக்காக உரங்களை இடவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பயிருக்கு அவசியமான போசனைச் சத்துக்கள் விவசாய நிலத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே அவற்றினை மண்ணுக்கு செயற் கையாக வழங்கவேண்டும்.

அதாவது எந்தச்சத்து மண்ணில் குறைவாக உள்ளதோ அதனை வழங்கக் கூடிய உரங்களையே மண்ணுக்கு இடவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட அளவு நிலப்பரப்புக்குத் தேவையான சத்துக்களின் அளவினைக் கொண்டே அவசியமான உரத்தின் அளவு தீர்மானிக்கப்படவேண்டும்.

விவசாயிகள் தமது பயிருக்குத் தேவையான உரவகைகளைப் பொதுவான சிபாரிசின் அடிப்படையிலும் , மண்ணை பரிசோ தனை செய்து தேவையான அதாவது குறைபாடு உடைய




சத்துக்களை அறிந்து பின்னர் அதற்கேற்றவாறும் இடமுடியும்.

உரிய முறையில் மண்ணை ஆய்வு செய்து பற்றாக்குறையாக உள்ள சத்துக்களை அறிந்த பின்னர் உரிய உரங்களை மண்ணுக்கு இடுவதன் மூலம் உரத்திற்காகச் செலவழிக்கும் பணத்தை சிக்கனமாகப் பாவிக்க முடியும்.

உண்மையில் தற்போதைய சூழலில் உரத்திற்காக பெருமளவு பணம் விவசாயிகளால் செலவழிக்கப்படுதல் என்பது கஷ்டமான செயற்பாடே.

எனவே பணச் செலவை மீதப்படுத்த மண் பரிசோதனையும் அதன் பின்னரான உரப்பாவனையும் ஒரு பொருத்தமான நடவடிக்கையாக அமையும்.

விவசாயிகளின் இந்த நடவடிக்கைகளுக்கு விவசாயம் சார்ந்த நிபுணர்கள் உதவ வேண்டும்.



# செயற்கைமுறை சினைப்படுத்தல்

செயற்கைமுறை சினைப் படுத்தல் (Artificial Insemination) என்பது உயிர் தொழில் நுட்ப இனப் பெருக்கல் முறையாகும். அதாவது நல்லின ஆண் விலங்கின் சுக்கிலம் பெறப்பட்டு, விரிவாக்கல் பதார்த்தம் கலக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்படும். தேவையான வேளைகளில் , விசேட உபகரணம் மூலம் பெண்விலங்கின் இனப்பெருக்கத் தொகுதியினுள் செலுத்தப்படும். இம்முறையில் சாதாரண இன பெண் கால்நடை விலங்குகளுடன், நல்லின இன ஆண் விலங்கின் சுக்கிலம் (Semen) கலக்கப்படுவதால், அடுத்த சந்ததியானது பிறபபுரிமையில் (Gentically) தரம் உயர்த்தப்படுகின்றது. இதன் மூலம் நமது பிரதேசத்தின் காலநிலைக் கேற்ப வளரக்கூடிய, உயர் உற்பத் தித்திறன் மிக்க புதிய சந்ததியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதன் முதலாக 1937 ஆம் ஆணடு இலங்கையில், பேராதனையில் அமைந்த பண்ணையில் செயற்கை முறை சினைப்படுத்தல் அறிமுகப் படுத்தப்பட்டது. பிற்காலத்தில் குண்டக சாலையில் சகலவசதிகளுடனான ஒரு நிலையம் நிறுவப்பட்டது. அத்தோடு பொலநறுவையிலும், திருநெல்வேலியிலும் இவ்வாறான நிலையங்கள் அமைக்கப்பட்டு இன்றுவரை இயங்கி வருகின்றன. ஆனால் கடந்த 2003 ஆம் ஆண்டு தை மாதம் முதல் இவ்வாறான நிலையம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வன்னிப் பிரதேசத்திற்கு தனது சேவையை வழங்கிவருகின்றது.

செயற்கைமுறை சினைப் படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் சுக்கிலமானது பெறப்பயன்படுத்தப் படும காளைகளும், கிடாய்களும் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்குள்ள நிலையங்களில் வைத்துப் பராமரிக் கப்படுகின்றன. ஜேர்சி (Jersey) , பிரீ சியன் (Friesian), சகிவால் (Sahiwal), அவுஸ்திரேலியா பிரீசியன் சகிவால் (Australian Friesian Sahiwal) போன்ற இனக்காளைகளும், யமுனா பாரி (Jamunapary),சாணன் (Sanwn), போயர் (Boer) போன்ற இனக் கிடாய்களும், இதற்காகப் பயன்படுத் தப்படுகின்றன.

செயற்கை யோனி (Artificial Vagina) பயன்படுத்தப்பட்டு சுக் கிலமானது ஆண் விலங்குகளிலிருந்து பெறப்படுகின்றது. இச்சுக்கிலமானது விரிவாக்கல் கலவையுடன் (Extenders), கலக்கப்பட்டு குப்பிகளில் அடைக்கப்படுகின்றது. இவ் விரிவாக்கல் பதார்த்தமானது களஞ் சியப்படுத்தப்படும் கால வேளைகளில் விந்துகளிற்கு (Sperms), போசாக்கையும், பாதுகாப்பையும் வழங்குகின்றது. சுக்கிலம் தயார்ப்படுத்தல், மற்றும் களஞ்சியப்படுத்தும் முறைக்கேற்ப இருவகைப்படும்.

1. குளிரூட்டப்பட்ட சுக் கிலம் (Chilled semen) இது சாதாரண குளிர்சாதனப் பெட்டியில் $4^{0}c$ தொடக்கம் $8^{0}c$ வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. இவ் வகை சுக்கிலமானது தயாரிக்கப் பட்ட தினத்திலிருந்து மூன்று தினங் களிற்குள் பாவிக்கமுடியும். திருநெல் வேலி, கிளிநொச்சி நிலையங்களில் இவ்வகையே உற்பத்தி செய்யப்படு கின்றது.

2. உறையப்படுத்தப்பட்ட சுக்கிலம் (Deep Frozen Semen) உயர் தொழில்நுட்பமுறையின் மூலம் திரவ நைதரசனில் ( Liquid Nitrogen) $-196^{0}c$ வெப்பநிலையில் சுக்கிலமானது களஞ்சியப்படுத்தப் படுகின்றது. இவ்வகைச் சுக்கில மானது தயாரிக்கப்பட்ட தினத்தி லிருந்து பல வருடங்களிற்கு பாவிக்க முடியும். பொலநறுவை, குண்டக சாலை நிலையங்களில் இவ்வகையே உற்பத்தி செய்யப்படுகின்றது.

பசுவின் காம வெப்பச்சக் கரம் (Oestrus Cycle) சராசரியாக 21 நாட்கள் கொண்டதாகும். இச்சக்கரத் தில் வேட்கை (Heat) பருவமானது சராசரியாக 18 தொடக்கம் 26 மணித் தியாலங்கள் கொண்டது. இக்காலப் பகுதியில் பசுவானது பல வேட்கை அறிகுறிகளை (heat signs) வெளிப் படுத்தும்.

* உணவு உண்பதில் நாட்டமின்மை.
* தொடர்ந்து கத்துதல்.
* ஆரவாரம் அடைதல்.
* அடிக்கடி சிறுநீர் கழித்தல்.
* மற்றைய பசுக்கள் மேல் தாவுதல்.
* பெண்குறி சிவந்து வீக்கமடைந்து காணப்படும்.
* பெண்குறியிலிருந்து முட்டை வெண்கரு போன்று சீதம் வெளி யேறிக் காணப்படும்.

இவ்வாறான குணக்குறிகள் தென்பட்டதிலிருந்து 12 தொடக்கம் 24 மணித்தியாலத்திற்குள்ளான காலப்பகுதியில் பசுவினை செயற்கை முறை சினைப்படுத்தலுக்கு உட் படுத்த வேண்டும். கால்நடை அபி விருத்தி அலுவலர்களாலும் (Livestock Development Instructers. LDI), பயிற்றப்பட்ட தொழில்நுட்ப வியலாளர்களாலும் (AI Technicians) மேற்கொள்ளப்படுகின்றது.

செயற்கை முறை சினைப் படுத்தலானது, ஒரு நல்லின காளையிலிருந்து பல நல்லினக் கன்றுகளை பெற வழிவகை செய்கின்றது. மேலும் நல்லினக் காளை ஒன்றை கொண்டு சென்று இனக்கலப்புச் செய்வதைவிட சுக்கிலத்தைக் கொண்டு சென்று சினைப்படுத்துவது இலகுவானது. அத்துடன் காளை ஒன்றை பண்ணையில் வைத்து பராமரிக்கும் செலவை பண்ணையாளருக்கு இல்லாமல் செய்கின்றது. மேலும் பசுவின் இனப்பெருக்கம் தொடர்பான பதிவுகளை (Records)பேண வழிவகை செய்கின்றது.

வே.பா.ஜெகஜீவன்
விலங்கு மருத்துவபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

எவ்வாறாயினும் செயற்கை முறை சினைப்படுத்தலானது, சுக் கிலம் தயாரித்தல், களஞ்சியப்படுத் தல், தொழில் நுட்பவியலாளரின் பாவனைமுறை, பண்ணையாளரின் பராமரிப்பு, பசுவின் உடல் ஆரோக் கியம் என்பவற்றில் தங்கியுள்ளது. மேற்படி சகல காரணிகளும் முழு அளவில் நிவர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில்தான் வெற்றிகரமான செயற்கை முறை சினைப்படுத் தலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

* பிச்சை எடுத்தலும் விபச்சாரமும்.
* திருட்டும் குற்ற நடத்தைகளும்.

இன்று பல கிராம மேம்பாட்டுச் சிந்தனைகள் கிராமங் களில் வறுமை நிலையை ஒழித்தல் என்பதற்கு மேலாக கிராமங்களில் நகர மயமாக்கத்தையும் (urbanization) நவீன மயமாக்கத்தையும் (Modernization) கொண்டு வருவது தான் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் எனும் கருத்து பரவலாக நிலவி வருகின்றது. அத்துடன் உலகம் ஒரு சிறிய கிராமம் (World is a small village) எனும் உலக மயமாக்கல் சிந்தனையின் அடிப்படையில்.

கிராமிய மேம்பாட்டுச் சிந் தனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவை எவ்வளவு தூரம் கிராமிய மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பது கேள்விக்குறியாகும். எனவே அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத மக்களிடம் நவீனத்துவத்தைப் பற்றிப் பேசுவது சாத்தியமாகுமா? எனும் சந்தேகமும் எழுகின்றது.

''முதலில் வயிற்றுப் பசியைத் தீருங்கள் பின்னர் அறிவுப் பசியைப் பற்றிப் பேசுவோம்'' எனும் கருத்திற்கு ஒப்ப முதலில் அடிப்படைத்தேவையை நிறைவேற்ற வறுமையை ஒழிக்கும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அவை மக்கள் மத்தியில் பூரண பயன்பாட்டைத் தந்த பின்னரே நவீனமயமாக்கம் பற்றியோ நகரமயமாக்கம் பற்றியோ பேச முடியும் என்பது கிராமிய மேம் பாட்டு ஆர்வலர்களின் கருத்தாகும்.

சுகாதார சீர்கேடுகள், குறைந்த வாழ்நிலைகள், குற்ற நடத்தைகள், பாடசாலை இடைவிலகல், சிறுவர் ஊழியம் என்பன இனங் காணப்படுதல், சுய ஏற்றுக்கொள்ளல் (சுயபிரதிமை), உயர்வுக்கான அவா, அர்ப்பணிப்புடனான சமூகப்பணி என்பன மூலம் சுய விழிப்புணர்வை ஏற்படுத்தல், குழுக்களை அமைத்தல், தனிமனித மேம்பாட்டில் அக்கறை, உள்/வெளி நாட்டு உதவியுடனான சமூக அணிதிரட்டலும் மக்கட் பங்களிப்பும் போன்றவையே படிப்படியான கிராம மேம்பாட்டின் உத்திகளாகக் கொள்ளலாம்.

இன்றைய கிராமிய மேம் பாட்டிற்குகந்த நிலைகளாக சமூகத் திட்டமிடலாளர்களால் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

* சமூக அணிதிரட்டலும் (Social Mobilization) மக்கட் பங்களிப்பும் (People participation)
* நெகிழ்ச்சித் தன்மையுடைய சமூக அமைப்பு.
* வாழ்வில் உயர்வு காண வேண்டும் எனும் அவா.
* கல்விக்கான அக்கறையும் விழிப்புணர்வும்.
* துடிப்புள்ள மேம்பாட்டில் அக்கறை கொண்டவர்களின் அர்ப்பணிப்புடனான சமூகப்பணி (Social work)

இவ்வாறான திட்டமிடல்கள் மூலம் பின்தங்கியுள்ள பல கிராமங் களில் கிராமிய மேம்பாட்டிற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு ரீதியில் ஒரு பல்துறை இணையத்தின் (Inter Disciplinary) மையத்தில் மேம்பாட்டிற்கான அத்திவாரம் கிராமியப் பகுதிகளில் ஆழமாக்கப்படும்போது அடைந்து கொள்ள முடியாத தூரத்தில் இருப்பதாகத் தோன்றும் மேம்பாடு என்பது கைக்கெட்டும் தூரத்தில் அண்மித்து விடுவது உறுதி.

எல்லாவற்றுக்கும் மேலாக எமது நாடு எங்களுக்கு உரியது. எமது கிராமங்கள் பலவற்றை எம் கண்கள் எப்போது சுதந்திரமாகத் தரிசிக்கும்? எப்போது எமது பசுமையான கிராமங்களிலிருந்து பலிக் கெனப்பிறப்பெடுத்த இருண்ட உருவங்களின் ஆக்கிரமிப்பும் அடாவடித் தனமும் அகலும்? எமது தெருக்களில் நிம்மதியாக சுதந்திரக் காற்றை சுவாசித்துக்கொண்டு எப்போது நடப்போம்? அந்தக் கணங்கள் எமது கிராமிய மேம்பாட்டை, சமூக மேம்பாட்டை நாமெல்லோரும் ஒருங்கே சமூக, பொருளாதார, அரசியல் தீர்மானங்களும் 'தமிழர் தாயகம்' என்னும் கருத்தாக்கத் தினுள்ளே கட்டியெழுப்புவோம்.

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

### வடக்கு கிழக்கு மாகாண சபை
### வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் - II
### (நீகோட் - II)
### நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
### ஆஅவ கடன் இல:- 2168-சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் இல : 48

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (NECORD - II) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ. அ. வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம்(ருபா) |
|---|---|---|---|---|
| 01 | TC/NECORD-II/IR/01 | திருகோணமலை மாவட்டத்தின் நீலப்பனிக்கன் குளம் நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு. | M3 நீர்ப்பாசனம | 600,050/= |
| 02 | VA/NECORD-II/IR/01 | வவுனியா மாவட்டத்தின் சேம மடு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு. | M4 நீர்ப்பாசனம் | 358,080/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக் காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ. தே. நி. ஒ. ச.) உறுப்பினராக (ICTAD யுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434. ஃபக்ஸ் :026-2227401. இணையத்தள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk)

6. கேள்வி ஆவணங்களை 25.07.2005 இலிருந்து 08.08.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கபடாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்" 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 15.08.2005 மு.ப. 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று நீகோட் திட்ட காரியாலயம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் 08.08.2005 ஆந் திகதி அன்று மு.ப. 11.30 க்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச் சபை,
நீகோட் திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை.

(சி.12382)

## உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு

### வடக்கு கிழக்கு மாகாண சபை
### வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்பு திட்டம்
### (நீகோட் - விஸ்தரிப்பு)
### நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
### ஆஅவ கடன் இல:- 2084 - சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் இல : 43

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்பு திட்டம் (NECORD -Ext) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ. அ. வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச்சபைத் தலை வரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம்(ருபா) |
|---|---|---|---|---|
| 01 | TC/NECORD-Ext/IR/01 | கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணபல் கலைக்கழக விவசாய பீடத்தினை மீளமைத்தல(Stage–II) | M3 கட்டடங்கள் | 810,850/= |
| 02 | VA/NECORD-Ext/IR/01 | கள்நொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நிர்வாக மற்றும் மாணவர் செயறபாட்டு அலகுகள் நிர்மாணம் | M5 கட்டடங்கள் | 191,600/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணை யில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ. தே. நி. ஒ. ச.) உறுப்பினராக (ICTAD யுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர் களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமிகோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:026-2227434. ஃபக்ஸ்:026-2227401. இணையத்தள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )

6. கேள்வி ஆவணங்களை 25.07.2005 இலிருந்து 08.08.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்டகேள்விச்சபை, 'நீகோட்',55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 15.08.2005 மு.ப.11.30 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். இதன்பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று நீகோட் திட்ட காரியாலயம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் 08.08.2005 ஆந் திகதி அன்று மு.ப. 11.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர், கேள்விச் சபை, நீகோட் திட்டம்,**
**55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை.**

(சி-12383)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 13**

**பகுதி -57**

"நான் கோப்பைகளக் கழுவப் போறன்" என்று உரத்துச் செல்லிய அவன் தொடர்ந்து,

"அதுகள் நீந்துதுகள்...அதுகள் நனையுதுகள்.... எல்லாம் நனையுதுகள்... தண்ணி வெளியில பாயுது.... எங்க துண்டு?..... எங்க சவர்க்காரம்?... எங்க துடைக்கிற துணி? தண்ணிபாய்... பாய் என்ர கடவுளே எவ்வளவு சந்தோசமா யிருக்குது.!"

"நல்ல சந்தோசமாகத்தான் இருக்கி றியள்... என்ன?" என்று நான் சொன்னேன்.

"ஓம் தொட்டி நிரம்புது. இதுகள் நனையுது. சிலது தலகீழா இருக்குதுகள். எனக்கு சவர்க்காரம் தாங்க"

நான் அவனுக்கு சவர்க்காரத்தையும் கழுவும் துணியையும் துடைக்கும் துணியையும் எடுத்துக்கொடுத்தேன்.

கள்."

"உங்களுக்கு வியப்புத் தாறதுக் கெண்டு அம்மம்மா இதுகள அனுப்பினதில உங்களுக்குச் சந்தோசம்தானே? இல்லையா? என்று கேட்டேன்.

"ஓம் ஓமோம்! மே பன்னிரண்டாம் திகதி அம்மம்மா வீட்ட வருவா" அவனது கண்கள் மின்னிக்கொண்டிருக்க என்னைப் பார்த்தான். அவனது முகத்தில் புன்னகை யொன்று பெரிதாக [illegible]திருந்தது.

" அம்மம்மா வீட்ட வருவா" மீண்டும் அவன் சொன்னான் " சந்தோசமாயிரு! மே பன்னிரண்டாம் திகதி அம்மம்மா வீட்ட வருவா" என்று உணர்ச்சி பொங்க உரத்துச் சொன்னான்.

"அது உங்கள நல்லா சந்தோசப் படுத்துது எண்டு நான் நினைக்கிறன்" என்று விட்டு, "அம்மம்மாவை காணுறது உங்களுக்குச் சந்தோசமாயிருக்கும் அல்லவா" என்று சேர்த்துச் சொன்னேன்.

"ஓமோம்" என்று டிப்ஸ் சொன்னான். "சந்தோசத்தில நான் வெடிக்கப் போறன் போல இருக்குது" என்று தொடர்ந்து சொன்னவன் பாடத் தொடங்கினான்.

**அம்மம்மாட்ட இருந்து**
**அன்போட டிப்ஸுக்கு**
**அன்போட டிப்ஸுக்கு**
**அம்மம்மா வருவா**
**அம்மம்மா வருவா**
**அம்மம்மா வீட்ட வருவா**
**அன்போட வருவா.**

உற்சாகமாக தன் கைகளை தட்டி னான். " நான் ஒரு விருந்து வைக்கப்போறன்" என்று அறிவிப்பது போல சொன்னான்.

"இப்பவே இப்பவே நான் ஒரு விருந்து வைக்கப் போறன்"




அங்கிருந்து சிறிய கோப்பைகளை எல்லாம் வரிசையாக வைத்தான். ஒவ்வொரு கோப்பைக்குள்ளும் நீரை நிரப்பினான்.

"ஒவ்வொரு பிள்ளைக்கும் விருந்து. எல்லாப்பிள்ளைகளுக்கும் பானம். நான் ஒரு விருத்து வைக்கப் போறன். என்ர விருந்தில பிள்ளைகள் இருப்பீனம்"

"பிள்ளைகளுக்கு இப்ப விருந்து வைக்கப்போறீங்களா?" நான கேட்டேன்.

"ஓம் பிள்ளைகள்... கனக்கப் பிள்ளைகள் சிநேகமான கனக் கப் பிள்ளைகள் இருப்பினம்"

பிறகு அங்கிருந்த தேனீர் கோப்பைகளை எண்ணினான்.

ஏழு கோப்பைகள். என்ர விருந்தில ஏழு பிள்ளையள் இருப்பினம்."

அப்ப... உங்கட விருந்தில ஏழு பிள்ளைகள் இருக்கப்போகினம், அல்லவா?


"ஆறுபேரும் டிப்ஸ்ஸும் " அவன் பதில் சொன்னான்.

"ஓ! வேறு ஆறு பிள்ளைகளும், அவயளோட நீங்களும்" என்றேன்.

"ஓமோ வேற ஆறு பிள்ளை களையும் டிப்ஸையும் சேர்த்தா ஏழுபிள்ளை கள் கிடைப்பினம்"

"ஓமோம்" என்றேன் நான்.

இந்த நாடகத்திலே மற்றப்பிள்ளை களிலே தானும் ஒருவனாக இருக்கும் ஆவலை டிப்ஸ் வெளிப்படுத்திக்கொண்டிருந்தான்



வடிகாலை தடை செய்ய அவன் பயன்படுத்திய போத்தல் வழுக்கிவிட தண்ணீர் களகளத்துக் கொண்டே தொட்டிக்கு வெளியே ஓடியது. டிப்ஸ் சிரித்தான். "ஓ! என்ன வினோதமான சத்தம்" என்றான்.

"நாலு மணியாகிவிட்டது. இர[illegible]டு கொண்டு வருகுது. நேரம் போகுது. கோப்பை களில இருக்கிற நீரை வெளியே ஊற்றிவிட்டு விருந்து. பானங்களால் அவைகளை மீள நிரப்பப்போகிறேன். கோப்பைகளை நிரப்புவதற் கான நேரம் வந்துவிட்டது."

பிளாஸ்ரிக் பாத்திரம் ஒன்றில் நீரை நிரப்பிக்கொண்ட டிப்ஸ் ஒவ்வொரு கோப்பை யிலும் நீரை ஊற்றினான். அப்பிடி ஊற்றும் போதே பாடவும் தொடங்கினான்.

**முதலாம் கோப்பையே**
**இந்தா உனக்கு தண்ணீர்**
**இரண்டாம் கோப்பையே**
**மூன்றாம் கோப்பையே**
**வெளியே சிந்தவேண்டாம்**
**முடிந்தால் விசிறியடியுங்கள்**
**நான்காம் ஐந்தாம்**
**ஆறாம் ஏழாம்**
**கோப்பைகளே விசிறியடியுங்கள்**
**விசிறிஅடியுங்கள் விசிறியடியுங்கள்**
**வடிபலகை எங்கும் தண்ணீர் நிலத்தில்**
**எங்கும் தண்ணீர்.**
**எல்லா இடத்திலும் தண்ணீர்.**
**ஒரே ஒரு பெரும் விசிறலில்**
**எல்லா இடத்திலும்**
**தண்ணீர் சிதறல்.**

மீண்டும் அந்தப் பாத்திரத்தை நிரப்பிக் கொண்ட அவன், அந்த நீரை வடிகால் பலகை யிலும் தரையிலும் மேசையின் மீதும் விசிறி யடித்தான். அவன் சொன்னது போலவே ஒரு பெரும் விசிறல் எங்கும் சிதறிக் கிடந்தது. ஆனால், அதன் ஒவ்வொரு துளியையும் அவன் ரசித்து அனுபவித்தான். அதன் ஒவ்வொரு நிமிடத்தையும் ரசித்து அனுபவித்தான்.

மேலும் இரண்டு பிளாஸ்ரிக் கோப்பை களை கண்டு பிடித்தான். "ஓ! இன்னும் இரண்டு கோப்பைகள்" என உரக்க குரலெழுப்பினான். "அப்ப என்ர விருந்தில ஒன்பது பிள்ளைகள் இருப்பினம். தேநீர் விருந்து வைக்கப்போறன். அவர்கள் எல்லாரையும் தேநீர் விருந்துக்கு கூப்பிடுவன். இந்தக் கோப்பைகள வெறுசாக்கிப் போட்டு தேநீர் விருந்துக்கு ஆயத்தம் செய்யப் போறன்" என்று விட்டு மேலும் நீரை விசிறியடித்தான். " இனி என்ர தேநீர் விருந்தை வைக்கலாம்" என்றவன், என்னை நோக்கி " இன்னும் எத்தனை நிமிசங்கள் இருக்கு?" என்று கேட்டான்.

" இன்னும் எட்டு நிமிசங்கள்"

"அப்ப இது எட்டு நிமிச தேநீர் விருந்தா இருக்கப்போகுது" என்று அறிவிப்பது போல் சொன்னான்.

"எங்கட்ட இருக்கிற நல்ல தேநீர் கோப்பைகள பாவிப்பம்" அவனுடைய குரலின் தொனி மாறிப்போனது. உணர்ச்சிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாகவும் சிறிதளவு சிடுசிடுப்பு தலைகாட்டுவதாகவும் அது ஒலித்தது. அவனுடைய தாயின் குரலில் உள்ள துல்லியமான தொனித் திரிபையும் உணர்வு வெளிப்பாட்டையும் முழு நிறைவாக தன் குரலில் கொண்டுவந்திருந்தான்.

" தேநீர் விருந்து வைக்கிறதெண்டால் நாங்கள் அத முறையாகச் செய்யவேண்டும்" என்றவன், தொடர்ந்து, "ஓம். சாயம் இருக்கும். ஒவ்வொரு கோப்பையிலும் கொஞ்சம் கொஞ்சம் சாயம் இருக்கும். பிறகு அந்தக் கோப்பைகளில் பாலை நிரப்பலாம். இதில சாயம் கூடிப்போச்சு. ஒவ்வொரு கோப்பையிலயும் கொஞ்சம் கொஞ்சம் சாயம் விட்டு, பிறகு பாலை விட்டு நிரப்பத்தான் நான் சொன்னனான்." உங்களுக்கு இன்னும் சுடுதண்ணீர் வேண்டுமானால், பரவாயில்லை. ஆனா இனிச் சாயம் தர ஏலாது இதப்பற்றி ஒண்டும் வாதாட வேண்டாம். ஒவ்வொரு கோப்பையிலும் கரண்டியால் நீரை விட்டான்.

"ஆறாம் கோப்பையில கனக்க சாயம் இருக்குது" தன் குரலில் கடுமை தொனிக்கச் சொன்னான்.

"ஆறாம் கோப்பையில் இருந்து கொஞ்சம் சாயத்தை எடுத்து விட்டு நான் தந்த அறிவுறுத்தல அச்சொட்டாகப் பின்பற்றுங்கள். இந்த சீனி பிள்ளைகளுக்கு காணும். சீனி காணும்! நான் சொல்லுற எல்லாத்தையும் திருப்பிச் சொல்லத் தேவையில்லை. ஒரு தேநீர் விருந்தை வைக்க விரும்பினால் இந்த மேசையில் ஒழுங்காக இருந்து எல்லோருக்கும் தேநீர் பரிமாறுற வரைக்கும் காத்துக்கொண்டி ருக்க வேணும். நீங்க விரும்பினா தேநீரில ஒரு துண்டு கறுவாவையும் போட்டுக்கொள் ளலாம். வாயில சாப்பாட்ட வைச்சுக் கொண்டு கதைக்கக் கூடாது"

(தொடரும்)

---

(16ஆம் பக்கத் . தொடர்ச்சி)

பாலர் பாடசாலைக்கு அருகில் உள்ள பெற்றோர், சமூகத்த வர்கள் மத்தியில் பாலர் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தியதன் மூலம் பாலகர்கள் முன் பள்ளிக்குச் செல்லும் தொகை கடந்த காலங்களைவிட தற்போது அதிகரித்துவருவதைக் காணலாம்.

முன்பள்ளிகளுடன் கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தீர்வுகள்:-**

★ முன் பள்ளிகளை அமைத்தல்.

★பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்.

★பொதுவான பாடவிதானம், முன்பள்ளி ஆசிரியர், வளவழிகாட்டி, முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுனர் கை நூல் தயாரித்தல்

★முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி அளித்தல், முதன்மை ஆசிரியர் பயிற்சி, முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, முன்பள்ளி இணைபபாளர் பயிற்சியை வழங்குதல்.

★முன் பள்ளிகளுக்கு கற்பித்தல் உபகரணங்களை வழங்கல்.

★மாதிரிப் பாடசாலைகளை அமைத்தல்.

★முன்பள்ளிகளைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல்.

★முன்பள்ளிகளை நடாத்தும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புப் பேணுதல்.

★ முன்பள்ளி அபிவிருத் திக்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புப் பெறல்.

★முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட தொகை வேதனமாக வழங்கப்படுதல்.

★ பௌதீக வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

★பெற்றோர் விழிப்புணர்வின் மூலம் பிள்ளைகளை ஒழுங்காக முன்பள்ளிக்குச் செல்லச் செய்தல.

★கற்றல் நிலையங்கள் அமைத்தல்.

★ எல்லாப்பிள்ளைகளும் சமமான கல்வி பெறுவதை உறுதி செய்தல்.

ஆசிரியர்களினதும், பெற் றோர்களினதும், சமூகத்தவரினதும் உதவியுடன் பாலர்களை, நாளைய நாட்டின் தலைவர்களை புதிய பாதைக்கு இட்டுச் செல்லுதல் எம் ஒவ்வொருவரது கடமையுமாகும்.

# எப்படி மறக்க முடியும்...

கவிஞனின் முதற்கவிதை, எழுத்தாளனின் முதற்கதையோ கட்டுரையோ அச்சாகி பத்திரிகையில் வந்து விட்டால் பெண்ணோ, ஆணோ அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உள்ளம் துள்ளும். எத்தனை ஆயிரம் பேர் எமது ஆக்கத்தை வாசிப்பார்கள், ரசிப்பார்கள், விமர்சிப்பார்கள் என்று எண்ணும்போது மனது பூரித்துப் போய்விடும்.

அதேபோல் ஒரு தாய்க்கு முதற் குழந்தை என்றால் ஆகாயத்தில் பறப்பது போன்ற சந்தோஷம்தான். அதுவும் அழகாய் குறைபாடு இல்லாமல் பிறந்துவிட்டால் சொல்லத்தேவையில்லை. அதற்காக இரண்டாவது, மூன்றாவது குழந்தைகளை தாய் வெறுக்கிறாள் என்று அர்த்தமல்ல. எத்தனை குழந்தை என்ன செய்வேன் ஏங்கித் துடித்து அழுது புலம்பி மயங்கி எத்தனை துன்பங்கள். அழாதே ஒன்றும் ஆகாது வந்து விடுவார் என்று தேற்றினார்கள். சாப்பிடவும் மனமில்லை. குழந்தை ஓயாமல் அழுது கொண்டேயிருந்தது. எங்கேயாவது வெளிக்கிட்டு ஓடவேண்டும் போலிருந்தது. எத்தனை ஆயிரம் பேருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கும். இந்தக் கொடுமை எப்போது ஆரம்பித்தது. ஐம்பத்தெட்டாம் ஆண்டு வைகாசி மாதம் முதற்கலவரம்.

இன்று போல் அப்போது செல்லிடத் தொலைபேசி வசதியிருக்கவில்லை. எங்களிடம் சாதாரண தொலைபேசியும் இல்லை. அது மட்டுமல்ல அவர் எங்கே இருக்கிறாரோ எப்படி அறிவது. வரவில்லைப் போலும். என் பெற்றாரும் அவருடைய பெற்றாரும் அவரை தேற்றினார்கள்.போய் குளித்து உடுப்பு மாற்று. வந்து விட்டாய் தானே இனி என்ன என்று அவருடைய தாய் தடவி முத்தமிட்டு அழுது அவரை குளிக்க அனுப்பினார்.

அவர் கொண்டு வந்த அந்த சிறிய பையை பார்த்தேன்



பெற்றாலும் தாய் நேசிப்பாள் வெறுக்கமாட்டாள் என்பதே என் எண்ணம்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நான் முதற்குழந்தையை பெற்றெடுத்தபோது அத்தனை மகிழ்ச்சி அடைந்தேன். அழகான குழந்தை 'சந்தனக்குஞ்சு' என்று என் அம்மா சொல்லுவா எப்போது என் துணை வந்து எங்கள் குழந்தையை பார்க்கப்போகிறார் என்ற தவிப்பு. அறிந்ததும் ஓடோடி வந்து விடுவார் என்று என்னை நானே தேற்றிக்கொண்டேன். கொழும்பில் என் துணை இருந்தார்.

இந்த இனிய நிலையில் சிலர் ஏதேதோ பேசிக்கொண்டார்கள். கொழும்பு தரைமட்டமாம். கொழும்பில் கலவரமாம். வீடுகள் எல்லாம் கொள்ளையடிக்கப்படுகிறதாம். எம்மவர்களை அகதி முகாம்களுக்கு அனுப்புகிறார்களாம். இப்படியான செய்திகள் மளமளவென்று பரவின. நான் அழ ஆரம்பித்து விட்டேன். என் துணைவரும் கொழும்பில்தானே புகைவண்டி சேவையும் இல்லையென்று சொன்னார்கள். தங்கள் சொந்தங்கள் கொழும்பில் இருப்பவர்களைப்பற்றி அறியமுடியாமல் அழுது புலம்பினர். சமையல் சாப்பாடு என்ற எண்ணமே இல்லாமல் ஏங்கித் துடித்தனர். எங்கள் வீட்டிலும் அதே நிலைதான்.

அப்புறம் அகதிகளை கப்பலில் அனுப்பியிருக்கிறார்களாம் வந்து விடுவார்கள் என்ற செய்தி அறிந்தோம். நம் நாட்டிலேயே நாங்கள் அகதிகள். சே என்ன வாழ்க்கை, என்ன கொடுமை என நினைத்தேன் பொருமினேன். சரியாக பதின்மூன்றாவது நாள் வந்து சேர்ந்தார் என் கணவர். மெலிந்து உருமாறிய தோற்றம், முகத்தில் சிறிய மிகச்சிறிய தாடி, அழுக்கான அழுக்கோ அழுக்கு அப்படிப்பட்ட உடை, கையிலே ஒரு சிறு பை வந்தவர் சிரிக்கவேயில்லை. சிரிக்க மறந்துவிட்டாரோ பக்கத்தில் உட்கார்ந்தார். குழந்தையை பார்த்ததும் அழவே ஆரம்பித்துவிட்டார். குழந்தையை தூக்கக்கூட மனம் அதற்குள் ஒரு சாப்பிடும் அலுமினியத்தட்டு, குடிப்பதற்கு ஒரு குவளை பிச்சைக்காரனிடம் இருக்கும் பொருட்கள் அப்போதுதான் எனக்கு தாங்க முடியாத அழுகை வந்தது அழுது என்ன செய்வது.

அவர் குளித்து உடுப்பு மாற்றி சுத்தமாய் வந்து குழந்தையை தூக்கினார். அப்பா வரமாட்டார் என நினைத்தாயா என்று ஏதேதோ குதூகலமாய் கதைத்தார். சிரித்தார். பட்டுக் குஞ்சு, பூக்குஞ்சு, பொன்குஞ்சு இப்படி வாயில் வந்ததையெல் லாம் சொல்லிச் சொல்லி குழந்தையை அணைத்துக் கொண்டார். அப்புறம் என்ன மறதி மகத்தான வரப்பிரசாதம் தான். 'எல்லாம் மறந்து எல்லாரும் சந்தோஷமாய் இருந்தோம்.

ஆனால் மறக்க விடுவோமா என்ற விதமாக மறுபடியும் மறுபடியும் எத்தனை துன்பங்கள். ஒரு நாளா இரண்டு நாளா ஒரு மாதமா இரண்டுமாதமா நீண்ட நாற்பத்தியேழு வருடங்கள் இன்னும் முற்றாக முடிவாக எங்கள் கஷ்டம் தீரவில்லையே.

**சுந்தரி**

## தெருப்பேச்சு



''ஒரு வேலைக்கு அப்பிளிக்கேசன் போட்டனான். நாளைக்கு வரச்சொன்னவை''

''என்ன எடுக்கின மாமே''

''இல்ல... நாளைக்கு இன்டவீயூ''

''தையல் பழகினாய் என்னமாரி...''

''முடிஞ்சுது சேட்பிக்கற் எடுத்திட்டன்''

''கொம்பியூட்டர் கிளாசுக்குப் போகேல்லயோ''

''போன வருசம் போனனான் ''எம்மெஸ் ஒவீஸ்'' முடிச்சு சேட்பிக்கற் எடுத்து வைச்சிருக்கிறன்''

'இப்ப கொஞ்ச நாளைக்கு முதல் மனிதவள மேம்பாட்டுப் பகுதியால வேலைக்கு கேட்டிருந்தவை கொம்பியூட்டர் தெரிஞ்சா முக்கிய தகைமை எண்டு''

'அதுக்கு போனநான் அவை புளியங்குளத்தில வேலையாம்'. நான் மாட்டனெண்டு போட்டன்'.

''ஏன் அங்க நிக்கிறவை பிள்ளையள் இல்லையே''

''இல்ல இல்ல நான் அப்பிடிச் சொல்லேல்ல எனக்குப் பிடிக்கேல்ல.''

''அப்பிடியே உதென்ன பார்சல் கையில''

''உடுப்பு தைக்கக் குடுக்கக் கொண்டுபோறன்''

''ஏனடியப்பா தையல் பழகின நீ உவள உடுப்பையும் நீதைச்சா நாநூறு ஐநூறு ருவா மிஞ்சுமே...''

''அ... மினக்கெட்ட வேலை''

''அப்ப என்ன செய்யப் போறாய்''

''வேலை கிடைச்சா போவன் இல்லாட்டி ரைப்பிங் பழகப்போறன்''

''உனக்கு வேலையில்லப் பிரச்சினை வீட்டுக்கால வெளிக்கிட்டுத் திரியோணும் அவ்வளவுதான்''

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –130



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் –130**

............................................................

............................................................

............................................................

............................................................

பெயர் : ............................................................

முகவரி : ............................................................

............................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –129



பா.செல்வகுமார்,
75 ஜெயபுரம்,
C.S.I அருகாமை.

### பரிசுக்குரிய வரிகள்

*இன்று உன் கல்வியை*
*நெஞ்சறையில் காப்பாற்றுகிறாய்*
*நாளை கல்வி உன்னை*
*புகழறையில் காப்பாற்றும்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*கொட்டும் மழையும் கொளுத்தும் வெயிலும்*
*எனக்கொரு தடையல்ல நாளைய*
*உதயப் பொழுதை என[illegible]க்க*
*நடப்பேன் அவற்றைப் ப[illegible]பாக்கி.*

இ.ராஜன்,
கிளிநொச்சி.

*"வறுமையின் வாழ்வின் முனையில்*
*வாழ்வதற்காய் நீயே போராடு*
*இயற்கை (இனவாதம்) உனை நனைத்தாலும்*
*இடைவிடா தொடர் உன் கல்வியை.*

எம்.சாமந்தி,
புதுக்குடியிருப்பு.

*குடைவாங்க பணமற்று*
*உடையதனை நூலுக்கு உறையாக்கி*
*உளம் சோராது- விடுதலைக்கு*
*கல்விதனை வலுச்சேர்த்திடு.*

எஸ்.ஆர்.செல்வி,
மாங்குளம்.

*குடைபிடித்து செருப்புமிட்டு கூடவந்த தங்கையில்லை*
*அடை மழையில் நனையாதே என்று சொல்ல அன்னையில்லை*
*படகோடு சென்ற தந்தை பாதகரின் கொலை வெறியில்*
*துடைநெஞ்சே கண்ணீரை தூரமில்லை விடியலுக்கு.*

திருமதி. ம.சிவதர்சினி,
முல்லைத்தீவு.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு







யாழ்ப்பாணத்தில்

ஈழநாதத்தின்
கிளைப்பணிமனை

உங்கள் தொடர்புகளுக்கு
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7917










இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 2 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது